வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=


# ஈழநாடு
Eelanadu
வார மலர்




Email : news@eelanadu.lk | மலர் : 05 | 29.12.2024 ஞாயிற்றுக்கிழமை | இதழ் : 363 | பக்கங்கள் : 16

# புலிகள் தோற்கடிக்கப்படும்வரை எமக்கு ஆதரவளித்தது இந்தியா!

## புதுடில்லியில் தெரிவித்தார் ரணில்



புதுடில்லி, டிசெம்பர் 29

"சமாதானப் பேச்சில் தன்னால் வெற்றி பெற முடியாது என்பது பிரபாகரனுக்குத் தெரியும். எனவே, அமைதிப் பேச்சை அவர் புறக்கணிக்கத் தொடங்கினார். இந்த முக்கியமான கட்டத்தில், இலங்கை அரசு முன்வைத்த முன்மொழிவுகளுக்கு விடுதலைப் புலிகளின் பதிலை வலியுறுத்தியும், பேச்சுக்களை முன்கூட்டியே மீண்டும் தொடங்குவதற்கும் இந்தியா எங்களுக்கு ஆதரவளித்தது. அன்றிலிருந்து 2009ஆம் ஆண்டு விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்படும் வரை இந்தியா எமக்கு ஆதரவளித்தது."

- இவ்வாறு தெரிவித்துள்ளார் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

புதுடில்லியில் நடைபெற்ற அடல் பிஹாரி வாஜ்பாய் நினைவுச் சொற்பொழிவில் உரையாற்றும் போதே முன்னாள் ஜனாதிபதி ரணில் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தாவது-

வாஜ்பாயும் நானும் அதிகாரத்தில் இருக்கும் போது பயங்கரவாதத்துக்கு எதிரான போர் உச்சத்தில் இருந்தது.

நாங்கள் வெளியிட்ட இரண்டு அறிக்கைகள் அனைத்து வகையான பயங்கரவாதத்தையும் உலகளவில் எதிர்க்க வேண்டியதன் அவசியத்தை

15



## தமிழ் அரசியல் கைதிகள் விடுதலையை வலியுறுத்தி வவுனியாவில் கையெழுத்து

வவுனியா, டிசெ. 29

அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி வவுனியாவில் கையெழுத்துப் போராட்டம் நேற்று இடம்பெற்றது.


போராளிகள் நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் வவுனியா தபால் நிலையத்துக்கு முன்பாக இப்போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு நீண்ட காலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளையும் புலிகளை மீள் உருவாக்கம் செய்ய முற்பட்டன என்ற குற்றச்சாட்டில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளையும் புதிய அரசாங்கம் விடுவிக்க வேண்டும் என இதன்போது வலியுறுத்தப்பட்டது.

15

# அரசியல் குழுவின் தலைவர் மாவை! பதில் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம்!!

## தமிழரசுக் கட்சி மத்திய குழு நேற்று தீர்மானம்



குமார கோகுலன், பா.விபூஷிதன்

வவுனியா, டிசெ. 29

தமிழரசுக் கட்சியின் அரசியல் குழுத் தலைவராக மாவை சேனாதிராசாவும் எஞ்சிய காலத்துக்கான பதில் தலைவராக சீ.வீ.கே.சிவஞானமும் செயற்படுவார்கள் என தமிழரசுக் கட்சியின் மத்திய குழு நேற்று தீர்மானித்துள்ளதாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் கட்சியின் பேச்சாளருமான எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டம் வவுனியா இரண்டாம் குறுக்குத் தெருவில் அமைந்துள்ள

15

## தமிழரசு ஊடகப் பேச்சாளராக தொடர்ந்தும் எம்.ஏ.சுமந்திரன்!

- குமார கோகுலன் -

வவுனியா, டிசெ. 29

தமிழரசுக் கட்சியின் ஊடகப் பேச்சாளராக தொடர்ந்தும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் செயற்படுவார் என தமிழரசுக் கட்சியின் பதில் தலைவராக நேற்று நியமிக்கப்பட்ட சீ.வீ.கே. சிவஞானம் தெரிவித்தார்.

கட்சியின் மத்திய குழு கூட்டம் முடிவடைந்த பின்னர் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே

15

## யாழில் உணவு அருந்திக்கொண்டு இருந்தவர் திடீரென உயிரிழந்தார்

- பு.கஜிந்தன் -

யாழ்ப்பாணம், டிசெ.29

யாழ்ப்பாணம் - உரும்பிராய் பகுதியில் உணவு அருந்திக்கொண்டு இருந்தவர் சுகவீனமடைந்த நிலையில் திடீரென நேற்று உயிரிழந்துள்ளார்.

உரும்பிராய் வடக்கு, உரும்பிராய் பகுதியைச் சேர்ந்த காசிப்பிள்ளை குவேந்திரன் (வயது 62) என்ற நான்கு பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு

15

# மத்திய குழுவே தமிழ்த் தேசியத்தை அழிக்கும் பணிகளைச் செய்யாதே!

## நீதிமன்ற வழக்குகளை மீளப்பெறு தமிழரசுக்கட்சி கூட்ட வாயில் பதாகை

- குமார கோகுலன் -

வவுனியா, டிசெ. 29

"மத்திய குழுவின் பலவீனமான தீர்மானங்களால் தமிழ்த் தேசியத்தை அழிக்கும் பணிகளைச் செய்யாதே!" உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளுடன் கூடிய பதாகை ஒன்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டம் இடம்பெறும் மண்டபத்துக்கு

15



## நேபாளம் சென்றார் ரணில்

புதுடில்லி, டிசெ. 29

இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று இந்தியாவில் இருந்து நேபாளத்துக்கு பயணமானார்.

அவர் தனது தனிப்பட்ட பயணமாக நேபாளம் வருகிறார் என்று அந்த நாட்டின் வெளியுறவு அமைச்சின் பேச்சாளர் கிருஷ்ண பிரசாத் தகால் தெரிவித்தார்.

இந்தநிலையில், ஒரு நாட்டின் முன்னாள் ஜனாதிபதியாக அவருக்கு தேவையான நெறிமுறை மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகள் வழங்கப்படும் என்று அவர் குறிப்பிட்டார்.

15

## முழு அரச மரியாதையுடன் மன்மோகன் உடல் தகனம்!



புதுடில்லி, டிசெ. 29

இந்தியாவின் முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங்கின் உடல் டில்லி நிகம்போத் காட் பகுதியில் முழு அரசு மரியாதையுடன் சீக்கிய முறைப்படி நேற்று தகனம் செய்யப்பட்டது.

இறுதிச் சடங்கில் குடியரசுத் தலைவர்

15

## சிவமோகன் வெளிநடப்பு

- குமார கோகுலன் -

வவுனியா, டிசெ. 29

தலைவரை நீக்கும் அதிகாரம் மத்திய குழுவில் இல்லை. தலைவர் தலைவராக இருப்பார் என தமிழரசுக் கட்சியின்

15

## தமிழரசுக் கட்சியில் இருந்து சிவமோகன் இடைநிறுத்தம்

- குமார கோகுலன் -

வவுனியா, டிசெ. 29

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன் தமிழரசுக் கட்சியில் இருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளார்.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகனை கட்சியில் இருந்து இடைநிறுத்த

15

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மக்களின் பெருமளவு நிலங்களை அபகரித்துள்ளது வனவள திணைக்களம்

வவுனியா, டிசெ.29

**2009 இற்கு முன்னர் தமிழீழ விடுதலைப் புலிகளால் பாதுகாக்கப்பட்ட தமிழ் மக்களின் பெருமளவான விவசாய மற்றும் குடியிருப்பு நிலங்களை தற்போது வனவளத் திணைக்களம் அபகரித்துள்ளது என்று பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் குற்றஞ்சாட்டியுள்ளார்.**

இவ்வாறு வனவளத் திணைக்களத்தால் அடாவடித்தனமாக அபகரிக்கப்பட்டுள்ள காணிகள் உடனடியாக விடுவிக்கப்பட வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

வவுனியா வடக்கு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

வன்னிப் பகுதி மக்கள் கடந்த காலங்களில் இடப்பெயர்வைச் சந்தித்து மீள்குடியேறியது அனைவரும் அறிந்ததே. சில இடங்களில் குறிப்பிட்டளவு காலங்களுக்குள்ளும், சில பகுதிகளில் நீண்டகாலங்களுக்குப் பின்னரும் மக்கள் மீளக்குடியமர்த்தப்பட்டனர்.

இந்த நிலையில் மக்கள் இடப்பெயர்வுக்கு முன்பதாக பயிர்ச் செய்கையில் ஈடுபட்ட காணிகள் தற்போது பற்றைக் காடுகளாகக் காட்சியளிக்கின்றன.

தற்போது பற்றைக் காடுகளாகக் காட்சியளிக்கும் எமது மக்களுக்குரிய காணிகளுக்கு, எவ்வித முன்னறிவிப்புகளுமின்றி வனவளத் திணைக்களத்தினர் எல்லைக்கல்லிடுகின்ற அடாவடித்தனமான செயல்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர் என்றும் அவர் சுட்டிக்காட்டினார். (எ-10)



# தீவகப் பகுதி நிலைமைகளை ஆராய்ந்த என்.பி.பி.எம்.பிக்கள்

யாழ்ப்பாணம், டிசெ.29

தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்களான சிறீ பவானந்தராஜா, ஜெயானந்தமூர்த்தி றஜீவன் ஆகியோர் தீவகப் பகுதிகளுக்கு சென்று நிலைமைகளை ஆராய்ந்தனர்.

அனலைதீவு, மண்டைதீவு மற்றும் வேலணை ஆகிய தீவுகளுக்கு சென்ற எம்.பிக்கள், அங்கு அரச அதிகாரிகள் மற்றும் மக்களோடு கலந்துரையாடி குறைபாடுகளை கேட்டறிந்தனர்.

இதேவேளை, அனலைதீவு மக்களுக்கு ஒரு தொகை உலர் உணவுப் பொருட்களை வழங்கினர். பின்னர் அனலைதீவு மின்னுற்பத்தி நிலைய மின் பிறப்பாக்கிகளை ஆராய்ந்ததோடு அனலைதீவு மருத்துவமனைக்கும் சென்றனர்.

அதனைத் தொடர்ந்து வேலணை மற்றும் மண்டைதீவுக்கு சென்ற பாராளுமன்ற உறுப்பினர்கள், மருத்துவமனைகளின் நிலைமைகளை ஆராய்ந்தனர். (எ-05)

# ஆசிரியர் சங்க பிரதிநிதிகள் வடக்கு ஆளுநருடன் சந்திப்பு

## கல்விப்புலத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய இடமாற்றங்கள் தொடர்பில் விரிவாக ஆராய்வு



யாழ்ப்பாணம்,டிசெ.29

வடக்கு மாகாணத்தில் கல்விப்புலத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய இடமாற்றங்கள் உட்பட பல்வேறு விடயங்கள் தொடர்பில் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பிரதிநிதிகள், வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகனை ஆளுநர் செயலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினர்.

2017ஆம் ஆண்டு, வடக்கு மாகாணத்தில் யாழ். மாவட்டம் தவிர்ந்த ஏனைய 4 மாவட்டங்களுக்கும் முதல் நியமனம் கிடைத்த ஆசிரியர்கள், யாழ். மாவட்டத்துக்கு இடமாற்றத்துக்கு விண்ணப்பித்துள்ள நிலையில் அந்த இடமாற்றங்களை நடைமுறைப்படுத்துவதற்கான விடயம் தொடர்பில் இந்தக் கலந்துரையாடலில் கூடுதல் கவனம் செலுத்தப்பட்டது.

மேலும் கடந்த காலங்களில் இடம்பெற்ற விசாரணைகளின் முன்னேற்றங்கள் தொடர்பாகவும் அதில் தலையீடுகள் இருக்கின்றன எனவும் ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகள் ஆளுநருக்கு சுட்டிக்காட்டினர்.

பாடசாலைகளில் பரீட்சைக்கு மாணவர்களிடமிருந்து பணம் அறவிடப்படுவது தொடர்பில் கேள்வி எழுப்பிய ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகள், வேறு சில மாகாணங்கள் பரீட்சைக்கு நிதி ஒதுக்குகின்றமையை சுட்டிக்காட்டி அந்த நடைமுறையை பின்பற்றுமாறு கோரிக்கை முன்வைத்தனர்.

அதைச் சாதகமாகப் பரிசீலித்து நடைமுறைப்படுத்துவது தொடர்பில் ஆராயுமாறு கல்வி அமைச்சின் செயலருக்கு ஆளுநர் பணித்தார்.

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் உள்ளிட்ட ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகள், வடக்கு கல்விப்புலம் சார்ந்த அதிகாரிகளும் இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்றனர். (எ-02-05)

# அநாதரவாக காணப்படும் தனியார் பேருந்து நிலையம்

## யாழில் அமைச்சர் சந்திரசேகர் கவலை

யாழ்ப்பாணம், டிசெ. 29

அதிக செலவில் கட்டப்பட்ட யாழ்ப்பாணம் தனியார் பேருந்து நிலையம் அநாதரவாக காணப்படுகின்றது என கடற்றொழில் அமைச்சர் இ. சந்திரசேகர் கவலை வெளியிட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் தனியார் போக்குவரத்து துறையினரை சந்தித்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

தனியார் போக்குவரத்து உரிமையாளர் சங்கத்தினர் பல்வேறு பிரச்னைகளை எமக்கு எடுத்துக் கூறியிருந்தனர். அதில் முக்கியமானது யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலைய போக்குவரத்தாகும். அந்த போக்குவரத்து பிரச்னை என்பது, இலங்கை போக்குவரத்து சபைக்கும் தனியார் போக்குவரத்து துறைக்கும் இடையே முரண்பாடாக மாறிவருகின்றது.

யாழ்ப்பாணத்தில் மிகவும் அதிக செலவில் ஒரு பேருந்து நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. அது இன்றைக்கு ஆளில்லாத அநாதரவாக்கப்பட்ட இடமாக உள்ளது. ஆகையால் அதனை மாற்றியமைக்க வேண்டிய தேவை எல்லோருக்கும் உள்ளது.

அந்த தேவையை முதன்மைப்படுத்தியதாகவே யாழ்ப்பாணம் மாவட்ட தனியார் போக்குவரத்து துறையினரின் கோரிக்கை அமைந்துள்ளது. அது அவர்களின் கோரிக்கை மாத்திரம் அல்ல, அதனை அனைவருடைய கோரிக்கையாகவே நாங்கள் பார்க்கிறோம் - என்றார். (எ-05)

# தீர்வு கோரி அமைச்சரை தேடிச்சென்ற மீனவர்கள்

வடமராட்சி,டிசெ.29

பருத்தித்துறை முனை கடற்றொழிலாளர்கள் கூட்டுறவுச் சங்கத்துக்குட்பட்ட மீனவர்கள், யாழ். மாவட்ட அரசாங்க அதிபர், ஆளுநர் மற்றும் கடற்றொழில் அமைச்சரை சந்தித்து மகஜர்களை கையளித்து தாம் எதிர்நோக்கும் பிரச்னை தொடர்பில் கலந்துரையாடினர்.

பருத்தித்துறை முனை கடற்றொழிலாளர்களின் மீன்பிடி வாடிகளை அகற்றுமாறும் தவறும் பட்சத்தில் இரு வாரங்களின் பின் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் கரையோரம் பேணல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இலங்கை பூராகவும் கடற்கரையோரங்களில் மீனவர்களின் மீன்பிடிவாடிகள் அமைக்கப்பட்டுள்ளன, இதன் மூலமே மீனவர்கள் தமது வாழ்வாதாரத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

இது இவ்வாறிருக்க பருத்தித்துறை முனை கடற்றொழிலாளர்களின் கரையோர வாடிகளை மாத்திரம் அகற்றுமாறு கரையோரம் பேணல் திணைக்களம் அறிவித்துள்ளது ஏன்?

இதனால், எமது வாழ்வாதாரம் முற்றிலும் பாதிப்படையும் என மீனவர்கள் அமைச்சரிடமும் மாவட்ட அரச அதிபரிடமும் முறையிட்டுள்ளனர்.

இந்த நடவடிக்கையை உடன் நிறுத்துமாறு அமைச்சர் இ. சந்திரசேகரன், குறித்த திணைக்கள அதிகாரிக்கு தெரியப்படுத்தியுள்ளதுடன் அடுத்து வரும் அமைச்சரவைக் கூட்டத்தின் போது இதற்கான தீர்மானம் எடுக்கப்படும் எனவும் கூறினார். (எ-02)

# ஆன்மீக மலர் வெளியீடும் உதவி வழங்கலும்





வடமராட்சி, டிசெ.29

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் மாதாந்தம் வெளியீடு செய்யப்படும் ஆன்மீக சஞ்சிகையான ஞானச்சுடர் 324 வெளியீடு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டு பேரவை உறுப்பினர் சிவநாதன் தலைமையில் ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் முன்னிலையில் நடைபெற்றது.

வெளியீட்டுரையை ஓய்வுபெற்ற கிராம உத்தியோகத்தர் சோ. பரமநாதன் நிகழ்த்தினார். தொடர்ந்து மதிப்பீட்டுரையை ஓய்வுபெற்ற பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஆறு. சிறீஸ்கந்தமூர்த்தி ஆற்றினார்.

கல்லுண்டாய் புதிய குடியிருப்பை சேர்ந்த,

யாழ். கொட்டடி நமசிவாயம் வித்தியாலயத்தில் தரம் - 8 இல் கல்வி கற்கும் மாணவன், யாழ். மத்திய கல்லூரியில் தரம் 11 இல் கல்வி கற்கும் மாணவன், யாழ். சென் றோக்கா வித்தியாலயத்தில் தரம் - 8 இல் கல்வி கற்கும் மாணவன் ஆகியோருக்கு துவிச்சக்கரவண்டிகள் வழங்கப்பட்டன. இந்த நிகழ்வில் பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர்.

இதேவேளை, புற்றுநோயால் பாதிக்கப்பட்ட வவுனியாவை சேர்ந்த பெண் ஒருவருக்கு மருந்து செலவுக்காக 40, 000 ரூபாய் நிதி வழங்கப்பட்டது. (எ-02)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சாவகச்சேரி நகர வர்த்தகர்கள் இளங்குமரன் எம். பியுடன் சந்திப்பு

யாழ்ப்பாணம், டிசெ.29

யாழ்ப்பாணம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் க. இளங்குமரனுக்கும் சாவகச்சேரி நகர வர்த்தகர்கள் மற்றும் சிவில் சமூக செயல்பாட்டாளர்களுக்கும் இடையிலான சந்திப்பு சாவகச்சேரியில் உள்ள பாராளுமன்ற உறுப்பினரின் அலுவலகத்தில் நடைபெற்றது.

சாவகச்சேரி நகர சபையால் புதிதாக அமைக்கப்பட்ட கடைத் தொகுதிகளை குத்தகைக்கு வழங்குவதற்காக பகிரங்க கேள்வி கோரப்பட்டிருந்தது.

குறித்த கேள்வி கோரலினால் உள்ளூர் வர்த்தகர்கள் மற்றும் ஏற்கனவே வியாபார நிலையங்கள் வைத்திருந்து யுத்தத்தால் வியாபார நிலையங்கள் முற்றாக அழிவடைந்த வர்த்தகர்ளும் தங்களுக்கும் வர்த்தக நிலையங்களை வழங்க வேண்டும் என்று கோரியும் சாவகச்சேரி நகர சபை முன்றலில் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இந்த நிலையிலேயே வர்த்தகர்களின் பிரச்னை தொடர்பில் இளங்குமரன் எம். பியுடன் கலந்துரையாடல் நடைபெற்றது.


வர்த்தகர்கள், பொதுமக்களின் கோரிக்கைகளை மாவட்ட ஒருங்கிணைப்பு குழுத் தலைவர், அமைச்சர் சந்திரசேகரன் ஊடாக உரிய திணைக்களங்களுக்கு அறிவுறுத்தி, வர்த்தகர்கள் மற்றும் பொதுமக்கள் நலன் சார்ந்த முறையில் வேலை திட்டங்கள் முன்னெடுக்கப்படும் என்ற உறுதி மொழியை பாராளுமன்ற உறுப்பினர் வழங்கினார்.

(எ-05)

# 2025 ஒக்ரோபருக்குள் திட்டங்கள் அனைத்தும் முடிவுறுத்தப்பட வேண்டும்

**யாழ்ப்பாணம்,டிசெ.29**

**2025ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்படும் திட்டங்கள் ஒக்ரோபர் மாதத்துக்குள் முடிவுறுத்தப்பட வேண்டும் என வடக்கு மாகாண ஆளு நர் நா. வேதநாயகன் தெரிவித்தார்.**



தேசிய நிதி ஆணைக்குழுவால் வாக்குப்பணக் கணக்கு 2025ஆம் ஆண்டின் ஜனவரி முதல் ஏப்ரல் வரையான 4 மாதங்களுக்குமான நடைமுறை, மூலதன செலவின ஒதுக்கீட்டு விவரம் வடக்கு மாகாணத்துக்குரியது அறிவிக்கப்பட்டுள்ளது. அதை உத்தியோகபூர்வமாக வெளியிடும் நிகழ்வு வடக்கு மாகாண பேரவைச் செயலக மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போது, 2025 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் திட்டங்களை தயாரிக்கும் பணிகளை நிறைவுறுத்துமாறு பிரதிப் பிரதம செயலர் (நிதி) எஸ். குகதாசன் அறிவுறுத்தினார்.


இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகப் பங்கேற்ற ஆளுநர், அடுத்த ஆண்டுக்குரிய மிகப் பெரிய திட்டங்களை விரைந்து ஆரம்பிக்குமாறு கேட்டுக்கொண்டார்.

மேலும், ஒப்பந்தகாரர்கள் தொடர்பான பட்டியலை கைவசம் வைத்திருக்க வேண்டும் எனவும், கடந்த காலங்களில் ஒப்பந்தகாரர்களின் செயல்பாடுகளின் அடிப்படையில் அவர்களில் கறுப்புப் பட்டியலில் உள்ளடக்க வேண்டியவர்கள் தொடர்பான விவரங்களையும் தயாரித்து வைத்திருக்க வேண்டும் என்றும் ஆளுநர் குறிப்பிட்டார்.

ஒவ்வொரு மாதமும் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம் நடத்தப்பட வேண்டும் என்றும், நிதி மற்றும் பௌதீக முன்னேற்ற அறிக்கைகள் மாதாந்தம் சமர்ப்பிக்கப்பட வேண்டும் எனவும் ஆளுநர் வலியுறுத்தினார்.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாண பிரதம செயலர் இ. இளங்கோவன் உள்ளிட்ட வடக்கு மாகாண அமைச்சுகளின் செயலாளர்கள், பணிப்பாளர்கள், மாகாண திறைசேரி பணியாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

(எ-05)



வரலாற்று சிறப்புமிக்க யாழ்ப்பாணம், கோண்டாவில் ஈழத்து சபரிமலை சபரீச ஐயப்பன் தேவஸ்தானத்தின் வருடாந்த மகர ஜோதி மண்டலத்தின் கறுப்பண்ணசாமி பூஜை பக்திபூர்வமாக நடைபெற்றது.

# 60:40 நேர அட்டவணை இன்னும் நடைமுறைப்படுத்தப்படவில்லை

### தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம் விசனம்

யாழ்ப்பாணம், டிசெ.29

தனியார் போக்குவரத்து துறைக்கும் இலங்கை போக்குவரத்து சபைக்கும் இடையே 60: 40 என்ற நேர அட்டவணைக்காக 82 கூட்டங்கள் நடத்தப்பட்டும் அது இன்று வரை நடைமுறைப்படுத்தப்படவில்லை என வன்னி மாவட்ட தனியார் பேருந்து உரிமையாளர் சங்க தலைவர் எஸ். ரி. கே. இராஜேஸ்வரன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண தனியார் போக்குவரத்து துறைக்கும் அமைச்சர் இ. சந்திரசேகரனுக்கும் இடையிலான கலந்துரையாடல் யாழ்ப்பாணம் பிராந்திய கூட்டி



ணைக்கப்பட்ட பஸ் கம்பனிகளின் இணையத்தின் அலுவலகத்தில் நடைபெற்றது. இதன் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

வடமாகாண போக்குவரத்து அமைச்சராக டெனீஸ்வரன் இருந்த காலத்தில் இவ்வாறான 82 கூட்டங்கள் இரவு பகல் என ஏற்பாடு செய்யப்பட்டன.

அதற்கு பின்னர் அந்த அமைச்சரால் வீதி பயணிகள் போக்குவரத்து அதிகார சபை உருவாக்கப்பட்டது. அதற்கு பின்னர் அந்த அதிகார சபைக்கு எத்தனையோ பொது முகாமையாளர்கள் நியமனம் பெற்று வந்தார்கள். இருந்தாலும் அவர்கள் நடத்தும் கூட்டத்தில் எடுக்கப்படும் தீர்மானங்கள் முற்று முழுதாக நிறைவேற்றப்படவில்லை.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் காரியாலயத்திலும் எத்தனையோ கூட்டங்கள் நடைபெற்றன. அதிலும் எந்த விதமான முன்னேற்றங்களும் இல்லை - என்றார்.

(எ-05)

# இராணுவ முகாம்களுக்கு அனுமதி மேய்ச்சல் தரைக்கு அனுமதியில்லை

### வவுனியா மக்கள் கடும் விசனம்

வவுனியா, டிசெ.29

வவுனியாவில் பெரும் காடுகளில் ஏக்கர் கணக்கான காணிகளில் இராணுவம் முகாம் அமைத்துள்ளது. ஆனால், கால்நடைகளுக்கான மேய்ச்சல்தரை அமைப்பதில் மாத்திரம் திணைக்களங்கள் அக்கறையில்லாமல் செயல்படுவதாக வவுனியா ஒருங்கிணைப்பு குழுவில் சுட்டிக்காட்டப்பட்டது.

வவுனியா பிரதேச ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்திலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது வவுனியாவில் மேய்ச்சல் தரை இல்லாமல் கால்நடை வளர்ப்பில் ஈடுபடுவோர் பல்வேறு இடர்பாடுகளை எதிர்கொள்வதாக மக்கள் கவலை வெளியிட்டனர். மழைகாலங்களில் நிலைமை மேலும் மோசமடைவதுடன் பால் உற்பத்தியும் வீழ்ச்சியடையும் நிலை காணப்படுகின்றது

இராணுவம் பெரும் காடுகளில் பல ஏக்கர்கணக்கான காணிகளை பிடித்து முகாம் அமைத்துள்ளது. ஆனால், நாட்டின் பொருளாதாரத்துக்கு பங்களிக்கும் கால்நடைகளுக்கு மேய்ச்சல் தரை வழங்குவதில் அதிகாரிகள் பின்னடிப்பதாக பொதுமக்கள் குற்றம் சுமத்தினர்.

குளத்தின் அலைகரைப் பகுதிகளில் மேய்ச்சல் தரை அமைப்பது தொடர்பில் ஆராயுமாறும் அரச காணிகளை அடாத்தாக பிடித்து வைத்திருக்கும் நபர்களிடம் இருந்து அந்தக் காணிகளை பறித்து மேய்ச்சல் தரை அமைப்பது தொடர்பாக பரிசீலிக்க முடியும் என பாராளுமன்ற உறுப்பினர் செ. திலகநாதன் இதன்போது தெரிவித்திருந்தார். (எ-10)

# தேசிய நடனப் போட்டியில் வெற்றிபெற்ற வவுனியா மாணவர்களுக்கு கௌரவிப்பு





வவுனியா, டிசெ.29

தேசிய நடனப் போட்டியில் வெற்றியீட்டிய வவுனியா நிருத்திய நிகேதன நுண்கலை கல்லூரி மாணவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு வவுனியா கந்தசாமி கோவில் கலாசார மண் டபத்தில் நடைபெற்றது.இதில் பிரதம விருந்தினராக வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் சரத் சந்திர கலந்து கொண்டார்.

அண்மையில் நடைபெற்ற தேசிய நடனப்போட்டியில் வவுனியா நிருத்திய நிகேதன நுண்கலை கல்லூரி சார்பில் 15 நிகழ்வுகளில் மாணவர்கள் பங்கேற்று 12 நிகழ்வுகளில் வெற்றியீட்டியிருந்தனர். (எ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலிஸ் நிலையத்தில் வைத்து அதிகாரியை தாக்கிய கும்பல்!

## பெரிய நீலாவணையில் பரபரப்பு சம்பவம் பெண் உட்பட 7 பேர் இதுவரை கைதாகினர்

பெரிய நீலாவணை, டிசெ.29

**விசாரணை மேற்கொண்டிருந்த பொலிஸ் அதிகாரியை குழுவாக இணைந்து தாக்கிய சந்தேக நபர்களை பெரிய நீலாவணை பொலிஸார் கைது செய்துள்ளனர்.**

அம்பாறை மாவட்டம் பெரிய நீலாவணை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பாண்டிருப்பு திருவள்ளுவர் வீதியில் இடம்பெற்ற இரு சாரார் முறுகல் நிலை தொடர்பில் நேற்று முன்தினம் விசாரணை மேற்கொண்டிருந்த பொலிஸ் அதிகாரி மீதே குறித்த தாக்குதல் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இந்தத் தாக்குதலினால் நிலைகுலைந்த குறித்த பொலிஸ் அதிகாரி காயமடைந்த நிலையில் மருதமுனை பிரதேச மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார்.

பெரிய நீலாவணை பொலிஸ் நிலையத்தின் குற்றத் தடுப்புப் பிரிவில் கடந்த வியாழக்கிழமை முறைப்பாடு ஒன்று வழங்கப்பட்டிருந்தது. வழமை போன்று அம் முறைப்பாட்டை ஆராய இரு தரப்பினரை வரவழைத்த பொலிஸ் அதிகாரி விசாரணை விடயங்களை ஆராய்ந்து கொண்டிருந்தார்.

குறித்த விசாரணை பொலிஸ் அதிகாரி முன்னிலையில் இடம்பெற்றுக் கொண்டிருந்த போது முறைப் பாட்டாளர் பக்கமாக நின்ற பெண், திடீரென தனது பாதணியை கழற்றி மறுமுனையில் இருந்த எதிராளியை நோக்கி பலமுறை தாக்கியுள்ளார். இதன்போது, உடனடியாக செயல்பட்ட அப் பொலிஸ் அதிகாரி குறித்த தாக்குதலை நிறுத்துமாறு கோரி சமரசப்படுத்த முயற்சித்துள்ளார்.


இந்த நிலையில் பொலிஸ் அதிகாரியை திடீரென குழுவாக இணைந்து பொலிஸ் நிலையத்தில் வைத்து விசாரணைக்காக அழைக்கப்பட்டவர்கள் தாக்கியுள்ளனர்.

இதனை சற்றும் எதிர்பார்க்காத குறித்த பொலிஸ் அதிகாரி காயமடைந்த நிலையில் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

மேலும், இந்தத் தாக்குதலில் ஈடுபட்டதாக சந்தேகத்தின் அடிப்படையில் பெண் உட்பட சந்தேக நபர்கள் 7 பேர் இதுவரை கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் கடமைக்கு இடையூறு செய்தமை, சமாதானத்துக்கு குந்தகம் விளைவித்தமை, வன்முறையைத் தூண்டியமை உள்ளிட்ட குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் எஞ்சிய சந்தேக நபர்களை கைது செய்ய பெரிய நீலாவணை பொலிஸார் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இத்தாக்குதல் சம்பவம் தொடர்பிலான முழு விசாரணைகளை கல்முனை பிராந்திய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ரீ. எச். டி .எம். எல். புத்திக மேற்கொண்டுள்ளார்.(எ)



# சர்வஜன அதிகாரத்தில் இணைந்த முன்னாள் முதலமைச்சர் ரஞ்சித்

கொழும்பு, டிசெ.29

வடமத்திய மாகாண முன்னாள் முதலமைச்சர் எஸ். எம். ரஞ்சித் உள்ளிட்ட பல பிரதேசங்களைச் சேர்ந்த பிரதேச அரசியல்வாதிகள் பலர் சர்வஜன அதிகாரம் கட்சியில் இணைந்தனர்.

அந்தக் கட்சியின் அலுவலக வளாகத்தில் கட்சியின் தலைவர், பாராளுமன்ற உறுப்பினர் திலித் ஜயவீர முன்னிலையில் இவர்கள் கட்சியில் இணைந்து கொண்டனர்.

முன்னாள் முதலமைச்சர் எஸ். எம். ரஞ்சித் மற்றும் வடமத்திய மாகாண சபையை பிரதிநிதித்துவப்படுத்திய சபை உறுப்பினர்கள் மற்றும் முன்னாள் அமைச்சர் விமலவீர திஸநாயக்கவின் மகள் அஞ்சன திஸநாயக்க மற்றும் அம்பாறை மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்திய பிரதேச அரசியல் பிரதிநிதிகளும் சர்வஜன அதிகாரத்தில் உறுப்புரிமையை பெற்றுக்கொண்டனர். (எ)

# 28 துப்பாக்கிச் சூட்டுச்சம்பவங்கள் வெறும் மூன்று மாதங்களில் பதிவு

கொழும்பு, டிசெ. 29

கடந்த மூன்று மாதங்களில் மட்டும் 28 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் நிகழ்ந்துள்ள நிலையில் அவற்றில் 16 சம்பவங்கள் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் குழுக்களால் நடத்தப்பட்டவை என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் புத்திக மனதுங்க தெரிவித்தார்.

ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக்குழுக்களால் நடத்தப்பட்ட தாக்குதல்களில் 10 சம்பவங்கள் குறித்து 57 சந்தேக நபர்களை கைது செய்ததோடு மூன்று துப்பாக்கிகளை மீட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பாதாள உலகக் குழுக்கள் ஒன்றுக்கொன்று அடிக்கடி மோதிக் கொள்கின்றன. அந்த மோதல்கள் தொடர்கின்றமை கவலைக்குரிய விடயமாகும்.

2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் நடந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களை ஒப்பிடும் போது, 2024இல் சிறியளவில் குறைவு காணப்படுகிறது.

2023ஆம் ஆண்டில் 120 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதோடு அவற்றில் 65 சம்பவங்கள் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக்குழுக்களால் நடத்தப்பட்டுள்ளன. 2024 ஆம் ஆண்டில், அந்த எண்ணிக்கை 99ஆக உள்ளது, இந்தச் சம்பவங்களில் 55 குற்றக் கும்பல்கள் ஈடுபட்டுள்ளன - என்றார். (எ)

# 1,387 ஏக்கர் நெற்காணிகளுக்கு வவுனியா மாவட்டத்தில் இழப்பீடு

வவுனியா, டிசெ. 29

வவுனியாவில் அண்மையில் ஏற்பட்ட மழையினால் வெள்ளப்பெருக்கில் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் கமநல அபிவிருத்தி நிலையங்களின் கீழ் செய்கை பண்ணப்பட்ட 3529.25 ஏக்கர் நெற்செய்கை அழிவடைந்துள்ளதாக விவசாயிகளால் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் அழிவடைந்த நெற்காணிகள் தொடர்பாக கமத்தொழில் அமைச்சின் கீழ் உள்ள காப்புறுதிச் சபையின் உத்தியோகத்தர்களால் மதீப்பீடு செய்யும் பணிகள் அண்மைய நாட்களாக முன்னெடுக்கப்பட்டுவந்தது.

மதிப்பீட்டின் அடிப்படையில் 1,387.5 ஏக்கர் நெற்காணிகளுக்கு இழப்பீடு வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு ஏக்கருக்கும் தலா 14,400 ரூபாய் வீதம் இழப்பீடு வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-10)

# இலஞ்சம் வாங்கிய வர்த்தகர்கள் கைது

கொழும்பு, டிசெ.29

வர்த்தகர் ஒருவரிடம் இருந்து 09 மில்லியன் ரூபாய் இலஞ்சம் பெற்ற வர்த்தகர்கள் இருவர் கொழும்பு, புறக்கோட்டை பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

இலஞ்ச ஊழல் தடுப்பு விசாரணை ஆணைக்குழு அதிகாரிகளால் சந்தேகநபர்களான வர்த்தகர்கள் இருவரும் கைது செய்யப்பட்டனர்.

நகர அபிவிருத்தி அதிகார சபையால் கையகப்படுத்தப்பட்ட குறித்த வர்த்தகரின் உறவினரின் காணிக்கான இழப்பீட்டுத் தொகையை விரைவாக பெற்றுத்தருவதாக வாக்குறுதியளித்து குறித்த வர்த்தகரிடம் இருந்து இவ்வாறு இலஞ்சம் பெறப்பட்டுள்ளதாக இலஞ்ச ஊழல் தடுப்பு விசாரணை ஆணைக்குழு அதிகாரிகள் தெரிவித்தனர். (எ)

# காலி கோட்டையின் பழைய கோட்டை நுழைவாயில்களுக்கு தற்காலிக பூட்டு

காலி,டிசெ.29

காலி கோட்டைக்கான பழைய கோட்டை நுழைவாயில் எதிர்வரும் 31 ஆம் திகதி வரை தற்காலிகமாக மூடப்படும் என தொல்பொருள் திணைக்களத்தின் தென் மாகாண பிராந்திய அலுவலகம் அறிவித்துள்ளது.

உலக பாரம்பரிய காலி கோட்டையின் பழைய கோட்டை வாயில்களுக்கு அருகிலுள்ள தொல்பொருள் நினைவுச்சின்ன சுற்றுச்சுவரில் பாதுகாப்பு பணி காரணமாக மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# ரூ.160 கோடி மோசடி செய்த தம்பதியர் விளக்கமறியலில்

கொழும்பு, டிசெ. 29

நிதி மோசடி செய்து படகு மூலம் இந்தியாவுக்கு தப்பிச் சென்ற நிலையில் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்ட தம்பதியினர் எதிர்வரும் ஜனவரி 06 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

பிரைவெல்த் குளோபல் பிரைவேட் லிமிடெட் என்ற நிதி நிறுவனம் வர்த்தக நிறுவனங்களுக்கு ஈவுத்தொகை தருவதாக கூறி 160 கோடி ரூபாயை மோசடி செய்ததாக குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு பல முறைப்பாடுகள் கிடைத்திருந்தன.

இதன் பணிப்பாளர், தனது மனைவி மற்றும் குழந்தையுடன் 2021 இல் படகில் சட்டவிரோதமாக இந்தியாவுக்கு தப்பிச் சென்றுள்ளமை விசாரணைகளின் ஊடாக தெரியவந்தது.

பின்னர் சர்வதேச பொலிஸாரின் ஊடாக சந்தேக நபர்களுக்கு எதிராக சிவப்பு எச்சரிக்கை பிறப்பிக்கப்பட்டதுடன், விசாரணையின் போது சந்தேகநபர் தனது குடும்பத்தினருடன் இந்தியாவின் வேதநாயகம் பகுதியில் தரையிறங்கிய போது அந்த நாட்டு பாதுகாப்புப் படையினரால் கைது செய்யப்பட்டதாக தெரியவந்தது.

பின்னர் சுமார் மூன்று வருடங்கள் அந்நாட்டில் தடுத்து வைக்கப்பட்டிருந்த அவர்கள் இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டனர். இந்த நிலையிலேயே கைது செய்யப்பட்டு அவர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (எ)

# கறுவா உற்பத்தியால் வருடத்துக்கு 500 மில்லியன் டொலர் வருமானம்

## இலங்கை - சீனா புரிந்துணர்வு உடன்படிக்கை

கொழும்பு, டிசெ.29

இலங்கையின் பிரதான ஏற்றுமதிப் பயிர்களில் ஒன்றான கறுவாச் செய்கையின் மூலம் வருடத்துக்கு 500 மில்லியன் அமெரிக்க டொலர் வருமானத்தை ஈட்ட திட்டமிடப்பட்டுள்ளதாக கறுவா அபிவிருத்தித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இலங்கையில் கறுவா உற்பத்தி வருடத்துக்கு 25,000 மெற்றிக் தொன்களாகும். இதில் சுமார் 19,000 மெற்றிக் தொன்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

கறுவா ஏற்றுமதி மூலம் இலங்கை தற்போது சுமார் 250 மில்லியன் டொலர் அந்நியச் செலாவணியை ஈட்டி வருவதாக கறுவா அபிவிருத்தி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ஜனக லிந்தர தெரிவித்தார்.

குறித்த வருமானத்தை இரட்டிப்பாக்க திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். இதன்படி, பாரம்பரியமாக கறுவா பயிரிடப்பட்டு வரும் காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை பிரதேசங்களுக்கு மேலதிகமாக குருநாகல், புத்தளம் மற்றும் மகாவலி பிரதேசங்களில் கறுவாச் செய்கையை விரிவுபடுத்த கறுவா அபிவிருத்தி திணைக்களம் திட்டமிட்டுள்ளது.

இதேவேளை, கறுவா ஏற்றுமதி தொடர்பில் சீனாவுடன் புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திடப்பட்டுள்ளதாக ஜனக லிந்தர தெரிவித்தார்.

இதன் மூலம் 2025ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் சீனாவுக்கு கறுவாவை ஏற்றுமதி செய்வதற்கான வாய்ப்பு கிடைக்கும் - என்றார்.(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
29.12.2024 ஞாயிற்றுக்கிழமை
குரோதி வருடம், மார்கழி 14

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# இந்திய - இலங்கை மீனவர் விவகாரம்

இந்திய - இலங்கை மீனவர்களுக்கிடையில் இனி பேச்சுவார்த்தை இல்லையென்று கடற்றொழில் மற்றும் நீரியல்வள அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்திருக்கின்றார். இந்திய - இலங்கை அதிகாரிகளுக்கிடையில் பேச்சுக்கள் தொடரும் - அதே வேளை, மனிதாபிமான உதவிகளை வாங்குவது, கொடுப்பது தொடர்பில் எந்தவொரு பேச்சுவாாத்தைக்கும் நாங்கள் செல்லப் போவதில்லை என்றும் சந்திரேசேகர் தெரிவித்திருகின்றார்.

அண்மையில் புதுடில்லியில் மோடி - அநுர பேச்சுவார்த்தையின் போது. இந்தப் பிரச்னையை மனிதாபிமான அடிப்படையில் அணுக வேண்டுமென்று மோடி குறிப்பிட்டிருந்தார் - ஆனால், ஜே.வி.பியின் அமைச்சரோ இதில் மனிதாபிமான கொடுக்கல் வாங்கல்களுக்கு எதுவுமில்லை என்று கூறுகின்றார். அவ்வாறாயின் மோடியின் கோரிக்கைக்கு கடற்றொழில் அமைச்சு செவிசாய்க்காது என்பதா சந்திரசேகரின் பதில்?

கோட்டாபய ராஜபக்ஷ காலத்திலும் இந்தப் பிரச்னை இவ்வாறுதான் அணுகப்பட்டது. மீனவர் பிரச்னை என்று வருகின்ற போது கொழும்பு மட்டத்தில் ஒருவாறும், யாழ்ப்பாணத்திலிருந்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஒருவாறும் பதிலளிக்கும் நடைமுறையே இருந்தது. இப்போதும் அதே மாதிரியான ஒரு அணுகுமுறையே கடைப்பிடிக்கப்படுவது போன்றே தெரிகின்றது. இந்த விடயத்தில் இலங்கைக்கான அணுகுமுறை தேவை - இதனை வெறுமனே வடபுல மீனவர் விவகாரமாக சுருக்குவதன் மூலம் இந்தப் பிரச்னையை அணுக முடியாது.

இந்தப் பிரச்னையை உசிதமான வழிகளில் தீர்க்க வேண்டும் என்று அரசாங்கம் கருதினால், முதலில் இதனை வெறுமனே வடக்கு - குறிப்பாக யாழ். குடாநாட்டு மீனவர் பிரச்னை என்பதிலிருந்து இந்த விடயத்தை வெளியில் எடுக்கவேண்டும். ஆனால் பொதுவாக, இந்த விவகாரம், பொது வெளியில் முன்வைக்கப்படும் போது வடக்கு மாகாண தமிழ் மீனவர்களுக்கும் தமிழ் நாட்டு மீனவர்களுக்குமான பிரச்னையாக முன்வைப்படுவதில்லை - மாறாக, இந்திய - இலங்கை மீனவர் பிரச்னையாகவே நோக்கப்படுவதுண்டு. எனவே இந்தப் பிரச்னைக்கான தீர்வு என்று வருகின்ற போதும் அதற்கான பரந்த கண்ணோட்டத்தில் விடயத்தை நோக்க வேண்டும்.

டக்ளஸ் தேவானந்தா யாழ். மாவட்டத்திலிருந்து தெரிவாகும் ஒரு நாடாளுமன்ற உறுப்பினர். அவ்வாறான ஒருவர் அமைச்சராக நியமிக்கப்படும் போது. அவர் தனக்கான அரசியல் நலன்களுடன் இணைத்துத்தான் பிரச்னையை நோக்குவார். யாழ் மாவட்ட மீனவர்களை திருப்திப்படுத்த வேண்டும் என்பதுதான் அவரது முதல் நோக்கமாக இருக்கும். இராமலிங்கம் சந்திரசேகரின் அணுகுமுறையும் அவ்வாறுதான் தெரிகின்றது.

சந்திரசேகர் நீண்டகாலமாக யாழ்ப்பாணத்தில் ஜே.வி.பிக்கான அலுவலகத்தை நடத்தி வந்த ஒருவர். வடக்கு மாகாணத்தில் தேசிய மக்கள் சக்தி பெற்றுக்கொண்ட வெற்றியில் அவரது பங்கு பிரதானமானது என்னும் அடிப்படையில்தான், அவருக்கு குறித்த அமைச்சுப் பொறுப்பு வழங்கப்பட்டிருக்கின்றது. வடக்கு மாகாண மீனவர் பிரச்னை என்று வருகின்றபோது, சந்திரசேகரும் தங்களுக்கான வாக்கு வங்கியை தக்கவைக்கும் தூர நோக்கோடுதான் விடயங்களை கையாள முற்படுவார். இந்திய - இலங்கை மீனவர் விவாகரத்தில் குறுகிய அரசில் இலாபத்தை முன்வைத்து செயல்பட்டால், இந்தப் பிரச்னைக்கான தீர்வுகளை காண்பதில் எப்போதும் இழுபறிநிலையே ஏற்படும். இந்தப் பிரச்னையின் ஆழத்தையும் அதே வேளை, இது வரையில் பிரச்னையை தீர்க்கும் நோக்கில் மேற்கொள்ளப்பட்ட அனைத்து முயற்சிகளும் தோல்வியுற்றிருக்கின்றது என்னும் அனுபவத்தையும் இராமலிங்கம் சந்திரசேகர் கவனத்தில் கொள்ள வேண்டும்.

## பாராளுமன்ற இணையத்தளத்தில் தகவல்களை உள்ளீடு செய்யும் மேலும் இருவர் வாக்குமூலம்!

கொழும்பு, டிசெ. 29

பாராளுமன்ற இணையத்தளத்தில் நீதியமைச்சர் ஹர்ஷன நாணயக்காரவின் பெயருக்கு முன்பாக தவறாகப் பட்டம் குறிப்பிடப்பட்டமை தொடர்பில் குறித்த இணையத்தளத்தில் தகவல்களை உள்ளீடு செய்யும் பணியில் ஈடுபட்டிருந்த மேலும் இரண்டு உத்தியோகத்தர்களிடம் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினர் வாக்குமூலம் பெற்றுள்ளனர்.

இதன்படி, நேற்று முன்தினம் அவர்களிடம் சுமார் மூன்று மணித்தியாலங்கள் வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்காக அவர்கள் இருவரும் நேற்றுமுன்தினம் குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் முன்னிலையாகியிருந்ததாக தெரிவிக்கப்படுகிறது. (அ)

## அதிகரித்த வருமானத்தை பதிவு செய்தது தேசிய விலங்கியல் பூங்கா திணைக்களம்!



கொழும்பு, டிசெ. 29

தேசிய விலங்கியல் பூங்கா திணைக்களம் 2023ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் இந்த ஆண்டு 150 சதவீத வருமான அதிகரிப்பை பதிவு செய்துள்ளதாக அதன் பணிப்பாளர் நாயகம் ரஞ்சன மாரசிங்க தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்துரைத்த அவர், இந்த ஆண்டு ஜனவரி மாதம் முதல் கடந்த 23ஆம் திகதி வரையான காலப்பகுதியில் 1.42 பில்லியன் ரூபாய் வருமானம் கிடைத்துள்ளதாக குறிப்பிட்டார்.

மொத்த வருமானத்தில் பின்னவல யானைகள் சரணாலயத்தினூடாக 61.4 சதவீத வருமானம் கிடைத்துள்ளது.

இதன்படி, பின்னவல யானைகள் சரணாலயத்தினூடாக மாத்திரம் 876 மில்லியன் ரூபாய் வருமானம் ஈட்டப்பட்டுள்ளது.

அத்துடன் மொத்த வருமானத்தில் தெஹிவளை மிருகக்காட்சிசாலையினூடாக 22 சதவீத வருமானமும், ரிதியகம சபாரி பூங்காவினூடாக 9 சதவீத வருமானமும் பின்னவல திறந்த மிருகக்காட்சிச்சாலையினூடாக 7.5 சதவீத வருமானமும் கிடைத்துள்ளன.

ஜனவரி, பெப்ரவரி, மார்ச், ஏப்ரல் மற்றும் ஒகஸ்ட் மாதங்களில் அதிக வருவாய் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இதன்படி, 2025ஆம் ஆண்டின் ஜனவரி மாதத்திலும் அதிக வருவாயை ஈட்ட முடியும் என எதிர்பார்க்கப்படுவதாக தேசிய விலங்கியல் பூங்கா திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ரஞ்சன மாரசிங்க தெரிவித்தார். (அ)

## மன்மோகனுக்கு நாமல் அஞ்சலி

புதுடில்லி, டிசெ. 29

பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ, முன்னாள் இந்தியப் பிரதமர் கலாநிதி மன்மோகன் சிங்குக்கு நேற்று சனிக்கிழமை புதுடில்லியில் உள்ள காங்கிரஸ் கட்சியின் தலைமையகத்தில் இறுதி அஞ்சலி செலுத்தினார்.

இலங்கை சார்பாக தனது இரங்கலைத் தெரிவித்த நாமல் ராஜபக்ஷ இந்திய-இலங்கை உறவுகளை வலுப்படுத்துவதில் கலாநிதி மன்மோகன் சிங்கின் பங்களிப்பை எடுத்துரைத்தார்.

இதனிடையே, மன்மோகன் சிங்குக்கு ஜனாதிபதி உட்பட நாட்டின் பல அரசியல் தலைவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளனர். (அ)

## மனுஷ நாணயக்காரவின் சகோதரன் நேற்று கைது

கொழும்பு, டிசெ.29

முன்னாள் அமைச்சர் மனுஷ நாணயக்காரவின் சகோதரன் குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் நேற்றுச் சனிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

நிதி மோசடி குற்றச்சாட்டின் பேரிலேயே இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மொனராகலை, பிபில பிரதேசத்தில் வைத்து நேற்றுக் காலை இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.(எ)

## இஸ்ரேலிய சுற்றுலாப் பயணிகள் எண்ணிக்கை டிசெம்பரில் உயர்வு


கொழும்பு, டிசெ. 29

டிசெம்பர் மாதத்தில் நாட்டுக்கு வருகை தந்த இஸ்ரேலிய சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

இதன்படி இம்மாதத்தின் முதல் 25 நாட்களில் நாட்டுக்கு வருகை தந்துள்ள இஸ்ரேலிய சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 1,675 ஆக பதிவாகியுள்ளது.


முன்னதாக கடந்த நவம்பர் மாதம் 878 இஸ்ரேலிய சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவுத்திறனை அதிகரிக்கலாமே?



பொ.ஜெயச்சந்திரன்

ஒரு மொழியை எழுதவும், படிக்கவும் தெரியாமல் இருப்பதை எழுத்தறிவின்மை என்று ஐ.நா. வரையறுத்துள்ளது. எழுத்தறிவு ஒரு தனி நபருக்குத் தன்னுடைய இலக்கை அடைவதற்கும், தனது அறிவையும், தகுதியையும் வளர்ப்பதற்கும், பரந்த சமூகத்தில் தனது பங்கினை முழுமையாக ஆற்றுவதற்கும் உதவுவதாகும். உண்ணும் உணவைவிடவும், பார்க்கும் கண்ணைவிடவும் முக்கியம் பெறுகிறது எழுத்தறிவு.

இந்த எழுத்தறிவு என்பது பாரம்பரியமாக வாசிப்பு, எழுத்து மற்றும் கணிதம் ஆகிய திறன்களைக் குறிப்பதாக இருந்து வந்தது. இன்று அதன் வரைவிலக்கணம் விரிவடைந்துள்ளது. இப்போது மொழி, கணிதம் குறியீடுகள், கணினி ஆகியவற் றில் திறன் பெற்றிருப்பதையும், புரிந்து கொள்ளுதல் மற்றும் ஐதீகமான கலாசா ரக் குறியீடுகளைப் பயன்படுத்துதல் ஆகியவற்றையும் குறிக்கிறது.

அனைவருக்கும் கல்வி என்ற உலக அறிக்கையை 2006- இல் ஐ.நா.அறிவித்தது. அத்திட்ட அறிவிப்புக்குப் பின்னரும் தெற்கு மற்றும் மேற்கு ஆசியப் பகுதிகளில் வயது வந்தோர் 58.7 சதவீதம் பேர், ஆப்பிரிக்காவில் 59.7 சதவீதம் பேர், அரபு நாடுகள் 62.7 சதவீதம் பேர் படிப்பறிவு இல்லாமல் உள்ளனர். எழுத்தறிவின்மையால் உலக அளவில் 250 மில்லியன் சிறுவர்கள் குழந்தைத் தொழிலாளர்களாக உள்ளனர்.

2014ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட ஆய்வு ஒன்றிலிருந்து இங்கி லாந்தில் 11 வயதுடைய குழந்தைகளில் ஐந்தில் ஒருவர் திறமை யாக வாசிக்க முடியாதவராக இருக்கி றார். கனடாவில் 42 சதவீதம் அரை எழுத்தறிவுடையர்களாகவே கணிக் கப்பட்டு இருக்கிறார்கள். அமெரிக்க மத்திய உளவுத்துறை முகவரமைப்பின் (சி.ஐ.ஏ) தகவல்படி எழுத்தறிவில் இந்தியா உலகில் 124ஆவது இடத்தி லும், பாகிஸ்தான் 144ஆவது இடத்தி லும் இருக்கிறது.

சீனாவில் புரட்சிக்கு முன் 80 சதவீதம் பேர் எழுத்தறிவற்றவர்களாக இருந்தார்கள். இன்று 15 - 24 வயதுடையவர்களில் 99 சதவீதம் பேர் எழுத்தறிவுடையவர்களாக மாறியுள்ளனர். இலங்கையின் எழுத்தறிவு 92 சதவீதமாகும். இலங்கை உலக அளவில் 83- ஆவது இடத்தில் உள்ளது. வடகொரியாதான் எழுத்தறிவில் உலகில் முதல் இடத்தில் உள்ளது. இரண்டாவது இடம் லாட்வியாவுக்குத்தான். மூன்றாவது இடத்தைக் கியூபா கொண்டுள்ளது.

இந்தியா விடுதலையடைந்த பிறகு நடத்தப்பட்ட முதல் மக்கள் தொகை கணக்கெடுப்பில் இந்தியாவின் ஒட்டு மொத்த மக்கள் தொகையில் 18 விழுக்காட்டினர் மட்டுமே எழுத்தறிவு பெற்றிருந்தனர். ஆனால் 2011-ஆம் கணக்கின்படி இது 74 விழுக்காடாக உயர்ந்தது. 1951இல் 10 பெண்களில் ஒருவருக்கும் குறைவாகவே எழுத்தறிவு பெற்றிருந்தனர். ஆனால் தற்போது 3 பெண்களில் இருவர் எழுத்தறிவு பெற்றுள்ளனர். அது மட்டுமின்றி 1990ஆம் ஆண்டில் தான் எழுத்தறிவு பெறுவதில் ஆண்களுக்கும், பெண்களுக்கும் இடையிலான வேறுபாடு முதன்முறையாக குறையத் தொடங்கியது. அதன் பின்னர் இந்த வேறுபாடு வேகமாக குறைந்து வந்தது. எனினும் இந்த அளவு பல்வேறு மாநிலங்களுக்கிடையே வேறுபட்ட அளவில் உள்ளது.

இந்தியாவில் ஒவ்வொரு ஆண்டும் பிறக்கிற சுமார் இரண்டரை கோடி குழந்தைகளில், கிட்டத்தட்ட 98 சதவீத குழந்தைகள் 5 அல்லது 6 வயதாகும் போது பள்ளிகளில் சேர்க்கப்படுகிறார்கள். ஆனால் ஆண்டின் கல்வி நிலை பற்றிய அறிக்கை, 'பள்ளிக்குச் செல்லும் மனநிலைக்குத் தயார்ப்படுத்தப்படாமலேயே குழந்தைகள் பலரும் பள்ளியில் சேர்க்கப்படுகிறார்கள்' என்பதைச் சுட்டிக் காட்டுகிறது.

1950களின் தொடக்கத்தில் 'மனித மேம்பாடு மற்றும் கல்வி' என்ற புத்தகத்தில் ராபர்ட் ஹாவிக்ஹாட் குழந்தைகளின் கற்றல் சூழல் பின்னணியில் 'கற்பிக்கத் தக்க தருணங்கள்' என்பதைப் பற்றி குறிப்பிட்டுள்ளார். நேரம் சரியானதாக இருக்கும் போது, குறிப்பிட்ட இடுபணியை கற்றுக் கொள்வது சாத்தியமானதாக அமையும். இது தான் கற்பிக்கத் தக்க தருணம் எனச் சுட்டிக்காட்டப்படுகிறது. ஆகவே, அதற்கான தருணத்தில் தான் பெற்றோர், ஆசிரியர்கள் குழந்தைகளைப் பள்ளியில் சேர்க்க வேண்டும்.

பள்ளிகள் இனிமேலும் வாசிப்பு, எழுதுதல், எழுத்துக்கூட்டுதல் போன்ற செயல்களை மட்டுமே கற்பிக்கும் இடமாக இருக்கக் கூடாது. ஒரு நல்ல பள்ளிக்கூடம் என்பது இன்றைய யுகத்தில் பணித்திறன் சார்ந்து தனித் திறமைகளை வளர்த்துக் கொள்ளும் வாய்ப்புகளை மாணவர்களுக்கு வழங்குவதாகவும், மாணவர்களின் பல்வேறு தகுதிகளை வலுப்படுத்துவதாகவும், மிகச்சிறந்த முடிவுகளை எடுக்கும் திறன் வாய்ந்தவர்களாக அவர்களை ஆக்குவதாகவும், முரண்பாடுகளை எளிதில் கையாளும் திறன் பெற்றவர்களாக மாணவர்களை உருவாக்குவதாகவும் இருக்க வேண்டும்.

அதனால், ஒரு பள்ளியின் தரத்தை பொதுத் தேர்வில் மாணவர்கள் வெற்றி பெற்ற சதவிகித்தையும், தேசிய அளவிலான தர வரிசையோடும் சேர்த்து ஒப்பிட்டு பார்க்கக் கூடாது. தரமான கல்வியை எல்லாருக்கும் வழங்க நினைக்கும் போது, ஒரு பள்ளியிலுள்ள மாணவர்கள் அதிக மதிப்பெண்கள் பெறும் எண்ணிக்கையும், கிரேடுகளையும் மட்டுமே நாம் கணக்கில் கொண்டு ஏற்றத்தாழ்வுகளைக் கணிக்க முடியாது.

## இந்தவார ராசிபலன் 29.12.2024 - 05.01.2025

ஞாயிற்றுக்கிழமை
குரோதி வருடம் - மார்கழி 14
நல்ல நேரம்: 09.28 - 10.28 ராகு காலம் : 04.58 - 06.28 திதி : சதுர்த்தசி

### மேஷம்
[ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

இந்த வாரம் உங்களுக்கு ஆபரண சேர்க்கை உண்டு. உடன்பிறப்புகளிடம் கருத்து வேறுபாடு ஏற்படும். புத்திர பாக்கியம் ஏற்படும். கௌரவப் பட்டங்கள், பதவிகள் ஆகியவை கிடைக்கும். அரசாங்கத் துறைகள் மூலம் எதிர்பார்த்த அனுகூலங்கள் யாவும் வந்து சேரும். சில விஷயங்களில், சிலருக்குத் தடை, தாமதங்கள் ஏற்படும். மேடைப் பேச்சாளர்கள் தங்கள் பேச்சின் மூலம் வருமானம் ஈட்டுவர். கொடுத்த கடனை திரும்பப் பெறுவதில் சிக்கல்கள் எழாது. சுலபமாக வசூலாகிவிடும். தம்பதிகளுக்கு இடையே அந்நியோன்யம் நீடிக்கும்.

### ரிஷபம்
[ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

இந்த வாரம் எதிர்பாராத தனவரவு ஏற்படும். புத்திர பாக்கியம், பதவி உயர்வு, புதிய தொழில் வாய்ப்புகள் ஏற்படும். ஆன்மீகவாதிகளின் சந்திப்பு மகிழ்ச்சி தரும். வருமானம் அதிகம் வந்தாலும், செலவுகளை கட்டுப்படுத்த முடியாது. தொழிலில் கூட்டாளியின் புதிய ஆலோசனைகள் வரவேற்கத்தக்கதாக இருக்கும். அவரது கடமை உணர்வும், திறமையும் உங்களுக்கு திருப்திகரமாக இருந்தாலும், அவரை முழுமையாக நம்பி விடாதீர்கள். சந்தையின் தேவைக்கு ஏற்ப புதிய முதலீடுகளை செய்ய முற்படுவார்கள். குடும்பத்தினருடன் அனுசரித்து செல்வது நல்லது.

### மிதுனம்
[ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

இந்த வாரம் எதிர்பார்த்தபடி தனவரவுகள் கைக்கு வந்து சேரும். வந்த பணத்தை தரும காரியங்களுக்கு தாராளமாகச் செலவு செய்து மகிழ்வார்கள். வாழ்க்கையில் முன்னேற்றங்களையும், சுகானுபவங்கள் மற்றும் கௌரவத்தையும் அடைவீர்கள். தாய் மாமனுக்கு நன்மை ஏற்படும். தொலைதூரப் பயணங்களின் மூலம் நன்மை ஏற்பட்டு, வெற்றிகரமான தொழில் முன்னேற்றங்கள் ஏற்படும். பிரயாணத்தின் போது எச்சரிக்கையோடு இருத்தல் அவசியம். குடும்பத்தில் சில நேரங்களில் அமைதியின்மை நிலவும்.

### கடகம்
[ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

இந்த வாரம் பெரியவர்கள் ஆலோசனைக்கு ஏற்ப பூஜை வழிபாடுகளில் ஈடுபடுவீர்கள். விரும்பிய பொருட்களை வாங்கக் கூடிய அளவுக்குத் திருப்திகரமான தனவரவு இருக்கும். நல்லவர்களின் தொடர்பு மூலம் நன்மைகள் அதிகம் ஏற்படலாம். உணவருந்தும் நேரமின்றி உழைக்க வேண்டியது வரும். புதிய தொழில் தொடர்புகள் மூலம் எதிர்பார்ப்புக்கு மேல் பணவரவு ஏற்படும். அரசு அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர். பங்குச் சந்தையில் இலாபமும், போட்டி பந்தயங்களில் ஆதாயமும் கிடைக்கும்.

### சிம்மம்
[ மகம், பூரம், உத்திரம் 1 ]

இந்த வாரம் பல வழிகளிலும் தனவரவு அதிகரிக்கும். பயிர், மனை இவற்றால் இலாபம் ஏற்படும். சிலருக்குத் திருமணம், சந்ததி விருத்தி ஏற்படும். சகோதரரால் நன்மைகள் உண்டு. மனோதைரியம் அதிகரிப்பதன் காரணமாக எவரையும் எதிர்த்து போராடி வெற்றி பெறுவீர்கள். தொழிலில் பொருட்களின் உற்பத்தி பெருகி, இலாபமும் எதிர்பார்த்தபடி அதிகரிக்கும். அரசுப் பணியாளர்களுக்கு புதிய பதவியும், பொறுப்பும் கிடைக்கும்.

### கன்னி
[ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

இந்த வாரம் பக்தி மார்க்கத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். எதிர்பாராத தனவரவுகள் இருக்கும். திடீரென ஏற்படும். பயணங்களால் ஆதாயமும், மகிழ்ச்சியும் ஏற்படும். சிலருக்கு உழைப்பு அதிகமாகி அதற்கேற்றார் போல் ஆதாயமும் அதிகரிக்கும். அரசுப் பணியாளர்களுக்கு எதிர்பார்த்தபடி தலைமைப் பதவிகள் தேடி வரும். நல்ல வகையான உணவு வகைகளை உட்கொள்வார்கள். டீக்காக உடையணிந்து ஆட்களை அசத்துவார்கள். வார மத்தியில், குடும்பத்தில் சுபகாரியப் பேச்சுக்கள் பேசப்படும். வேலை வாய்ப்புகள் பிரகாசமாக இருக்கும்.

### துலாம்
[ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

இந்த வாரம் புதிய முயற்சிகள் மூலம் பண வருமானம் அதிகரிக்கும். சிலருக்குப் புதுப்புதுப் பதவிகளும் அதனால் வருவாய் பெருக்கமும் ஏற்படும். தொழில் வாய்ப்புகள் பிரகாசமாக இருக்கும். உங்கள் தொழில் விஷயமாகத் தீட்டிய முக்கியத் திட்டங்கள் நிறைவேற எடுத்த முயற்சிகள் வெற்றி பெறும். வியாபாரிகளுக்கு வங்கிக் கடன்கள் உடனடியாக கிடைக்கும். அவர்கள் தங்கள் வாக்கால் வாடிக்கையாளர்களை கவர்ந்து இலாபத்தைப் பெருக்குவர். பெண்களின் அழகும், பொலிவும், அறிவுத்திறனும் கூடும்.

### விருச்சிகம்
[ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

இந்த வாரம் உங்களுக்கு மிக்க அனுகூலமான வாரம். பல வழிகளிலும் தனவரவு ஏற்படும். எந்தக் காரியத்தையும் திறம்படச் செய்யும் உங்கள் செயல்திறன் கூடும். அதன் காரணமாக உங்கள் பணி இலக்கை அடைவீர்கள். சிலருக்கு மற்றவர்களுக்கு ஆணையிடும் உயர் பதவிகள் கிடைக்கும். புதிதாக வேலை தேடுபவர்களுக்கு நல்ல காலம் பிறக்கும். மாணவர்கள் தங்கள் கிரகிப்பு தன்மையால் கல்வியின் தரத்தை உயர்த்தி கொள்வர்.

### தனுசு
[ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

இந்த வாரம் குடும்ப சந்தோஷம் குறைவில்லாது நிறைந்திருக்கும். தம்பதிகளிடையே அன்யோன்யம் அதிகரிக்கும். பெரியவர்கள் ஆசியால் நீங்கள் எடுக்கும் அனைத்து முயற்சிகளும் வெற்றி அடையும். சுகமும் ஆடை ஆபரண சேர்க்கை, புத்திர பாக்கியம் மற்றும் எதிர்பாராத பணவரவுகள் ஆகியவை ஏற்படும். அதிகாரிகளுடன் வீண் சச்சரவுகளை விலக்கினால் பணியில் எதிர்பார்த்த உயர்வுகள் இருக்கும். சம்பாதிக்கும் திறன் மேம்படும்.

### மகரம்
[ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

இந்த வாரம் புது தெம்பும், உற்சாகமும் கூடும். வாகன வசதிகள் மேம்படும். அந்தஸ்து உயரும். தொலை தூரத்திலிருந்து நற்செய்திகள் வந்து மகிழ்ச்சி அளிக்கும். பக்திப் பெருக்கினால் ஞானத் தன்மை எய்துவார்கள். சிலருக்கு அதிகாரப் பதவியும், அமைச்சர் போன்ற பதவிகளும் கிடைக்கும். நண்பர்களிடம் சுமுகமாக இருக்க முயற்சியுங்கள். பயணங்களால் செலவுகள் அதிகமாகும், ஆதலால் பணமுடையும் இருக்கும்.

### கும்பம்
[ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

இந்த வாரம் பூமி அல்லது வாகனம் வாங்கும் யோகம் ஏற்படும். மனதில் தெய்வ பக்தி கூடும். நினைத்ததை நினைத்தபடியே சாதிக்கும் திறன் அதிகரிக்கும். உங்கள் நற்குணங்கள் அனைவரின் பாராட்டையும் பெறும். மாணவர்களுக்கு கல்வியில் தேர்ச்சி உண்டாகும். பொன் பொருள் ஆபரணங்கள் ஆகியவை விதவிதமாகக் கிடைக்கும். நல்ல பண்பாளர்களின் நட்பும், அன்பும் கிடைக்கும். எப்போதும், உங்கள் எதிரிகளிடம் இருந்து விலகி இருப்பது நல்லது. உறவுகள் வருகையால் செலவுகள் அதிகரிக்கும்.

### மீனம்
[ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

இந்த வாரம் கலைஞர்களுக்கு சிறப்பான வாரம். புதிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகி, கை நிறைய முன் பணம் பெற்று மகிழ்வர். தொழிலில் ஈடுபட்டு உள்ளவர்களுக்கு இதுநாள் வரை இருந்து வந்த இழுபறி நிலைகள் பகலவனைக் கண்ட பனிபோல் விலகும், சிலருக்கு வருமான வரி பிரச்சனைகள் தலை தூக்கலாம் எனவே, கம்பெனி கணக்குகளை சீராக எழுதி வைக்கவும். இல்லையெனில் சிக்கல்களைச் சந்திக்கலாம். வந்தபின் ஓடுவதை விட, வருமுன் காப்பது தானே புத்திசாலித்தனம். வீட்டில் பிடிவாதங்களை தளர்த்தினால் பிணக்குகள் தீரும். இடம் சம்பந்தமான வழக்குகள் வெற்றி பெற்று, புதிய சொத்துக்கள் சேரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்மோகன் சிங்

கணேஷ் போல்

கடந்த 2011ம் ஆண்டு பட்ஜெட் கூட்டத்தொடரின் போது அன்றைய இந்திய பிரதமராக இருந்த மன் மோகன் சிங்குக்கும், மறைந்த பாஜக தலைவரான சுஷ்மா ஸ்வராஜுக்கும் இடையே கருத்து மோதல் ஏற்பட்டது.


சுஷ்மாவின் கேள்விக்கு மன்மோகன் சிங், கவிஞர் இக்பாலின் கவிதை ஒன்றை பதிலாக அளித்தார். நாடா ளுமன்றத்தில் இப்படியான வாதங்களில் மிக அரிதா கவே மன்மோகன் சிங் ஈடுபடுவதைக் காண இயலும். இந்த கவிதையை கேட்ட பிறகு சுஷ்மா ஸ்வராஜ் உட் பட பலரும் மகிழ்ச்சியாக அதை எடுத்துக் கொண்டனர்.

எதைப் பற்றியும் பேசவே பேசாத பிரதமர் மன் மோகன் என்ற கருத்து உண்டு. ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் இரண்டு ஆட்சிக்காலத்திலும், பிரணாப் முகர்ஜி அல்லது ப. சிதம்பரம் உள்ளிட்ட அமைச்சர் களே அரசின் நிலைப்பாடு குறித்து எப்போதும் பேச முன்வருவார்கள்.

மன்மோகன் சிங் எப்போதும் அமைதியாக இருக்க வில்லை. அரசியல் நிபுணர்கள், மன்மோகன் சிங் மிகப் பெரிய அளவில் உரையாற்றமாட்டார் ஆனால் மிகவும் நேர்த்தியான பதில்களை அவர் வழங்குவதுண்டு என்று கூறுகின்றனர்.

கடந்த 2018ம் ஆண்டு டிசம்பர் மாதம் மன்மோகன் சிங், தான் அமைதியான பிரதமர் இல்லை என்று குறிப்பிட்டார்.

"என்னுடைய வேலைகள் குறித்து நான் பெருமை யாக பேச வேண்டிய அவசியமில்லை. ஆனால், என்னுடைய பணிகாலத்தில் நான் ஊடகங்களில் பேச ஒருபோதும் பயந்தது இல்லை. நான் தொடர்ச்சியாக ஊடகவியலாளர்களை சந்தித்து வந்தேன். வெளிநாட் டுக்கு அரசுமுறை பயணம் மேற்கொள்ளும்போது, நான் விமானத்திற்குள் செய்தியாளர்களை சந்திப்பேன். அல்லது, இந்தியாவுக்கு வந்த பிறகு டெல்லியில்



டிருந்த ஹல்த்வானி அகதிகள் முகாமில் தங்கவைக்கப் பட்டனர்.

பிரிவினையால் ஏற்பட்ட பதட்டம் காரணமாக, அவருடைய தேர்வுகளை அவரால் எழுத முடியாமல் போனது. இந்தியாவில் அவர் அந்த தேர்வுகளை எழுதி னார். பிறகு பஞ்சாப் பல்கலைக்கழகத்தில் மேற்படிப்பு படிக்க சென்றார் என்று, மூத்த பத்திரிகையாளர் மனினி சாட்டர்ஜி தெரிவித்தார்.

கடந்த 1991ம் ஆண்டில் இந்திய நிதி அமைச்சராக அவர் பொறுப்பேற்ற பிறகு, அவரின் பால்ய கால நினைவுகளை விரிவாக நேர்காணல் ஒன்றில் மன் மோகன் சிங் பகிர்ந்தார் என்று சாட்டர்ஜி குறிப்பிடு கிறார்.

இந்தியாவுக்கு வந்த பிறகும் கூட, அவரின் குடும்ப சூழல் நிச்சயமற்றதாக இருந்தது. அகதிகள் முகாமில்

1971ம் ஆண்டு அவர் இந்திய அரசின் வர்த்தகத்துறை யில் பொருளாதார ஆலோசகராக பணியாற்றினார். அப்போது இருந்து அவர் இந்திய அரசுக்காக பணி யாற்றி வந்தார்.

1972ம் ஆண்டு அவர் நிதித்துறையின் தலைமை பொருளாதார ஆலோசகராக நியமிக்கப்பட்டார்.

பிறகு திட்ட அறிக்கையின் துணைத் தலைவர், ரிசர்வ் வங்கியின் ஆளுநர், பிரதமர் ஆலோசகர், பல்கலைக்கழக மானியக்குழுவின் தலைவர் உள்ளிட்ட முக்கிய பொறுப்புகளை அவர் வகித்தார்.

கடந்த 1991ம் ஆண்டு கோடை காலத் தில் இந்திய அரசியலில் நடந்த பல்வேறு நிகழ்வுகளை கவனித்து வந்தார் மன் மோகன் சிங்.

சந்திரசேகரின் ஆட்சி முடிவுக்கு வந் தது. நாடாளுமன்ற தேர்தல் பிரசாரத்தின் போது ராஜீவ் காந்தி கொல்லப்பட்டார். தேர்தலுக்குப் பிறகு நரசிம்ம ராவ் பிரதமர் ஆனார்.

அதேநேரத்தில், இந்தியாவின் பொரு ளாதாரம் மிகவும் மோசமாக இருந்தது. இரண்டு வாரங் களுக்குத் தேவையான எரிபொருள், உரம் மற்றும் இதர பொருட்களை வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்வதற்குத் தேவையான அந்நிய செலாவணி மட்டுமே இந்திய கருவூலத்தில் இருந்தது.

ஒருபுறம், வளைகுடா நாடுகளில் நடைபெற்ற போர் களின் காரணமாக, எரிபொருளின் விலை அதிகரித்துக் கொண்டே சென்றது. மற்றொருபுறம் பொருளாதார வீழ்ச்சியை சந்தித்தது நாடு.

இதன் காரணமாக, வெளிநாடுகளில் இருந்து எந்த விதமான கடன்களும் இந்தியாவுக்குக் கிடைக்கவில்லை. இரண்டு வாரங்களுக்குப் பிறகு நாட்டை எப்படி நடத் தப் போகிறோம் என்ற கேள்வியை எதிர்கொண்டது மத்திய அரசும் இந்திய ரிசர்வ் வங்கியும்.

## "இரண்டு வாரங்களுக்கு போதுமான அந்நியச் செலாவணி கையிருப்பில் இருந்தபோது நிதியமைச்சர் பொறுப்பை ஏற்றவர்!"

செய்தியாளர்களை சந்திப்பேன்," என்று கூறினார்.

மோதி ஆட்சி மீது அவர் வைத்த விமர்சனமாக இது பார்க்கப்பட்டது.

ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் இரண்டாவது ஆட்சிக்காலத்தின்போது அவரின் பணி குறித்து கடுமையான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன.

பிரதமர் அலுவலகத்தின் முழு கட்டுப்பாட்டையும் சோனியா காந்தி எடுத்துக்கொண்டார் என்று குற்றம் சாட்டியது பாஜக. மன்மோகன் சிங்கின் அரசியல் பலம் கேள்விக்கு உள்ளானது.

நாட்டின் பொருளாதாரத்தில் நாம் அடைந்த சாதனைகள் நிச்சயமாக வரலாற்றில் நினைவுகூறப்படும் என்று மன்மோகன் தெரிவித்தார்.

கேம்பிரிட்ஜ் மற்றும் ஆக்ஸ்ஃபோர்டு பல்கலைக் கழகங்களில் அவர் பட்ட மேற்படிப்பைப் படித்தார். பிறகு ரிசர்வ் வங்கியின் ஆளுநராக பணியாற்றினார். மத்திய நிதித்துறை அமைச்சகத்தில் செயலாளராகவும், திட்டக்குழுவின் துணைத்தலைவராகவும், நாட்டின் நிதி அமைச்சராகவும் பிறகு பிரதமராகவும் பல்வேறு பொறுப்புகளை அவர் வகித்து வந்தார். மன்மோகனின் பொருளாதார மற்றும் அரசியல் பயணங்கள் மகத்தான வையாக இருந்தது. மேலும், இந்திரா காந்தி உட்பட 7 பிரதமர்களுடன் அவர் பணியாற்றியுள்ளார்.

மன்மோகன் சிங், பிரிக்கப்படாத இந்தியாவின் பஞ்சாப் மாகாணத்தில் உள்ள "கஹ்" என்ற கிராமத்தில் 1932ம் ஆண்டு செப்டம்பர் 26ஆம் திகதி பிறந்தார்.

மன்மோகன் பிறந்து சில மாதங்களே இருந்த போது அவருடைய அம்மா இறந்துவிட்டார். அவருடைய அப்பா வேலைகளுக்காக அடிக்கடி வெளியே சென்று விடுவார். தன்னுடைய உறவினர் வீட்டில் அவர் வாழ்ந்து வந்தார். அவருடைய பாட்டி, அவரை பார்த்துக் கொண்டார் என்று சஞ்சய் பாரு, "தி ஆக்சிடெண்டல் பிரைம் மினிஸ்டர்" புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளார். மூத்த பத்திரிகையாளரான அவர், மன்மோகனுக்கு ஊடகவியல் ஆலோசகராக ஒருமுறை பணியாற்றி யுள்ளார்.

அவருடைய சொந்த கிராமத்தில் ஆரம்பப் பள்ளியோ, சுகாதார மையமோ இல்லை. பல மைல்கள் நடந்தே அவர் பள்ளிக்கு சென்றார். மின்சார வசதிகள் போதுமானதாக இல்லாத அந்த காலத்தில் அவர் மண் ணெண்ணெய் விளக்கு வைத்து இரவு நேரங்களில் படிப் பார். மிகவும் அமைதியான சுபாவத்தைக் கொண்ட மன்மோகன் சிங் படிப்பில் சிறந்து விளங்கினார்.

1947ம் ஆண்டு, பிரிவினைக்குப் பிறகு மன்மோகன் சிங் அவருடைய குடும்பத்தோடு இந்தியாவுக்கு வந்தார். அவர்கள் ஆரம்பத்தில் உத்தராகண்டில் அமைக்கப்பட்

வசித்த பிறகு அமிர்தசரஸ், பட்டியாலா, ஹோஷியர்பூர் மற்றும் சண்டிகர் உள்ளிட்ட இடங்களில் அவர் வாழ்ந்தார்.

அவரின் குடும்ப சூழல் மோசமாக இருந்தது. ஆனா லும் பஞ்சாப் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்ற பிறகு தனக்கு கிடைத்த கல்வி உதவித்தொகையை வைத்து அவர் கேம்பிரிட்ஜ் மற்றும் ஆக்ஸ்ஃபோர்டு பல்கலைக் கழகங்களில் மேற்படிப்புகளை மேற்கொண்டார்.

"அத்தகைய பல்கலைக்கழகங்களுக்கு செல்லும் சூழலில் நான் இருக்கவில்லை. ஆனால், நான் இந்தியா வந்த பிறகு நன்றாக படித்தேன். அதிர்ஷ்டமும் எனக்கு கைகொடுத்ததால் எனக்கு இத்தகைய வாய்ப்புகள் கிடைத்தன," என்று மன்மோகன் சிங் அமெரிக்க ஊடக வியலாளர் சார்லி ரோஸுக்கு அளித்த நேர்காணலில் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நேர்காணலை அவர் 2004ம் ஆண்டு அமெ ரிக்காவில், ஐ.நா. நிகழ்வு ஒன்றில் பங்கேற்க சென்ற போது வழங்கினார்.

இந்தியா ஏன் ஏழ்மையாக இருக்கிறது என்பதை புரிந்துகொள்ள நான் பொருளாதாரம் படித்தேன் என்று அவர் ஒருமுறை கூறியுள்ளார்.

ஏழ்மையான குடும்பத்தில் இருந்து வந்த மன் மோகன் சிங், முதலாளித்துவத்தை ஆதரித்தார். நாட் டின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு அது தேவை என்று அவர் கருதினார்.

கடந்த 1991ம் ஆண்டு அவர் நிதி அமைச்சராக இருந்தபோது நாட்டின் பொருளாதாரத்தை உலகத்திற் காக திறந்துவிட்டார். தாராளமயமாக்கலை நோக்கி நாடு நகர்ந்தது.

சார்லியின் அந்த நேர்காணலில், "நீங்கள் அப்படி யான ஒரு குடும்ப சூழலில் இருந்து வருகிறீர்கள். இருந் தும் ஏன் நீங்கள் முதலாளித்துவம் மற்றும் சுதந்திர சந் தையை நம்பினீர்கள். ஏற்கனவே, இந்தியாவில் ஏழ்மை யும் சமத்துவமின்மையும் நிலவுகிறது. ஏன் பொதுவுடை மைக்கும், திட்டமிடப்பட்ட பொருளாதாரத்திற்கும் ஆதரவு அளித்து அதனை மேம்படுத்த முயலவில்லை?" என்ற கேள்வி அவரிடம் கேட்கப்பட்டது.

பொருளாதார சமத்துவம் என்பது குறித்து நாங்கள் தொடர்ச்சியாக சிந்தித்து வருகிறோம். ஆனால், முத லாளித்துவத்தில் வளர்ச்சிக்கான சாத்தியங்கள் இருக் கிறது. இது ஏழ்மையை ஒழிக்க உதவும் என்று சிங் கூறி னார்.

ஆக்ஸ்ஃபோர்டில் முனைவர் படிப்பை முடித்த பிறகு, அவர் பஞ்சாப் பல்கலைக்கழகத்தில் பேராசிரி யராக பணியாற்றினார். பிறகு டெல்லி பொருளாதாரப் பள்ளியிலும் அவர் பேராசிரியராக பணியாற்றினார்.

அதேநேரத்தில், 900 மில்லியன் அமெரிக்க டாலர் கள் மதிப்பிலான முதலீட்டை வெளிநாடு வாழ் இந்தி யர்கள் திரும்பப் பெற்றனர்.

அன்னிய செலாவணி தொடர்பான முடிவுகளை எட்டவில்லை என்றால் இந்தியாவின் இறக்குமதி 1991ம் ஆண்டு ஜூலை மாதத்தோடு ஸ்தம்பித்திருக்கும்.

நரசிம்ம ராவ் அந்த நேரத்தில் இந்த பிரச்னைக்கு முற்றுப்புள்ளி வைக்க சிறப்பு பொருளாதார நிபுணர் தேவை என்று கருதினார்.

நிதி அமைச்சர் பொறுப்புக்கான ஆட்களை அவர் தேட ஆரம்பித்தார். அரசியலுக்கு வெளியே உள்ள ஒருவர் தான் இந்த பொறுப்புக்கு சரியானவர் என்றும் அவர் நம்பினார். ஐ.ஜி.பட்டேல் மற்றும் மன்மோகன் சிங் என இருவரின் பெயர்கள் அவர் முன்னால் வைக்கப்பட் டது.

மன்மோகன் சிங் தேர்வு செய்யப்பட்டார். நரசிம்ம ராவின் நம்பிக்கைக்குரிய ஐ.ஏ.எஸ் அதிகாரி பி.சி. அலெக்சாண்டரிடம் இந்த தகவலை சிங்கிடம் தெரி வித்து, அவரின் ஒப்புதலைப் பெறும் பணிக்காக நியமிக் கப்பட்டார்.

தூங்கி எழுந்த மன்மோகன் சிங்கிடம் அதிகாலையில் முதல் தகவலாக இதைக் கொண்டு போய் சேர்த்தார் அலெக்சாண்டர்.

அந்த பொறுப்பை ஏற்ற அவர் இந்தியாவின் பொரு ளாதார கொள்கைகளில் மாற்றங்களை கொண்டு வந்தார்.

பொருளாதார வீழ்ச்சியில் இருந்து தப்பிக்க நாட்டின் கையிருப்பில் இருந்த தங்கம் அடமானம் வைக்கப்பட் டது. பிறகு 1991ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் பொரு ளாதாரத்தில் ஒரு முன்னேற்றம் ஏற்பட்டது. அடமானம் வைத்த தங்கத்தை மீட்டது இந்தியா.

நிதி அமைச்சராக பொறுப்பேற்று நாடாளுமன்ற பயணத்தை துவங்கினார் சிங்.

தேர்தலுக்குப் பிறகு முதல் பட்ஜெட்டை தாக்கல் செய்தார் அவர். பிரான்ஸ் எழுத்தாளரும் அரசியல்வாதி யுமான விக்டர் ஹூகோவின் பிரபலமான வாசகத்தை மேற்கோள்காட்டி தன்னுடைய உரையை அவர் முடித்தார்.

"ஒருவருக்கான காலம் கைக்கூடினால், பூமியில் எந்த சக்தியும் அவரின் சிந்தனைகளை நிறுத்த முடியாது" என்று விக்டர் ஹூகோவை மேற்கோள் காட்டி கூறி னார்.

"இந்தியா அதனுடைய சந்தையை உலக நாடுகளுக் காக திறந்தது. இந்தியாவின் பொருளாதாரத்தில் பல மாற்றங்களை ஏற்படுத்த உள்ளது. உலகத்தில் உள்ள

(14ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# தமிழர் அரசியல் சமுதாயம் சமகாலத்துக்கு பொருத்தமானதாக இருக்க வழி என்ன?



மீரா சிறினிவாசன்

இலங்கையில் பலர் தங்களது ஜனாதிபதி அநுரா குமார திசாநாயக்க அண்மையில் இந்தியாவுக்கு மேற்கொண்ட விஜயத்தை உன்னிப்பாக அவதானித்தார்கள். இந்திய ஜனாதிபதி திரௌபதி முர்முவும் பிரதமர் நரேந்திர மோடியும் அவருக்கு வளங்கிய சம்பிரதாயபூர்வமான செங்கம்பள வரவேற்பு, அவர் கலந்துகொண்ட நிகழ்வுகள், பேச்சுவார்த்தைகள், முக்கியமாக இரு அரசாங்கங்களினாலும் வெளியிடப்பட்ட கூட்டறிக்கை எல்லாம் உள்நாட்டு ஊடகங்களின் பெருமளவு கவனத்தை ஈர்த்தன.

இந்த வருடம் செப்ரெம்பரில் திஸநாயக்க ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டதையும் பிறகு நவம்பரில் பாராளுமன்ற தேர்தலில் ஆளும் தேசிய மக்கள் சக்தி பிரமிக்கத்தக்க மூன்றில் இரண்டு பெரும்பான்மை வெற்றியை பெற்றதையும் அடுத்து அவர் வெளிநாட்டுக்கு மேற்கொண்ட முதலாவது அரசுமுறை விஜயம் இதுவாகும். இந்தியா இலங்கையின் மிகவும் பலம்பொருந்திய ஜனாதிபதிகளில் ஒருவரை மாத்திரமல்ல, ஒரு காலத்தில் இந்தியாவையும் இலங்கையில் அது செய்ததாக கருதப்பட்ட "தலையீட்டையும்" கடுமையாக எதிர்த்த ஒரு கட்சியின் (ஜனதா விமுக்தி பெரமுன - ஜே.வி.பி.) இடதுசாரித் தலைவரையும் வரவேற்றது. இந்தியாவிலும் இலங்கையிலும் இந்திய - இலங்கை உறவுகளிலும் உண்மையில் பெருமளவு மாற்றங்கள் ஏற்பட்டு விட்டன. தற்போது இருப்பது முன்றைய ஜே.வி.பி. அல்ல என்பதை அரச அதிகாரத்துக்கான அதன் எழுச்சி வெளிக்காட்டுகிறது. இலங்கையும் முன்னரைப் போன்று இல்லை. இரு வருடங்களுக்கு முன்னர் பலரும் கற்பனை செய்து பார்த்திருக்காத அளவுக்கு அதன் அரசியல் நிலக்காட்சியும் பெரியளவில் மாற்றமடைந்து விட்டது.


ஜே.வி.பி தலைமையிலான தேசிய மக்கள் சக்தியின் பிரமாண்டமான வெற்றியை அதுவும் குறிப்பாக நாட்டின் தமிழ், முஸ்லிம் மற்றும் மலையகத் தமிழ் சிறுபான்மைச் சமூகங்கள் வாழ்கின்ற வடக்கு, கிழக்கிலும் மலைநாட்டிலும் அந்த கட்சி பெற்ற வெற்றியை ஆய்வாளர்கள் இன்னமும் முழுமையாக புரிந்துகொள்ளவில்லை. அயல்நாடுகளில் சீனாவின் செல்வாக்கு வளராமல் தடுப்பதில் புதுடில்லி மூழ்கியிருக்கும் நிலையில், இந்தியாவின் முன்னுரிமைக்குரிய விவகாரங்களிலும் கூட குறிப்பிடத்தக்க நகர்வு ஏற்பட்டுவிட்டது.

**மாறிவரும் இந்திய நலன்கள்**

மற்றைய எல்லாமே மாறிவருகின்ற அதேவேளை, கொழும்பில் பதவியில் இருந்த கடந்தகால அரசாங்கங்கள் முழுநிறைவான அரசியல் இணக்கத் தீர்வொன்றை வழங்கத் தவறிய நிலையில், இலங்கையின் நீண்டகால தேசிய இனப் பிரச்சினை மாறாமல் அப்படியே இருக்கிறது. இலங்கையில் பலரைப் பொறுத்தவரை தமிழர் உரிமைகளின் நடுவர் என்று கருதப்படுகின்ற இந்தியாவின் ஈடுபாடு அதன் செல்வாக்கு காரணமாக 2009 ஆம் ஆண்டில் இருந்து போரின் முடிவுக்கு பின்னரான வருடங்கள் உட்பட மிகவும் அண்மைய தசாப்தங்களில் பெரும் எதிர்பார்ப்புக்களை ஏற்படுத்தியது.

காலஞ்சென்ற தமிழ்த் தலைவர் இராஜவரோதயம் சம்பந்தன் 2022 ஆம் ஆண்டில் "தி இந்து" வுக்கு வழங்கிய நேர்காணல் ஒன்றில் "1987 இந்திய - இலங்கை சமாதான உடன்படிக்கையை அடுத்து இலங்கை அரசியலமைப்புக்கு கொண்டுவரப்பட்ட 13 வது திருத்தம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படுவதை உறுதிசெய்வதில் இந்தியாவுக்கு "ஒரு விசேட கடமை இருக்கிறது" என்று குறிப்பிட்டார். ஆனால், இந்தியாவின் நலன்கள் இன்று வேறுபட்டவையாக இருக்கின்றன என்பது வெளிப்படையானது.

2020 டிசம்பர் 16 ஆம் திகதி புதுடில்லியும் கொழும்பும் வெளியிட்ட கூட்டறிக்கை தற்போதைய யதார்த்த நிலையை புரிந்து கொள்வதற்கான ஒரு சந்தர்ப்பத்தை வழங்குவதாக அமைகிறது. " பொதுவான ஒரு எதிர்காலத்துக்கான கூட்டுப்பங்காண்மையை பேணி வளர்த்தல்" (Fostering partnership for a



shared future) என்ற தலைப்பிலான அந்த கூட்டறிக்கை அரசியல், பொருளாதாரம் மற்றும் மூலோபாய ஒத்துழைப்பு என்று பல்வேறு விவகாரங்களை தழுவியதாக அமைந்திருக்கின்ற போதிலும், காணப்பட வேண்டியிருக்கும் அரசியல் தீர்வு அல்லது போரின் முடிவுக்கு பின்னரான நல்லிணக்கம் அல்வது தமிழர்களின் அபிலாசைகள் தொடர்பில் எதையுமே குறிப்பிடவில்லை.

ஆனால், இலங்கை ஜனாதிபதியுடன் கூட்டாக நடத்திய செய்தியாளர்கள் மகாநாட்டில் மோடி "இலங்கை அரசாங்கம் தமிழர்களின் அபிலாசைகளை நிறைவேற்றும் என்று நாம் நம்புகிறோம். இலங்கையின் அரசியலமைப்பை முழுமையாக நடைமுறைப்படுத்துவதுடன் மாகாணசபை தேர்தல்களை நடத்துவதில் தங்களுக்கு இருக்கும் கடப்பாட்டையும் அவர்கள் நிறைவேற்றுவார்கள் என்றும் நம்புகிறோம்" என்று கூறினார். 13 வது திருத்தம் தொடர்பில் அவர் எதையும் குறிப்பிடவில்லை.

ஜனாதிபதி திசாநாயக்க பிரச்சினைக்கு வித்தியாசமான முறையில் வடிவம் கொடுத்தார். "வடக்கு, தெற்கு, கிழக்கு மேற்கு என்று சகல மாகாணங்களையும் சேர்ந்த பல்வேறு சமூகங்களும் எமக்கு கிடைத்த ஆணைக்கு பங்களிப்பு செய்தார்கள். எனது மக்களினால் அத்தகைய ஒரு முக்கியமான பொறுப்பு ஒப்படைக்கப்பட்ட ஒரு தலைவர் என்ற வகையில் ஜனநாயகத்தின் சாராம்சம் என்பது பல்வேறுபட்ட அரசியல் கருத்துக்கள் மற்றும் குழுக்களின் சகவாழ்விலேயே தங்கியிருக்கிறது என்பதை நான் தெளிவாக விளங்கிக் கொள்கிறேன் " என்று அவர் கூறினார்.

மாகாணசபை தேர்தல்களை (தற்போது ஐந்து வருடங்களாக செயலிழந்து கிடக்கின்றன) நடத்துவதாகவும் பரந்தளவிலான பொதுக் கலந்தாலோசனைகளின் அடிப்படையில் புதிய அரசியலமைப்பு ஒன்றைக் கொண்டு வருவதாகவும் தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் உறுதியளிக்கப்பட்டது. ஜனாதிபதி திசாநாயக்கவும் கூட பல தடவைகள் இந்த வாக்குறுதிகளை வழங்கினார். ஆனால், அவரது அரசாங்கம் நிலைபேறான அரசியல் தீர்வொன்றுக்கான அதன் சொந்த நோக்கை இன்னமும் வெளியிடவில்லை.

தேசிய மக்கள் சக்தி 13 வது திருத்தத்தின் மொழிநடையில் பேசுவதை உறுதியாக தவிர்த்திருக்கிறது. அந்த திருத்தம் இந்தியாவினால் "திணிக்கப்பட்டதாகவே" இன்றுவரை சிங்கள பௌத்த பெரும்பான்மையினர் கருதுகிறார்கள். அதைப் பற்றி பேசினால் ஜே.வி.பி.யின் ஆதரவாளர்களுக்கு அசௌகரியமாக இருக்கும்.

> தமிழ் அரசியல் சமுதாயம் தொடர்ந்தும் பொருத்தமானதாக இருப்பதற்கும் நம்பகத்தன்மையை மீளக் கட்டியெழுப்புவதற்கும் அது பிரதிநிதித்துவப்படுத்த விரும்புகின்ற மக்களை மையப்படுத்திய அரசியலை முன்னெடுப்பதை தவிர வேறு தெரிவு கிடையாது.

இந்தியாவினால் அறிமுகப்படுத்தப்பட்ட " அதிகாரப் பரவலாக்கல் உரையாடலையும்" ஐக்கிய நாடுகளின் அமைப்புக்கள், சர்வதேச மற்றும் உள்நாட்டு உரிமைகள் குழுக்களினால் ஊக்குவிக்கப்படும் முரண்நிலை தீர்வு, நல்லிணக்கம் மற்றும் சமாதானத்தைக் கட்டியெழுப்பதலுக்கான" தாராள போக்குடைய சமாதான உரையாடலையும் தேசிய மக்கள் சக்தி தவிர்த்து ஒதுக்குகிறது என்று இலங்கையின் அரசறிவியல் நிபுணரான பேராசிரியர் ஜெயதேவ உயன்கொட "அதிகாரத்தில் தேசிய மக்கள் சக்தி குடியியல் தேசாயவாதத்தின் ஊடாக போருக்கு பின்னரான நல்லிணக்கத்துக்கான வாய்ப்புக்கள்" என்ற தலைப்பில் எழுதிய ஆய்வுக் கட்டுரையில் குறிப்பிட்டிருக்கிறார்.

"தேசிய மக்கள் சக்தி இலங்கையில் இனங்களுக்கு இடையிலான சமாதானம் மற்றும் நல்லிணக்கத்துக்கான அதன் நிகழ்ச்சித்திட்டம் தோல்வி கண்டவையாக அது கருதுகின்ற கடந்த கால முயற்சிகளின் ஒரு தொடர்ச்சியாக பார்க்கப்படுவதை விரும்பவில்லை என்று தொன்றுகிறது" என்று பேராசிரியர் உயன்கொட எழுதியிருக்கிறார்.

சர்ச்சைக்குரியதாக விளங்கும் அரசியலமைப்புக்கான 13 வது திருத்தம் இலங்கையர்கள் மத்தியில் தொடர்ச்சியாக கலப்பான உணர்வுகளை பெரும்பாலும் கடுமையான எதிர்வினையை கிளப்பி வருகிறது. தமிழர்கள் மத்தியிலும் கூட அந்த திருத்தம் அவசியமான ஒன்று ஆனால் போதுமான அதிகாரப் பரவலாக்கல் ஏற்பாடுகளை கொண்டதாக இல்லை என்றும் அல்லது சமஷ்டி முறையின் அடிப்படையிலான அரசியல் தீர்வொன்றுக்கான வரலாற்றுரீதியான கோரிக்கையை கீழ்ப்படுத்துகின்ற பிரச்சினைக்குரிய ஒரு சட்டம் என்றும் பிளவுபட்ட கருத்துக்களே இருக்கின்றன.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினதும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினதும் தலைமையிலான அரசாங்க காலத்தில் (2015 -19) புதிய அரசியலமைப்பு ஒன்றை வரைவதற்கான செயன்முறைகள் முன்னெடுக்கப்பட்ட போது 13 வது திருத்தம் மீது கவனம் குவிந்திருக்கவில்லை. அந்த செயன்முறை தோல்வி கண்டது. ஆனால், அதை தொடர்ந்து முன்னெடுத்து பூரணப்படுத்தப்படுத்தப்போவதாக திசாநாயக்க கூறியிருக்கிறார்.

கடந்த காலத்தின் இரு பிரதான செயன்முறைகளும் தமிழ் மக்களுக்கு பயன்தரவில்லை என்பது உண்மையே. ஆனால், பேராசிரியர் உயன்கொட சுட்டிக்காட்டும் இரு உரையாடல்களில் எந்த ஒன்றையும் பயன்படுத்துவதில் ஜே.வி.பி. முன்னெச்சரிக்கையாக இருக்கக்கூடியதற்கான காரணத்தை விளங்கிக் கொள்வதும் கஷ்டமானதல்ல. ஆனால், தேசிய மக்கள் சக்தியின் பெரிய வெற்றிக்கு கணிசமானளவுக்கு பங்களிப்புச் செய்த தமிழ் மக்கள் தங்களுக்காக அரசாங்கம் மனதில் கொண்டிருக்கும் திட்டம் எதுவென்று விளக்கத்தைக் கோருவதில் நியாயம் இருக்கிறது.

உள்நாட்டுப் போரின் முடிவுக்கு பின்னர் பதினைந்து வருடங்களுக்கும் கூடுதலான காலம் கடந்துவிட்ட நிலையிலும், பலவந்தமாக காணாமல் போகச் செய்யப்பட்ட தங்களது உறவினர்களுக்கு உண்மையில் நடந்தது என்ன என்று தமிழ் மக்கள் இன்னமும் உண்மையை அறிய முடியாமல் இருக்கிறது. இராணுவத்தின் வசமிருக்கும் தங்களது காணிகளை மீளப்பெறுவதற்கு அவர்கள் தொடர்ந்து போராட வேண்டியிருக்கிறது.

அழிவும் உயிரிழப்புகளும் நிறைந்த அந்த கொடூரமான வருடங்களில் சிதைந்துபோன தங்களது வாழ்வாதாரங்களை மீளக்கட்டியெழுப்புவதற்கு அவர்கள் இன்னமும் போராடிக் கொண்டிருக்கிறார்கள். அழிவைத்தந்த போரினால் பெரும் பின்னடைவுக்கு உள்ளான தங்களது மாகாணங்களை எவ்வாறு புனர்நிர்மாணம் என்பதை தீர்மானிப்பதில் தங்களுக்கு ஒரு வகிபாகம் இல்லாதவர்களாகவே தமிழர்கள் இன்னமும் இருக்கிறார்கள்.

தேசிய ஒருங்கிணைப்பை ஏற்படுத்துவது அல்லது ஐக்கியப்பட்ட இலங்கையர் என்ற அடையாளத்தை உருவாக்குவது என்ற அரசாங்கத்தின் உறுதிமொழியை போர்க்கால பொறுப்புக்கூறல், வடக்கு, கிழக்கில் அர்த்தபுஷ்டியான அபிவிருத்தி, அரசியல் கட்டமைப்பு ஆகியவற்றைக் கையாளுவதற்கு அரசாங்கத்திடம் இருக்கக்கூடிய விசேட கொள்கைகளை அடிப்படையாகக்

(14ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆட்சிக் கதிரையில் அநுர குமார திரைக்குப் பின்னால் ரில்வின் சில்வா மூக்கணாங்கயிறு யார் கையில்?

பனங்காட்டான்

எந்த நாட்டில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டாலும் அதன் முதல் நூறு நாட்கள் முக்கியமாகப் பார்க்கப்படும். இலங்கையில் மாற்றம் ஒன்றை ஏற்படுத்திய மாக்சிஸ ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க பதவியேற்று இந்த வாரத்துடன் நூறு நாட்கள் முற்றுப்பெறுகிறது.

ஜனாதிபதி தேர்தல் காலத்தில் அளிக்கப்பட்ட வாக்குறுதிகளில் இதுவரை ஏதாவது நிறைவேற்றப்பட்டுள்ளதா அல்லது எதையாவது செய்யக்கூடிய வகையில் வழிமுறைகள் முன்னெடுக்கப்பட்டிருக்கிறதா என்று திரும்பிப் பார்க்க வேண்டிய நேரம் இது.

ஊழல் ஒழிப்பு, வறுமை ஒழிப்பு (anti corruption, anti poverty) என்ற இரண்டுமே இவரது தேர்தல் விஞ்ஞாபனத்தில் மகுட வாசகங்களாக அமைந்து வாழ்வாதாரம் தேடிய மக்களை இவர் பக்கம் திரும்ப வைத்தது.

முக்கியமாக - ராஜபக்சக்களின் ஆட்சிக் காலமே ஊழலின் உச்சக்கட்டமாக தேர்தல் காலத்தில் காட்டப்பட்டது. இதனை அடிநாதமாக வைத்தே காலி முகத் திடலில் அறகலய போராட்டம் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் நடத்தப்பட்டது. இதில், அநுர குமாரவின் தாய்க்கட்சியான ஜே.வி.பி. பிரதான பங்கு வகித்தது.

மகிந்த ராஜபக்ச பிரதமர் பதவியைத் துறந்தது, ராஜபக்ச குடும்ப உறவுகள் ஒட்டுமொத்தமாக தங்கள் பதவிகளைக் கைவிட்டது என்ற வரிசையில் ஜனாதிபதியாகவிருந்த கோட்டாபய ராஜபக்ச கடல் வழியாகத் தப்பி ஓடி, நாடோடியாக பல நாடுகளைத் தஞ்சம் புகுந்து, இறுதியாக வெளிநாடொன்றில் தங்கியிருந்தவாறு தமது பதவியை துறக்க நேர்ந்ததில் ஜே.வி.பி.யினருக்கு பிரதான பங்குண்டு.

நாட்டின் பொருளாதாரத்தை மீட்டெடுக்க இடைக்கால ஜனாதிபதியாகிய ரணில் விக்கிரமசிங்கவை ஜனநாயக ரீதியாக தோற்கடித்து வீடேக வைத்தது ஜே.வி.பி.யின் மறுஅவதாரமான என்.பி.பி. என அழைக்கப்படும் தேசிய மக்கள் சக்தி.

இதன் தலைவரான அநுர குமார சாதாரண விவசாய குடும்பத்தில் பிறந்து, பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்று, சோசலிஸ மாணவர் அமைப்பின் தலைவராகி, சில காலம் இலங்கையில் அமைச்சர் பதவியும் வகித்து இப்போது ஜனாதிபதியாகியுள்ளார்.

தமிழக சினிமாவில் ரஜினிகாந்தை முதன்முதலாக பார்த்தபோது 'எங்கள் அயல்வீட்டுப் பொடியன்' என்றவாறான கவர்ச்சி ஏற்பட்டதுபோல அநுர குமாரவின் உடை, உரை, நடை, அனைவரையும் அரவணைக்கும் வசீகரம் என்பவை மக்கள் மனதில் அவரை இலேசாக புக வைத்தது. ரஜினிகாந்தின் சினிமா வெற்றியும் அநுர குமாரவின் அரசியல் வெற்றியும் பார்வைக்கு ஒன்றாயினும் நடைமுறையில் வித்தியாசமானவை. முன்னவரது நடிப்பு, பின்னவரது அவ்வாறிருக்க முடியாது. தனது முதல் நூறு நாட்களில் அநுர குமார தனது பாதையில் வெற்றி பெற்றாரா?

ஊழல் ஒழிப்பது என்ற பதாதையின் அர்த்தம் முன்னைய ஆட்சியாளர்களின் ஊழல்களை கண்டுபிடித்து தண்டனை வழங்குவது என்பதாக மட்டும் இருக்க முடியாது. தங்களின் ஆட்சியில் ஊழல் எட்டிக்கூடப் பார்க்காது விழிப்பாக இருக்க வேண்டும்.

ஊழல் என்பது நிதி மோசடி, கையாடல், கையூட்டல், வெளிநாடுகளில் பணம் பதுக்குவது, கமிஷன் பெறுவது என்பது மட்டுமல்ல. மக்கள் பிரதிநிதிகளாக தெரிவு செய்யப்படுபவர்கள் தங்கள் பெயர்களின் முன்னாலும் பின்னாலும்




போடும் பட்டங்களை இனாமாகவும், பணம் கொடுத்தும் பெற்று மக்களை ஏமாற்றக்கூடாது. அவ்வழி பார்க்கின் அநுர குமாரவின் அமைச்சரவையில் பலர் கற்றுப் பெறாத பல பட்டங்களை தேர்தல் காலங்களில் தங்கள் பெயருடன் இணைத்து ஒரு பிம்பத்தை உருவாக்கி வெற்றி கண்டுள்ளனர். சபாநாயகராகத் தெரிவு செய்யப்பட்டவர் முதலில் இந்த விடயத்தில் சிக்கி பதவியைத் துறக்க நேர்ந்துள்ளது. இவர் போன்று மேலும் பலர் பட்டங்களைச் சுமந்தவாறு இருப்பதாகவும் சுட்டிக்காட்டப்பட்டு வருகிறது.

தேர்தல் காலங்களில் உறுதியளிக்கப்பட்ட சில விடயங்களுள் ஈஸ்டர் குண்டுத்தாக்குதல் சூத்திரதாரிகளைக் கண்டுபிடித்தல், மகிந்த குடும்பத்தினர் பதுக்கி வைத்திருக்கும் கோடிக்கணக்கான பணத்தை மீட்டெடுத்தல், குற்றவாளிகளை பாரபட்சமின்றி சட்டத்தின் முன்னால் நிறுத்துதல், கோட்டாபய ஆட்சி யின்போது இயற்கை உரத்தை விநியோகிக்க மேற்கொண்ட திட்டத்தை விசாரித்தல், ரணிலின் ஆட்சிக்காலத்தில் ஜனாதிபதி நிதியத்திலிருந்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கியதை விசாரித்தல், மத்திய வங்கி நிதி மோசடி சம்பந்தப்பட்டவர்களை நாட்டுக்கு மீளக் கொண்டு வருதல் என்று சொல்லப்பட்டவைகள் எதுவும் ஆரோக்கியமாக முன்னெடுக்கப்படவில்லை. ஊடகங்களுக்குச் செய்திகளாக மட்டுமே இவை கிடைக்கப்பெற்று வருகின்றன.

அரச ஊழியர்களுக்கான சம்பள உயர்வு, வரி குறைப்பு, நிலையான பொருளாதார கட்டமைப்பு என்று சொல்லப்பட்டவையும் தேக்கத்தில் உள்ளன. முன்னைய ஆட்சியாளர்கள் போல எடுத்ததற்கெல்லாம் விசாரணைக்குழு, கமிஷன் என்பது சர்வ சாதாரணமாகி விட்டது.

சிறுபான்மை சமூகத்தினரின் பிரச்னைகள் வேதாளம் மீண்டும் மரமேறிய கதையாகவுள்ளது. ஆயிரக்கணக்கான நாட்களாக தொடரும் காணாமலாக்கப்பட்டோரின் போராட்டத்துக்கு நியாயமான பதில் இல்லை. 1987 இலங்கை - இந்திய ஒப்பந்தம் பிரசவித்த மாகாண சபைத் தேர்தலுக்கு காலம் பின்போடப்படுகிறது. 13ஆம் திருத்தம் பற்றி உத்தரவாதம் துமில்லை. புதிய அரசியலமைப்பின் மூலம் இனப்பிரச்னைக்கு அனைவரும் ஏற்றுக் கொள்ளும் தீர்வு காணப்படுமென்று சொல்லப்பட்டது. இதற்கு மூன்றாண்டுகள் செல்லலாமென இப்போது சொல்லப்படுகிறது.

> “அநுர குமார திஸநாயக்க ஜனாதிபதியாகப் பதவியேற்று நூறு நாட்கள் ஆகிறது. ஆட்சிக் கதிரையில் இவர் இருந்தாலும் தாய்க்கட்சியான ஜே.வி.பி.யின் ரில்வின் சில்வாவே திரைக்குப் பின்னால் நின்று காய்களை நகர்த்துகிறார். ஒரே பாதையில் இரண்டு வண்டிகளும் ஓடுவதுபோல் தெரிந்தாலும் ஒன்றுடன் ஒன்று உரசுப்படும் சாத்தியம் இல்லாமலில்லை.”

ஆகப்பிந்திய அமைச்சரவை முடிவின்படி நாடு முழுவதுமுள்ள அரச கட்டமைப்புகளை ஒன்றிணைக்க ஏற்பாடாகி வருகிறது. 81 அரச திணைக்களங்கள், 25 மாவட்ட நிர்வாக அலகுகள், 339 பிரதேச செயலர் அலுவலகங்கள், 340 வரையான கூட்டுத்தாபனங்கள் - சபைகள், 1110 வரையான பொது நிறுவனங்களால் வருடத்துக்கு 140 மில்லியன் செலவாவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதனால் இவைகளை சோசலிஸ நாட்டுப் பாணியில் இணைத்துக் குறைக்க யோசிக்கப்படுகிறது.

ஏற்கனவே ரணில் விக்கிரமசிங்க அரசினால் பின்போடப்பட்ட உள்ளூராட்சிச் சபைத் தேர்தல்களை முன்னர் அறிவித்ததுபோல 2025 முற்பகுதியில் நடத்தாது ஏப்ரல் வரை பின்போட முடிவாகியுள்ளது.

முதல் நூறு நாட்களில் அநுர குமாரவின் மிகப்பெரிய சாதனை அயல் நாடான இந்தியாவுக்கு மேற்கொண்ட குறுகிய விஜயம். ஜனாதிபதியான பின்னரான இவரது முதலாவது வெளிநாட்டு விஜயம் இதுவாகும். ஆடம்பரமற்ற உடையில் வழமையான பாணியில் அங்கு சென்ற அநுர குமாரவுக்கு ஆடம்பரமான வரவேற்பு வழங்கி குளிர வைத்தார் இந்திய பிரதமர் மோடி. இலங்கை ஜனாதிபதியை ஒட்டுமொத்தமாக கொள்முதல் செய்வது போன்ற வரவேற்பு வழங்கப்பட்டது. அநுர குமாரவின் தோளில் தமது கைகளைப் போட்டவாறு பிரதமர் மோடி நடைபயின்ற படத்துக்கு நல்ல கிராக்கி.

“நீ ஒரு சின்ன பெடியன், நான் சொல்வதைக் கேள்” என்று கூறுவது போன்ற பாணியில் இந்த ஒளிப்படம் விளக்கம் தருகிறது. 1987ல் ஜே.ஆர். ஜெயவர்த்தன - ராஜீவ் காந்தி ஒப்பந்தம் செய்யப்பட்ட வேளையில் அரசியலில் ஒரு மாணவனாக ஜே.வி.பி.யில் இணைந்தவர் அநுர குமார. இந்த ஒப்பந்தத்தில் கையொப்பமிட ராஜிவ் காந்தி கொழும்பு சென்றபோது ராஜிவின் வயது ஜே.ஆரின் அரசியல் அனுபவ வயதுக்கும் குறைவானது என்று பிரபல ஊடகங்கள் செய்தி வெளியிட்டதை, அநுர குமாரவின் தோளில் மோடி கைபோட்டவாறு நடந்த படம் ஞாபகப்படுத்தியது.

அநுர குமாரவின் முதல் நூறு நாட்களில் அதிமுக்கியமான ஒன்றாக பளிச்சிடுவது ஜே.வி.பி.யின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா ஏற்றிருக்கும் வகிபாகம். 13ஆம் திருத்தத்துக்கு இடமில்லையென்றும் மாகாண சபைகள் ஒழிக்கப்படுமென்றும் சில நாட்களுக்கு முன்னர் இவர் பகிரங்கமாகத் தெரிவித்ததை இதுவரை அநுர குமார தரப்பு மறுக்கவில்லை.

1987ல் இலங்கை - இந்திய ஒப்பந்தம் செய்யப்பட்டபோது இந்த ஒப்பந்தத்தை எதிர்த்து இரத்தக் களரி ஏற்படுத்தியவர்கள் ஜே.வி.பி.யினர் என்பது வரலாறு. வடக்கும் கிழக்கும் இணைந்ததாக தமிழர் தாயக மாகாண சபை இருக்கக்கூடாது என்பதற்காக உச்ச நீதிமன்றம் சென்று சட்டரீதியாக அதற்குத் தடை பெற்றவர்கள் ஜே.வி.பி.யினர் என்பதும் வரலாறு. ஆதலால் ஜே.வி.பி.யின் பொதுச்செயலாளர் கூறுவது அவரது அமைப்பின் கொள்கை ரீதியான முடிவாகவே இருக்கும்.

இதனூடாக ஒன்று புலப்படுகிறது. ஆட்சிக் கதிரைக்கு தலைவராக இருப்பவர் தேசிய மக்கள் சக்தியின் தலைவரான அநுர குமார திஸநாயக்க. திரைக்குப் பின்னால் நின்று ஆட்சியை நெறிப்படுத்துபவர் தாய்க்கட்சியின் பொதுச் செயலாளரான ரில்வின் சில்வா. ஆரம்பத்தில் இரண்டு வண்டிகளும் அருகருகே செல்வதாக இருந்தாலும் ஒன்றுடன் ஒன்று உரசப்படும் சாத்தியம் இல்லாமல் இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13ஆவது திருத்தத்தை தமிழர்கள் என்ன செய்யப்போகிறார்கள்?



வீரகத்தி தனபாலசிங்கம்

பதின்மூன்றை துரதிர்ஷ்டம் வாய்ந்த இலக்கம் என்று சொல்வார்கள். அதனால் தான் இலங்கையின் அரசியலமைப்புக்கு கொண்டுவரப்பட்ட பதின்மூன்றாவது திருத்தத்தை 37 வருடங்களாக நடைமுறைப்படுத்த முடியாமல் இருக்கிறதோ தெரியவில்லை.

அண்மையில் இலங்கை ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க இந்தியாவுக்கு மேற்கொண்ட உத்தியோகபூர்வ விஜயத்தின்போது அவருடனான பேச்சுவார்த்தைக்கு பிறகு புதுடில்லியில் கூட்டாக செய்தியாளர்களை சந்தித்த இந்திய பிரதமர் நரேந்திர மோடி பதின் மூன்றாவது திருத்தம் குறித்து எதையும் கூறிப்பிடத் தவறியதை அடுத்து அது குறித்து ஒரு சலசலப்பு ஏற்பட்டது. ஊடகங்களும் அரசியல் அவதானிகளும் காட்டிய அளவுக்கு தமிழ் அரசியல் கட்சிகளும் அவற்றின் தலைவர்களும் அதில் அக்கறை காட்டவில்லை.

இலங்கையின் முன்னைய ஜனாதிபதிகளுடனான செய்தியாளர்கள் சந்திப்பில் இலங்கை அரசாங்கம் 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டியதன் அவசியத்தை தவறாமல் வலியுறுத்திவந்த மோடி இந்த தடவை அதை தவிர்த்துக் கொண்டது பிரத்தியேகமான வித்தியாசமாக தெரிந்தது.


ஆனால், இலங்கை தமிழரசு கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் பேச்சாளருமான எம்.ஏ. சுமந்திரன் இலங்கையின் அரசியலமைப்பை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்று மோடி கூறியிருப்பதால் பதின்மூன்றாவது திருத்தம் குறித்து கூறாதது ஒரு பிரச்சினை அல்ல என்றும் அரசியலமைப்புக்குள் தான் அந்த திருத்தமும் இருக்கிறது என்றும் குறிப்பிட்டார்.

இந்திய பிரதமர் வேறு எந்த நாட்டினதும் தலைவர்களைச் சந்திக்கும்போது அவர்களிடம் தங்களது நாடுகளின் அரசியலமைப்பை நடைமுறைப்படுத்துமாறு கேட்பதில்லை. சொந்த அரசியலமைப்பை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்று மற்றைய நாடுகளின் தலைவர்களுக்கு ஒரு நாட்டின் தலைவர் கூறவேண்டியதுமில்லை.

ஆனால், இலங்கை ஜனாதிபதிகளிடம் இந்திய தலைவர்கள் அரசியலமைப்பை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்று கேட்பதற்கு 1987 ஜூலை இந்திய - இலங்கை சமாதான உடன்படிக்கைக்கு பிறகு மாகாணசபைகளை அறிமுகப்படுத்துவதற்காக அரசியலமைப்புக்கு கொண்டுவரப்பட்ட 13 வது திருத்தம் மாத்திரமே காரணம். அதனால் ஜனாதிபதி திசாநாயக்க முன்னிலையில் அந்த திருத்தம் பற்றி குறிப்பிடுவதை மோடி தவிர்த்தமைக்கு ஒரு பிரத்தியேக காரணம் இருக்கிறது என்பதில் சந்தேகமில்லை.

தென்னிலங்கை அரசியல் சமுதாயம் மற்றும் மக்கள் மத்தியில் அந்த திருத்தத்துக்கு கடுமையான எதிர்ப்பு இருப்பதனால் அதைப் பற்றி கூறுவதன் மூலமாக ஜனாதிபதி திசாநாயக்கவுக்கு உள்நாட்டில் அசௌகரியத்தை ஏற்படுத்துவதற்கு இந்திய பிரதமர் விரும்பவில்லை என்று தோன்றுகிறது. இந்திய விரோத கடந்தகாலம் ஒன்றைக் கொண்ட ஜனதா விமுக்தி பெரமுனவின் (ஜே.வி.பி.) தலைமையிலான இலங்கை அரசாங்கம் ஒன்று இந்தியாவுடன் சுமுகமான உறவுகளை வளர்ப்பதில் அக்கறை கொண்டிருக்கும் தற்போதைய சூழ்நிலையை பழுதாக்குவதற்கு இந்திய அரசாங்கம் விரும்பவில்லை என்று தெரிகிறது. மோடி அவ்வாறு நடந்து கொண்டது இந்தியாவுடன் விவகாரங்களை கையாளுவதில் தங்களது அணுகுமுறைகளுக்கு கிடைத்த வெற்றி என்று ஜே.வி.பி. தலைவர்கள் சிலவேளை பெருமைப்படவும் கூடும்.

தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வைக் காண்பதற்கு உள்நாட்டில் முன்னெடுக்கப்பட்ட எந்தவொரு முயற்சியுமே வெற்றி பெற்றதில்லை. இந்தியாவின் தலையீட்டின் விளைவாக



> அரசாங்கம் மூன்று வருடங்களில் கொண்டு வரவிருப்பதாக கூறுகின்ற புதிய அரசியலமைப்பில் மாகாணசபைகள் 13ஆவது திருத்தத்தில் உள்ள அதிகாரங்களும் உள்ளடக்கப்பட வேண்டுமானால் முதலில் தமிழர் அவை தங்களுக்கு வேண்டுமென்று உறுதியாக நிற்கவேண்டும். தமிழ்கள் வெறுக்கின்ற ஓர் ஏற்பாட்டை அரசியலமைப்பில் உள்ளடக்கவேண்டும் என்று அரசாங்கத்துக்கு என்ன தேவை?

கொண்டுவரப்பட்ட காரணத்தினால் மாத்திரமே இன்று வரையில் மாகாணசபைகள் முறை நீடிக்கிறது. ஆனால், இந்தியாவின் இடையறாத வலியுறுத்தல்களுக்கு மத்தியிலும் கூட 13ஆவது திருத்தம் உகந்த முறையில் நடைமுறைப்படுத்தப்படாமல் இருப்பதை இலங்கை அரசாங்கங்கள் உறுதி செய்துகொண்டன.

அதனால் இந்தியாவுக்கு அண்மைக்காலமாக 13ஆவது திருத்தம் குறித்த அரைகுறையான அக்கறையும் கூட இனிமேல் இல்லாமல் போகுமேயானால், பல்வேறு குறைபாடுகளுக்கு மத்தியிலும், இலங்கை அரசியல்மைப்பில் இருக்கின்ற ஒரேயொரு அதிகாரப் பரவலாக்கல் ஏற்பாடும் கூட இல்லாமல் போகக்கூடிய ஆபத்தை உணர்ந்தவர்கள் மோடியின் செயல் குறித்து விசனத்தை வெளிப்படுத்துகிறார்கள்.

புதிய அரசியலமைப்பு கொண்டுவரப்படும் வரை மாகாணசபைகள் முறை தொடர்ந்து இருக்கும் என்று அரசாங்கம் கூறுகிறது. ஆனால், அதற்கு பிறகு என்ன நடக்கும் என்பது எவருக்கும் தெரியாது. மூன்று வருடங்களுக்கு பிறகு கொண்டு வரவிருப்பதாக அரசாங்கம் கூறுகின்ற புதிய அரசியலமைப்பில் மாகாணங்களுக்கான அதிகாரப்பரவலாக்கல் ஏற்பாடு ஒன்றை உள்ளடக்குவதில் மெய்யான அக்கறை காட்டப்படுமா? மாகாணமே அதிகாரப்பரவலாக்கல் அலகாக தொடர்ந்து இருக்குமா? தற்போது 13 வது திருத்தத்தில் உள்ள அதிகாரங்களாவது முழுமையாக புதிய அரசியலமைப்பில் உள்வாங்கப்படுமா? அவ்வாறு உள்வாங்கப்படுவதை உறுதி செய்யக்கூடிய அரசியல் வல்லமை தமிழ்க் கட்சிகளிடம் இருக்கிறதா? இந்தியா அதை வலியுறுத்துமா? இவை விடைவேண்டி நிற்கும் முக்கியமான கேள்விகள்.

இந்தியாவின் தலையீட்டின் விளைவாக கொண்டுவரப்பட்டதன் காரணத்தால் இன்று வரை நீடிக்கும் 13ஆவது திருத்தம் முற்றாக இல்லாமல் செய்யப்பட்டால் இன்றைய அரசியல் சூழ்நிலையில் புதியதொரு அதிகாரப்பரவலாக்கல் ஏற்பாட்டை கொண்டு வருவதற்கு அரசாங்கத்தை இணங்க வைக்கக்கூடிய அல்லது நெருக்குதல் கொடுக்கக்கூடிய அரசியல் வல்லமை வடக்கு, கிழக்கு தமிழ்க் கட்சிகளிடம் இருக்கிறதா?

பதின்மூன்றாவது திருத்தம் தொடர்பில் இதுவரையில் தமிழ்க்கட்சிகளின் அணுகுமுறைகளின் விளைவாக இந்தியாவுக்கு ஏற்பட்டிருக்கும் அதிருப்தியை அடிப்படையாகக் கொண்டு நோக்கும்போது தமிழர் பிரச்சினையில் இந்தியா கொழும்புக்கு எந்தவிதமான நெருக்குதலையும் இனிமேல் கொடுக்கக்கூடிய சாத்தியத்தை எதிர்பார்க்கமுடியாது. தமிழர் பிரச்சினை தொடர்பில் ஒன்றிணைந்த நிலைப்பாட்டை எடுப்பதற்கு ஐக்கியப்படுமாறு இந்தியா இடையறாது விடுத்துவரும் வேண்டுகோளையும் தமிழ்க் கட்சிகள் கரிசனையுடன் நோக்கவில்லை. இலங்கையில் தனது பொருளாதார மற்றும் மூலோபாய நலன்களை பேணிக்காப்பதற்கு பயன்படுத்தக்கூடிய ஒன்றாக தமிழர் பிரச்சினையை கருதும் நிலையில் இந்தியா இனிமேலும் இல்லை என்பதற்கான தெளிவான அறிகுறிகள் தெரிகின்றன.

இது இவ்வாறிருக்க, தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் சகல சமூகங்களையும் அரவணைக்கும் வகையிலான ஓர் அரசியல் அணுகுமுறை குறித்து பொதுப்படையாக பேசுகின்றதே தவிர, அதிகாரப்பரவலாக்கம் குறித்து தெளிவான நிலைப்பாட்டை வெளிப்படுத்தவில்லை. இது தொடர்பில் இலங்கையின் முக்கியமான அரசறிவியல் நிபுணர் பேராசிரியர் ஜெயதேவ உயன்கொட அண்மையில் தெரிவித்த ஒரு கருத்து முக்கியமாக கவனிக்கப்பட வேண்டியதாகும்.

"இந்தியாவினால் அறிமுகப்படுத்தப்பட்ட அதிகாரப்பரவலாக்கல் செயன்முறையையும் தாராளவாத சிந்தனையுடையவர்கள் முன்வைக்கும் நல்லிணக்கச் செயன்முறையையும் தேசிய மக்கள் சக்தி தவிர்த்து ஒதுக்குகிறது. இனங்களுக்கு இடையிலான சமாதானம் மற்றும் நல்லிணக்கத்துக்கான அதன் அரசியல் நிகழ்ச்சித்திட்டம் "தோல்வி கண்ட" கடந்தகால முயற்சிகளின் ஒரு தொடர்ச்சியாக நோக்கப்படுவதை தேசிய மக்கள் சக்தி விரும்பவில்லை என்றே தோன்றுகிறது" என்று அவர் கூறினார்.

13 வது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தப் போவதாக முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அறிவித்ததை தொடர்ந்து மூண்ட சர்ச்சைகளின் போது ஒரு கட்டத்தில் அநுரகுமார திசாநாயக்க அந்த திருத்தம் தங்களது பிரச்சினைக்கு தீர்வாக அமையும் என்று தமிழ் மக்கள் நம்பினால் அதை ஏற்றுக்கொள்வதில் தேசிய மக்கள் சக்திக்கு பிரச்சினை எதுவுமில்லை என்று கூறினார். பிரதமர் ஹரிணி அமரசூரியவும் கூட அரசியலமைப்பில் நீண்டகாலமாக இருந்துவரும் 13 வது திருத்தம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட்டு தமிழ் மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும் என்று கூறினார். ஆனால் எதிர்ப்புகள் தீவிரமடையத் தொடங்கியதும் அவர்கள் அதைப் பற்றி பேசுவதை தவிரத்துக் கொண்டார்கள்.

ஜனாதிபதி தேர்தல் விஞ்ஞாபனங்களில் விக்கிரமசிங்கவும் ஐக்கிய மக்கள் சக்தி தலைவர் சஜித் பிரேமதாசவும் 13 வது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவது பற்றி குறிப்பிட்டார்கள். ஆனால் ஜனாதிபதி திசாநாயக்க தனது விஞ்ஞாபனத்தில் அதைப்பற்றி எதையும் கூறாமல் 2015 - காலப்பகுதியில் மைத்திரி - ரணில் அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்ட புதிய அரசியலமைப்பு வரைவுச் செயன்முறையை தொடர்ந்து முன்னெடுத்து நிறைவு செய்து பிரச்சினைகளுக்கு தீர்வைக் காணப்போவதாக வாக்குறுதியளித்தார்.

தேசிய மக்கள் சக்தி அதன் விஞ்ஞாபனத்தில் 13ஆவது திருத்தத்தை தவிர்த்திருந்தது குறித்து விமர்சனங்கள் கிளம்பியபோது அது குறித்து கருத்து வெளியிட்ட சுமந்திரன், நல்லாட்சி அரசாங்க காலத்தில் முன்னெடுக்கப்பட்ட அரசியலமைப்பு வரைவுச் செயன்முறையின்போது அதிகாரப்பரவலாக்கம் தொடர்பில் 13ஆவது திருத்தத்துக்கும் அப்பால் செல்வது குறித்து

(11ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13ஆவது திருத்தத்தை தமிழர்கள் என்ன செய்யப்போகிறார்கள்?

(10ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆராயப்பட்டதால் அந்த திருத்தம் பற்றி ஜனாதிபதி குறிப்பிட வேண்டிய தேவை இருக்கவில்லை என்று கூறினார்.

ஆனால், மூன்று வருடங்களில் புதிய அரசியலமைப்பு வரும் வரை மாகாண சபைகள் முறை தொடர்ந்தும் நடைமுறையில் இருக்கும் என்று அரசாங்கம் கூறிக் கொண்டிருந்தால் மாத்திரம் போதாது. அந்த இடைப்பட்ட காலத்தில் மாகாணசபை தேர்தல்களை நடத்துவதுடன் 13 வது திருத்தத்தில் உள்ள அதிகாரங்களை சாத்தியமானளவுக்கு நடைமுறைப்படுத்துவதே சிறுபான்மைச் சமூகங்களின் அபிலாசைகள் விடயத்தில் ஓரளவுக்கேனும் நம்பகத்தன்மையை பெறுவதற்கு ஒரே வழி.

மாகாணசபைகளையோ அல்லது 13 வது திருத்தத்தையோ இல்லாமல் செய்வதற்கு இந்தியா ஒருபோதும் கொழும்பை அனுமதிக்காது என்ற நம்பிக்கை தமிழ்க் கட்சிகளுக்கு இருந்து வந்திருக்கிறது. ஆனால், ஜனாதிபதி திசாநாயக்கவுடனான செய்தியாளர்கள் சந்திப்பில் பிரதமர் மோடி 13 வது திருத்தத்தை பற்றி குறிப்பிடுவதை தவிர்த்ததன் மூலமாக மறைமுகமாக தெரிவிக்கப்பட்ட செய்தியை தமிழ்க் கட்சிகள் விளங்கிக் கொண்டனவோ தெரியவில்லை. நீணடகாலத்துக்கு பிறகு இந்திய - இலங்கை கூட்டறிக்கையிலும் தமிழர் பிரச்சினை சம்பந்தமாக எதுவும் குறிப்பிடப்படவில்லை.

இந்த கருத்துக்களை கட்டுரையாளர் எக்ஸ் சமூக ஊடகத்தில் சில தினங்களுக்கு முன்னர் பதிவுசெய்தபோது அதற்கு தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தனது பிரதிபலிப்பை வெளியிட்டிருந்தார்.

"ஒற்றையாட்சியின் கீழ் எந்த அதிகாரப்பரவலாக்கத்துக்கும் இடமில்லை என்று நீதிமன்றங்கள் திரும்பத்திரும்ப கூறியிருக்கும்போது 13 வது திருத்தத்தின் நடைமுறைப்படுத்தல் எவ்வாறு இடம்பெறும் என்பதை கூறுங்கள். அதிகப் பெரும்பான்மையான தமிழ்கள் 13 ஆவது திருத்தத்தை அரசியல் தீர்வாக ஏற்றுக் கொள்ளவில்லை. அரசியல் தீர்வுக்கான தொடக்கப்புள்ளியாகக் கூட அந்த திருத்தம் ஒருபோதும் இருக்க முடியாது. அதைப் பற்றி பேசுவதை இந்தியா நிறுத்தினால் மிகுந்த மகிழ்ச்சியடையும் ஒருவனாக நான் இருப்பேன்.

"இந்திய - இலங்கை சமாதான உடன்படிக்கையில் தமிழர்களின் சார்பில் இந்தியா கைச்சாத்திட்டது என்பது முக்கியமானது. அந்த உடன்படிக்கையில் தமிழர்களுக்கு நம்பிக்கை இருக்கும் வரை அவர்களின் சார்பில் தலையீடு செய்யவேண்டிய கடப்பாடு இந்தியாவுக்கு உண்டு என்று நான் நினைக்கிறேன். ஆனால், இன்றைய சூழ்நிலையில் உடன்படிக்கை பொருத்தமற்றது என்று இந்தியா உணருகின்றது என்றால் அது முற்று முழுதாக வேறுபட்ட ஒரு விடயம். எவ்வளவு விரைவாக அதை நாம் அறியமுடியுமோ அவ்வளவுக்கு அது நல்லது" என்று அவர் எக்ஸ் சமூக ஊடகத்தில் பதிவுசெய்திருக்கிறார்.

இந்த பதிவு 13ஆவது திருத்தம் பற்றி இந்தியா இனிமேலும் பேசுவதை அவர் விரும்பவில்லை என்பதை காட்டுகிறது. ஆனால், சமஷ்டி முறையின் அடிப்படையிலான அரசியல் தீர்வுக்கான தமிழர்களின் கோரிக்கைக்கு இந்தியா ஆதரவு அளிக்க வேண்டும் என்பது அவரது விருப்பமாக இருக்கிறது. பாராளுமன்ற தேர்தலுக்கு பிறகு கொழும்பில் உள்ள இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜாவைச் சந்தித்த கஜேந்திரகுமார் இது தொடர்பில் பேசினார். அத்துடன் அரசாங்கம் கொண்டு வரக்கூடிய புதிய அரசியலமைப்பில் ஒற்றையாட்சி முறைக்குள் தமிழ் மக்களின் அபிலாசைகள் கட்டுப்படுத்தப்படாமல் இருப்பதை இந்தியா உறுதி செய்யவேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

கஜேந்திரகுமாரின் இந்த விருப்பத்தையும் கோரிக்கையையும் தமிழர்களில் எவர்தான் எதிர்க்கப்போகிறார்? ஒற்றையாட்சி நீக்கப்பட்டு இனப்பிரச்னைக்கு சமஷ்டி அடிப்படையிலான அரசியல் தீர்வு கிடைக்கும் என்றால் அதைவிட வும் இலங்கை தமிழர்களுக்கு மகிழ்ச்சி தரக்கூடியது வேறு என்ற இருக்கப்போகிறது?



ஆனால், தற்போதைய சூழ்நிலையில் அதற்கான சாத்தியம் இருக்கிறதா என்ப தையும் வெறுமனே இந்தியாவிடமும் சர்வதேச சமூகத்திடமும் கோரிக்கையை மாத்திரம் விடுப்பதன் மூலம் அதைச் சாதிக்க முடியுமா என்பதையும் அவர் சிந்தித்துப் பார்க்க வேண்டும். சமஷ்டி முறையின் அடிப்படையிலான அரசியல் தீர்வைக் கோரும் தமிழ்க் கட்சிகளிடம் அதை அடைவதற்கான அரசியல் தந்திரோபாயமோ செயல் திட்டமோ இருக்கிறதா? வழிமுறையைப் பற்றி எந்தவிதமான முன்யோசனையும்

> **இந்தியாவுக்கு அண்மைக்காலமாக 13வது திருத்தம் குறித்த அரைகுறையான அக்கறையும் கூட இனிமேல் இல்லாமல் போகுமேயானால், பல்வேறு குறைபாடுகளுக்கு மத்தியிலும், இலங்கை அரசியலமைப்பில் இருக்கின்ற ஒரேயொரு அதிகாரப்பரவலாக்கல் ஏற்பாடும் கூட இல்லாமல் போகக்கூடிய ஆபத்தை உணர்ந்தவர்கள் மோடியின் செயல் குறித்து விசனத்தை வெளிப்படுத்துகிறார்கள்.**

இன்றி முன்னைய தமிழ்த் தலைவர்கள் தனி நாட்டுக் கோரிகையை முன்வைத்ததன் விளைவை அல்லவா இன்று இலங்கை தமிழ்கள் அனுபவித்துக் கொண்டிருக் கிறார்கள்.

13 ஆவது திருத்தத்தைக் கூட இதுகால வரை நடைமுறைப்படுத்தாமல் இருக்கும் இலங்கை அரசாங்கங்களிடம் சமஷ்டி அடிப்படையிலான அரசியல் தீர்வை நீங்கள் எவ்வாறு எதிர்பார்க்க முடியும் என்று தமிழ்க் கட்சிகளின் தலைவர்களை சந்தித்த ஒரு சந்தர்ப்பத்தில் இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் கூறியபோது கஜேந்திரகுமாரும் அங்கு இருந்தாரோ தெரியவில்லை.

புதிய பாராளுமன்றத்தில் இருக்கும் வடபகுதி உறுப்பினர்களில் நீண்ட கால அனுபவத்தைக் கொண்டவராகவும் மிகுந்த விவாதத் திறமையுடன் காத்திரமான பங்களிப்பைச் செய்யக்கூடிய ஆற்றலையும் அறிவையும் கொண்டவராகவும் விளங்கும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் இதுகாலவரையான தங்களது கோட்பாட்டுப் பிடிவாதமான அரசியல் அணுகுமுறை மூலமாக தங்களது குறிக்கோளில் எந்தளவுக்கு முன்னோக்கி நகரக்கூடியதாக இருந்திருக்கிறது என்பதைச் சிந்தித்துப் பார்ப்பது பயனுடையதாக இருக்கும்.

விடுதலை புலிகளின் தலைவர் பிரபாகரன் 13ஆவது திருத்தத்தை மாத்திரமல்ல, அதற்கு பின்னரான காலப் பகுதியில் முன்னெடுக்கப்பட்ட சகல சமாதான முயற்சிகளையும் தீர்வு யோசனைகளையும் நிராகரிப்பதற்கு அவர் தரப்பில் "வலுவான காரணம்" இருந்தது. அதாவது ஆயுதப் போராட்டத்தின் மூலம் தனது இலக்கை அடையமுடியும் என்று அவர் நம்பினார். பல வருடங்களாக அரசாங்கப் படைகளுக்கு சவால் விடுக்கக்கூடியதாக ஆயுதமேந்திய இயக்கம் ஒன்று அவரிடம் இருந்தது. இறுதியில் உள்நாட்டுப்போர் எவ்வாறு முடிவுக்கு வந்தது என்றது வேறு விடயம்.

ஆனால், இன்று தமிழ்க் கட்சிகளிடம் என்ன பலம் இருக்கிறது? குறைந்த பட்சம் தமிழ் மக்களின் சார்பில் ஐக்கியப்பட்டு ஒன்றிணைந்த நிலைப்பாடொன்றை முன்வைப்பதற்கு கூட தமிழ்க் கட்சிகளினால் இயலாமல் இருக்கிறது. தமிழ் மக்களும் இந்த கட்சிகளிடமிருந்து தூர விலகிக்கொண்டிருக் கிறார்கள்.

ஐக்கியப்பட்டு செயற்படாத காரணத்தினால் தான் பாராளுமன்ற தேர்தலில் தமிழ்க்கட்சிகளை தமிழ் மக்கள் வெறுப்பதாக அவற்றின் தலைவர்கள் நினைக்கிறார்கள் போலும். அது மாத்திரம் காரணமல்ல. போரின் முடிவுக்கு பின்னரான காலகட்டத்தில் தங்களது பிரச்சினைகளுக்கு தீர்வுகளைக் காண்பதற்கு நடைமுறைச் சாத்தியமானதும் விவேகமானதுமான அணுகுமுறைகளை தமிழ்க்கட்சிகள் கடைப்பிடிக்காமல் வெறுமனே தேசியவாத சுலோகங்களை உச்சரித்துக் கொண்டிருந்ததால் அவற்றின் மீது மக்கள் வெறுப்படைந்தார்கள் .

நீண்டகால அரசியல் தீர்வு குறித்து நெடுகவும் பேசிக்கொண்டிருப்பது சுலபம். ஆனால் மக்கள் எதிர்நோக்குகின்ற உடனடிப் பிரச்சினைகளை கையாளுவதில் அக்கறை காட்டாமல் அவ்வாறு பேசிக் கொண்டிருந்தால் மக்களிடம் இருந்து அன்னியப்பட வேண்டி வரும். தங்களுக்கு அதுவே நேர்ந்தது என்பதை தமிழ்க் கட்சிகள் விளங்கிக் கொண்டனவோ தெரியவில்லை.

இன்று தமிழ் மக்கள் மத்தியில் தங்கள் குரலுக்கு மீண்டும் இடம்தேட வேண்டிய ஒரு பரிதாப நிலையில் தமிழ்க்கட்சிகள் இருக்கின்றன. இனப் பிரச்சினை தீர்வு குறித்து எந்தவிதமான வாக்குறுதியையும் வழங்காத தென்னிலங்கை கட்சியொன்றை ஆதரித்ததன் மூலம் தமிழ் மக்கள் தமிழ் அரசியல் கட்சிகளுக்கு கனதியான செய்தியொன்றைக் கூறியிருக்கிறார்கள்.

தமிழ் அரசியல்வாதிகளில் பலர் மக்களிடமிருந்து தாங்கள் தனிமைப்பட்டதைப் பற்றி சிந்திக்காமல் புலம்பெயர் தமிழ்ச் சமூகத்தின் மத்தியில் உள்ள குறிப்பிட்ட சில சக்திகளைத் திருப்திப்படுத்தும் அரசியல் வழிமுறைகளில் அக்கறை காட்டுகிறார்கள்.

அண்மையில் கனடாவுக்கு சென்றிருந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் சிவஞானம் சிறீதரனும் சண்முகம் குகதாசனும் அந்த நாட்டில் இலங்கை தமிழரசு கட்சியின் கிளைகளை திறக்க வேண்டிய அவசியம் குறித்து பேசினார்கள். வடக்கு, கிழக்கில் தமிழரசு கட்சியின் எத்தனை கிளைகள் துடிப்பாக இயங்குகின்றன என்பதை அவர்கள் முதலில் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

13 வது திருத்தம் போதுமானது என்று யாரும் வாதிடவில்லை. தமிழர் அரசியல் சமுதாயம் அதன் வரலாற்றில் மிகவும் மோசமாக பலவீனமடைந்து சிதறுப்பட்டிருக்கும் நிலையில் அதுவும் இல்லாமல் போனால் நிலைமை என்ன? அந்த திருத்தத்தை காப்பாற்றாமல் மேலும் கூடுதலான அதிகாரப் பரவலாக்ல் ஏற்பாடுகளைப் பற்றியோ அல்லது சமஷ்டித் தீர்வு பற்றியோ பேசுவதில் உண்மையில் அர்த்தமில்லை. அந்த திருத்தத்தை இல்லாமல் செய்துவிட வேண்டும் என்று கங்கணம் கட்டிக் கொண்டு நிற்கின்ற தென்னிலங்கை சக்திகளை வலுப்படுத்தக்கூடிய நிலைப்பாடுகளை எடுப்பதில் உள்ள ஆபத்தை தமிழ்க் கட்சிகள் புரிந்துகொண்டு கற்பனாவாத அரசியல் உலகத்தில் இருந்து தமிழ்க்கட்சிகள் நிஜ உலகிற்கு இறங்கி வரவேண்டும்.

அரசாங்கம் மூன்று வருடங்களில் கொண்டு வரவிருப்பதாக கூறுகின்ற புதிய அரசியலமைப்பில் மாகாண சபைகள் 13ஆவது திருத்தத்தில் உள்ள அதிகாரங்களும் உள்ளடக்கப்பட வேண்டுமானால் முதலில் தமிழர் அவை தங்களுக்கு வேண்டுமென்று உறுதியாக நிற்கவேண்டும். தமிழ்கள் வெறுக்கின்ற ஒரு ஏற்பாட்டை அரசியலமைப்பில் உள்ளடக்கவேண்டும் என்று அரசாங்கத்துக்கு என்ன தேவை? தமிழர்களும் சிங்களவர்களும் வேறுபட்ட காரணங்களுக்காக வெறுக்கின்ற ஒரு ஏற்பாட்டைப் பற்றி பேசிக் கொண்டிருப்பதற்கு இந்தியாவுக்கு என்ன தேவை?

தற்போதைய நிலைவரம் வேண்டி நிற்பதற்கு இணங்க நிதானமாகச் சிந்தித்து செயற்படுவதற்கு இனிமேலும் தவறினால் இறுதியில் இலங்கை தமிழ் மக்கள் எதையுமே பெறமுடியாத ஒரு மக்கள் கூட்டமாக விடப்படும் ஆபத்து இருக்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேன்மை வாய்ந்த சமூக சேவையாளன் ‘உபாலியை’ இழந்த கரவெட்டி

**- வீரகத்தி தனபாலசிங்கம்**


பொன்னம்பலம் என்று சொன்னால் அவரைத் தான் என்று எவரும் உடனே நினைக்கமாட்டார்கள். பல பொன்னம்பலங்கள் கரவெட்டியில் இருந்தார்கள், இருக்கிறார்கள். உபாலி பொன்னம்பலம் என்று சொன்னால்தான் அவரை தெரியும். பொன்னம்பலம் என்று கூறாமல் உபாலி என்று மாத்திரம் கூறினாலும் போதும். கொழும்பில் பணியாற்றிய மிகப்பெரிய தனியார் நிறுவனத்தின் பெயருடன் தன்னைப் பிணைத்துக் கொண்டவர் இந்த சின்னத்தம்பி பொன்னம்பலம்.

காலஞ்சென்ற கீர்த்திமிகு தொழிலதிபர் உபாலி விஜேவர்தனவினால் ஆரம்பிக்கப்பட்ட உபாலி குழுமத்தில் உயர் பதவிகளை வகித்த பொன்னம்பலத்தை அடையாளப்படுத்தவும் உபாலி என்ற பெயர் பயன்படுத்தப்பட்டது. உண்மையில் உபாலி விஜேவர்தனவுக்கு மிகவும் வேண்டியவராகவும் பொன்னம்பலம் விளங்கினார்.

விஜேவர்தன 1983 பெப்ரவரியில் தனது சொந்த விமானத்தில் தனது நிறுவனங்களின் சில முக்கிய அதிகாரிகளுடன் மலேசியாவுக்கு சென்றபோது தன்னையும் கூட வருமாறு அழைத்ததாக கூறிய பொன்னம்பலம் அவருடன் போயிருந்தால் இன்று உங்களுடன் பேசிக் கொண்டிருக்க மாட்டேன் என்று தனது கரவெட்டி இல்லத்தில் ஒரு தடவை நண்பர்களுடன் சுவாரஸ்யமாகப் பேசிக்கொண்டிருந்த சந்தர்ப்பத்தில் சொன்னது நன்றாக நினைவிருக்கிறது.

உபாலி விஜேவர்தனவும் அவரது அதிகாரிகளும் மலேசியாவில் இருந்து நாடு திரும்பிக் கொண்டிருந்த வேளையில் விமானம் மாயமானதற்கு பிறகு 41 வருடங்கள் உபாலி பொன்னம்பலம் உயர்வாழ்ந்து இரு மாதங்களுக்கு முன்னர் தனது 82 வது வயதில் எம்மை விட்டுப் பிரிந்தார்.

அவரது மரணம் வடமராட்சியின் கரவெட்டியில் ஒரு மேன்மைவாய்ந்த சமூக சேவகனை எம்மிடமிருந்து அபகரித்துச் சென்று விட்டது. அவர் விட்டுச் சென்ற வெற்றிடம் நிரப்பப்பட முடியாதது என்று கூறுவதையும் விட நிரப்பப்பட வேண்டியது என்று கூறுவதே பொருத்தமானதாகும். ஏனென்றால் உபாலி பொன்னம்பலத்தை போன்ற ஒருவர் எம்மத்தியில் அவசியம்.



தனது உத்தியோகத்தில் இருந்து ஓய்வுபெற்ற பின்னர் வேண்டுமானால் அவர் கொழும்பில் வாழ்ந்திருக்கலாம் அல்லது வெளிநாட்டுக்கு சென்று பிள்ளைகளுடன் வாழ்ந்திருக்கலாம். அவ்வாறு தனது ஓய்வுகாலத்தில் பலரையும் போன்று ஒரு சாதாரண வாழ்வைத் தெரிவு செய்யாமல் தான் பிறந்த மண்ணுக்கு சேவை செய்யவேண்டும் என்று அவர் இறுதிவரை கரவெட்டியிலேயே வாழ்ந்தார்.

கரவெட்டி அபிவிருத்தி ஒன்றியம் என்பது அவரின் சிந்தனையில் உதித்த ஒரு சமூகசேவை அமைப்பு. 2007 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட அதன் தலைவராக உபாலி பொன்னம்பலம் இறுதிவரை சேவையாற்றினார். உள்நாட்டுப்போரின் முடிவுக்கு பின்னரான காலப்பகுதியில் வடக்கின் கிராமங்கள் எல்லாமே இத்தகைய ஒரு சமூகசேவை அமைப்பை வேண்டி நின்றன. கரவெட்டியை போருக்கு பிறகு மீளக்கட்டியெழுப்பும் பணிகளில் பொன்னம்பலமும் அவர் அணிதிரட்டியவர்களும் செய்த பங்களிப்பு அளப்பரியது. உண்மையில் சொல்வதானால் கரவெட்டி அபிவிருத்தி ஒன்றியம் முன்னெடுத்த அபிவிருத்தி திட்டங்கள் அந்த கிராமத்தின் பகுதிகள் சிலவற்றின் நிலக்காட்சியையே மாற்றியமைத்துவிட்டன.

அரசாங்கத்தின் உதவியில் மாத்திரம் தங்கியிராமல் புலம்பெயர்ந்த தமிழ்ச்சமூகத்தின் மத்தியில் உள்ள கரவெட்டி மக்களிடம் இருந்து நிதியுதவிகளைப் பெற்று கரவெட்டி அபிவிருத்தி ஒன்றியம் பெருமளவு பணிகளை முன்னெடுத்தது. பிரத்தியேகமாக கரவெட்டி பிரதேச வைத்தியசாலை இன்று கண்டிருக்கும் அபிவிருத்தியை பலரும் சில வருடங்களுக்கு முன்னர் நினைத்துப் பார்த்திருக்கமாட்டார்கள்.

கனடா, பிரிட்டன் போன்ற நாடுகளிலும் கரவெட்டி அபிவிருத்தி ஒன்றியத்தின் கிளை அமைப்புக்களை திறக்கவைத்து புலம்பெயர்ந்த கரவெட்டிச் சமூகத்தையும் தங்களது சொந்த மண்ணின் மேம்பாட்டுக்கு பங்களிப்புச் செய்ய வைத்தவர் உபாலி பொனன்ம்பலம்.

கரவெட்டி வைத்தியசாலையும் அதன் இன்றைய பௌதீகக்கட்டமைப்பும் அவரின் தொடர்பாடல் திறனுக்கும் அயரா உழைப்புக்கும் சான்றுகள். சில அபிவிருத்தி பணிகளுக்காக ஆரம்பக்கட்டத்தில் வீடுவீடாகச் சென்று பொன்னம்பலமும் ஒன்றியத்தின் உறுப்பினர்களும் பணம் சேர்த்தனர். அவர் கொடுத்த ஊக்கம் மற்றையவர்களை அர்ப்பணிப்புச் சிந்தையுடன் செயற்படவைத்தது என்றால் மிகையில்லை. அனேகமாக அவரின் வீட்டின் முன்றல் எப்போதும் ஆட்கள் சந்தடி நிறைந்ததாகவே இருக்கும். பொன்னம்பலம் அவர்கள் மிகுந்த நகைச்சுவை உணர்வும் கொண்டவர். ஒரு காரியத்தைச் செய்யவேண்டும் என்று அவர் கேட்கின்ற பாணி எவரையும் மறுப்புக்கூற வைக்காது.

கரவெட்டி அபிவிருத்தி ஒன்றியம் பல்கலைக்கழக மாணவர்களுக்கு பல வருடங்களாக புமைப்பரிசில் வழங்கிவருகிறது. வீட்டுக்கு வீடு குளாய்நீர் வழங்கும் திட்டத்தை வெற்றிகரமாக அபிவிருத்தி ஒன்றியம் நிறைவேற்றியது. இவ்வாறாக பல்வேறு அபிவிருத்தி நடவடிக்கைகளை அடுக்கிக்கொண்டு போகலாம்.

கரவெட்டியின் பெருமைக்குரிய ஆளுமைகளில் ஒருவராக விளங்கிய தமிழர் விடுதலை கூட்டணியின் முன்னாள் தலைவர் முருகேசு சிவசிதம்பரம் அவர்களின் உருவச்சிலை கரவெட்டி அபிவிருத்தி ஒன்றியத்தின் முயற்சியில் புலம்பெயர் சமூகத்தின் உதவியுடன் நெல்லியடி நகரின் மத்தியில் சில வருடங்களுக்கு முன்னர் நிறுவப்பட்டது. சிவசிதம்பரம் அவர்களின் நூற்றாண்டு

(14ஆம் பக்கம் பார்க்க)

---



உங்கள் கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி

வியுக்தியார் பதில்கள்
ஈழநாடு, 707 ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
viyukthiyar@gmail.com

# வியுக்தியார் பதில்கள்

**எஸ். செந்தூரன்,**
**அராலி வடக்கு, அராலி.**

**கேள்வி:** அரசியலமைப்புக்கான 13ஆவது திருத்தம் தொடர்பாக இந்தியா இனிமேல் பேசாமல்விட்டால் அதனால் பெருமளவுக்கு மகிழ்ச்சியடையக்கூடிய ஒருவராக தானே இருப்பார் என்று தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எக்ஸ் சமூக ஊடகத்தில் பதிவு செய்திருக்கிறாரே. அவர் அந்தப் பதிவில் மேலும் தெரிவித்திருப்பதுபோல, தங்களது பிரச்னைக்கு தீர்வாக 13ஆவது திருத்தத்தை பெரும்பான்மையான தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளவும் இல்லை என்பது சரியானதா?

**வியுக்தியார்:** அவரையும் அவரது கொள்கைகளையும் பெரும்பான்மையான தமிழ் மக்கள் எற்றுக்கொள்ளவில்லை என்பதையும் அவர் ஏற்றுக்கொண்டிருந்தால் நியாயமாக இருந்திருக்கும். அண்ணளவாக அவருக்கு வாக்களித்த அளவான தமிழர்கள் ஒரு சுயேட்சைக்கும் தான் வாக்களித்திருக்கிறார்கள். அவரது கொள்ளை என்ன என்பது அவருக்கே தெரியுமோ தெரியவில்லை. இந்த லட்சணத்தில், பட்டுவேட்டிக்கு ஆசைப்பட்டு இருக்கின்ற கோவணத்தையும் இழந்துவிடவேண்டும் என்கிறார் என்று நினைக்கின்றேன். விடுதலைப் புலிகள் எதையெல்லாம் செய்தார்களோ அதையெல்லாம் தானும் செய்யவேண்டும் என்று நினைக்கின்றார் அவர். புலிகள் 13ஐ எதிர்த்தது அவர்கள் நம்பும் இலட்சியத்தை தமது ஆயுத பலத்தால் அடைந்துவிடுவோம் என்ற நம்பிக்கையில். அந்த நம்பிக்கையில் ஒரு நியாயம் இருந்தது. இவர் எந்த நம்பிக்கையில் இப்படி அடம் பிடிக்கிறார் என்பது தெரியவில்லை. யாரை மகிழ்விக்க அப்படிச் சொல்கிறார் என்பது அவருக்கு மட்டுமே வெளிச்சம்.

---

**தி. வினோத்,**
**இருபாலை, கோப்பாய்.**

**கேள்வி:** 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்த இலங்கைக்கு அழுத்தம் கொடுக்குமாறு தமிழகக் கட்சிகள் இந்திய பிரதமர் மோடியிடம் கோரிக்கை விடுக்கவேண்டும் என வடக்கு - கிழக்கு மாகாணங்களின் முன்னாள் முதலமைச்சர் அ.வரதராஜப் பெருமாள் தெரிவித்துள்ளாரே. அவரது இந்தக் கோரிக்கையை தமிழகக் கட்சிகள் கருத்தில் எடுக்கும் என்று நம்புகின்றீர்களா?

**வியுக்தியார்:** தமிழக கட்சிகள் கருத்தில் எடுக்குமா எடுக்காதா என்பதெல்லாம் இருக்கட்டும். அப்படி ஒருவராவது கேட்டார் என்று மகிழ்ச்சியடைவோம். அதற்கு முதல் இங்குள்ள தமிழ் கட்சிகள் 13வது திருத்தச்சட்டத்தை ஏற்றுக்கொள்ள அல்லவா வேண்டும். இந்த 13வது திருத்தம் இருப்பதால்தான் தான், சமஷ்டித் தீர்வை கொண்டுவர முடியாமல் இருக்கின்றது என்று கஜேந்திரகுமார் கவலைப்படுகின்றார். 13 அமுல்படுத்த அழுத்தம் கொடுங்கள் என்று கேட்டு சம்பந்தன் தலைமையில் மோடிக்கு கடிதம் எழுதியபோது, அந்தக் கடிதத்தை எழுதியதால்தான் இந்தியா சமஷ்டியைப் பற்றி பேசுவதில்லை என்று நமது சுமந்திரன் கவலைப்பட்டார். இந்த லட்சணத்தில் தமிழக கட்சிகள் எதற்கு அதுகுறித்து மோடிக்கு அழுத்தம்கொடுக்கவேண்டும் என்று வரதர் கேட்கிறார் என்று தெரியவில்லை. முதலில் 13 ஏற்றுக்கொள்ளுங்கள் என்று இங்குள்ள தமிழ் மக்கள் நமது தமிழ் கட்சிகளுக்கல்லவா அழுத்தம் கொடுக்கவேண்டியிருக்கின்றது.

---

**க. ராம்குமார்,**
**ஸ்ரேசன் றோட், வவுனியா.**

**கேள்வி:** எதிர்க்கட்சிகள் அனைத்தையும் இணைத்து அரசாங்கத்தின் மக்கள் விரோதச் செயல்பாடுகளுக்கு எதிராகப் போராடுவோம் என ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ள அதேவேளை, இந்த அரசாங்கத்தின் எதிர்காலம் எவ்வாறு இருக்கும் எனக்கணிக்க முடியாது என்கிறாரே. யானைப்பலத்துடன் இருக்கும் இந்த அரசாங்கத்தை இப்படி மிரட்டிப்பார்க்கிறாரா?.

**வியுக்தியார்:** யானைப்பலம் என்பது உண்மைதான். ஆனால் அதற்காக அரசாங்கம் என்றால், பலம் மாத்திரம் போதுமானது இல்லைத்தானே. கோட்டாபயவும் யானைப்பலத்துடன் தான் ஆட்சியில் இருந்தார். அதற்காக இந்த அரசாங்கம் அதுபோல ஆகும் என்று சொல்லவரவில்லை. இவர்கள் இதுவரை சரியான பாதையில்தான் சென்றுகொண்டிருப்பதாகவே தெரிகின்றது. ஆனால் நமது எதிர்க்கட்சியின் பொதுச் செயலாளர், எதிர்காலம் குறித்து அச்சப்படுவது நியாயமானதுதானே. அவரது கட்சியின் எதிர்காலம் குறித்துத் தான் அவர் கருத்துச் சொல்லியிருப்பாரோ தெரியவில்லை. எதிர்க்கட்சியில் இருக்கும் கட்சிகள் எல்லாம் தம்மோடுதான் இருக்கின்றன என்கிறார் அவர். ஏப்ரலில் நடக்கவிருக்கும் உள்ளூராட்சி தேர்தல்களில் அவரோடு எத்தனை கட்சிகள் இருக்கின்றன என்று பொறுத்திருந்து பார்ப்போமே.

---

**க. ஜெயரூபன்,**
**செட்டிபாளையம், மட்டு.**

**கேள்வி:** முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராசபக்ஷவின் பாதுகாப்பு நீக்க விவகாரத்தை நீதிமன்றத்திற்கு கொண்டு செல்ல தேவையான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பொதுஜன பெரமுன தெரிவித்துள்ளதே. அவர்தான் விடுதலைப் புலிகளை ஒட்டுமொத்தமாக தான் அழித்துவிட்டதாக அவரே கூறிய பின்னர் அவருக்கு யாரிடமிருந்து பாதுகாப்பு அச்சுறுத்தல் இருக்கப்போகின்றது?.

**வியுக்தியார்:** அவருக்கு பாதுகாப்பு முற்றாக நீக்கப்படவில்லை. குறைக்கப்பட்டிருக்கின்றது அவ்வளவுதான். ஆனாலும் அவருக்கு பாதுகாப்பு தேவை என்று திரும்பத்திரும்பக் கூறினால்தானே, மக்களுக்கு அவர் புலிகளை அழித்த தலைவர் என்பது நினைவுக்கு வரும் என்று நினைக்கிறார்கள் போலும். இப்படியே அதுபற்றி கதைக்காமல் விட்டால், அவர்களுக்கு அரசியல் செய்வதற்கே விடயம் இல்லாமல் போய்விடும் என்று நினைக்கிறார்களோ தெரியவில்லை.

---

**என். ரவிவர்மன்,**
**களுவாஞ்சிக்குடி, மட்டக்களப்பு**

**கேள்வி:** வடக்கு மாகாணத்திலுள்ள ஒரு சில அதிகாரிகளை வைத்துக்கொண்டு எங்கள் மாகாணத்து மக்களுக்கு சேவை செய்வதென்பதும் முன்னேற்றுவதென்பதும் மிகச்சவாலான விடயமாகவே இருக்கின்றது என்று வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளாரே?

**வியுக்தியார்:** அவர் ஒரு மூத்த அதிகாரி. அவருக்கு தெரியாததல்ல. இப்படி அதிகாரிகள் மீது அவர் குறை கூறினால், இனி எல்லா அதிகாரிகளையும் அல்லவா மக்கள் சந்தேகக்கண்கொண்டு பார்க்கப்போகிறார்கள். அதிகாரம் உள்ள ஒரு ஆளுனர் அவர். எந்த அதிகாரிகள் மக்களுக்கு சேவை செய்வதற்கு தடையாக இருக்கிறார்களோ அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும். ஆகக்குறைந்தது அவர்கள் எந்தவகையில் இடைஞ்சலாக இருக்கிறார்கள் என்பதையாவது வெளிப்படுத்த வேண்டுமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# சிரியாவின் புதிய தலைமை: சவூதியில் பிறந்து ஈராக்கில் களமாடியவர்!



ஐங்கரன் விக்கினேஸ்வரா

அமெரிக்க அரசால் 2013 இல் உலகளாவிய பயங்கரவாதி என்று பட்டியலிட்டு, அவரைப் பிடிக்க 10 மில்லியன் வெகுமதியை அறிவித்தது. அவர் யாருமல்ல, தற்போதைய சிரிய நாட்டின் கிளர்ச்சிப் படைகளின் தலைவராக இருந்து, இடைக்கால அதிபராக விளங்கும் ஹூசைன் அல்-ஷரா தான்.

சிரியாவில் ஆட்சி அதிகாரத்தை அவர்கள் கைப்பற்றியதன் பின்னர் 2024 டிசம்பரில், அல்-ஷராவை அமெரிக்க வெளியுறவுத்துறை செயலர் பார்பரா ஏ. லீஃப் தலைமையிலான குழு சந்தித்தது மற்றொரு அதிர்ச்சிமிக்க திருப்புமுனையாகும்.




அஹ்மத் ஹூசைன் அல்-ஷரா. அவரது இன்னோர் பெயரான அபு முகமது அல்-ஜோலானியாகவும் அறியப்படுகி றார். சிரிய அரச எதிர்ப்பு போராளியும் தற்போதைய அரசின் தலைவரும் ஆவார்.

## 10 மில்லியனுக்கு அமெரிக்காவால் தேடப்பட்டவர் !!

அசாத் எதிர்ப்பு படைகளோடு இணைந்து எச்ரிஎஸ் எனப்படும் ஆயுத இயக்கத்திற்கு 2017 முதல் தலைவராக இருந்தவர். உறுதியான இறுதியான எதிர்ப்பில் முக்கிய பங்கு வகித்து அசாத் ஆட்சியை வீழ்த்தி சிரிய இடைக்கால அரசாங்கத்தை நிறுவுவதற்கும் அவரே வழிவகுத்தார்.

1982 ஆம் ஆண்டு சவூதி அரேபியாவின் ரியாத்தில் பிறந்த அபு முகமது அல்-ஜோலானி சாதாரண குடும்ப பின்புலத்தை கொண்டவர். அவரது தந்தை பெட்ரோலியம் பொறியாளராக பணியாற்றினார். இவர்கள் 1989 இல் சிரியாவுக்குத் சென்று டமாஸ்கஸ் அருகே குடியேறினர்.

2003 இல் ஈராக் மீது அமெரிக்கா ஆக்கிரமிப்பு நடவடிக்கையை மேற்கொண்டு வந்தது. அமெரிக்காவை எதிர்க்கும் விதமாக ஈராக்கில் அல்-கொய்தாவில் அபு முகமது அல்-ஜோலானி சேர்ந்தார்.

2003 ஈராக் படையெடுப்பிற்கு பின்பு, அவர் ஈராக்கில் அல்-கொய்தாவில் சேர்ந்து ஈராக் கிளர்ச்சியில் மூன்று ஆண்டுகள் போராடினார். 2006 முதல் 2011 வரை அமெரிக்கப் படைகள் அவரைக் கைப்பற்றி சிறையில் அடைத்தனர்.

ஆனால் சிரிய உள்நாட்டு போரின் போது அவர் விடுதலை செய்யப்பட்டார்.


மேலும் சிரிய உள்நாட்டுப் போரில் பங்கேற்க அல்-கொய்தாவின் ஆதரவுடன் 2012 இல் அல்-நுஸ்ரா முன்னணியை உருவாக்கினார்.

அல்-நுஸ்ரா முன்னணியின் தலைவர் என்ற முறையில், அல்-ஷாரா வடமேற்கு இட்லிப் பகுதியில் ஒரு பெரிய கிளர்ச்சியாளர்கள் தளத்தை உருவாக்கினார்.

அப்போதிருந்து அல்-ஷரா சிரியாவின் எதிர் கால தலைவராக பரவலாகக் கருதப்பட்டார். ஆனாலும் அல்-நுஸ்ராவை இஸ்லாமிய அரசில் ஒருங்கிணைக்கும் அபு பக்கர் அல்-பாக்தாதியின் முயற்சிகளை எதிர்த்தார்.

2016 இல், அல்-ஷரா அல்-கொய்தாவுடனான அல்-நுஸ்ராவின் உறவுகளைத் துண்டித்து, அதை மற்ற அமைப்புகளுடன் இணைத்து அடுத்த ஆண்டு ஹயாத் தஹ்ரிர் அல்-ஷாமை (எச்ரிஎஸ்) உருவாக்கினார்.


அல்-கொய்தாவுடன் உறவை முறித்துக் கொண்டதில் இருந்து, சிரியாவின் மீது கவனம் செலுத்துவதன் மூலம் சர்வதேச சட்ட பூர்வத்தை நாடினார். அத்து டன் எச்ரிஎஸ் தனது கட்டுப் பாட்டில் உள்ள பிரதேசத்தில் ஓர் அதிகார நிர்வாகத்தை நிறுவி வரிகளை வசூலித்தல், பொது சேவைகளை வழங்குதல் மற்றும் குடியிருப்பாளர்களுக்கு அடையாள அட்டைகளை வழங்குதல் போன்ற பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டது.



2011 ஆம் ஆண்டு முதல் கிளர்ச்சியாளர்களின் கட்டுப் பாட்டில் இருக்கும் சிரியாவின் வடமேற்கு மாகாணமான இட்லிப் மாகாணத்தில் தங்கள் படை களை நிறுத்தி அதிகாரம் செலுத்தும் நடவடிக்கைகளை பேணி வருகின்றனர்.

எட்டு ஆண்டுகளுக்கும் மேலாக அங்கு பல்கலைக்கழகங்கள் செயல்பட்டு வருகின்றன. பல்கலைக்கழகங்களில் 60 சதவிகிதத்திற்கும் அதிகமான பெண்கள் இருப்பதாக அல்-ஷாரா குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் அரசியலமைப்பை இயற்றுவதற்கு சிரிய சட்ட நிபுணர்கள் அடங்கிய குழு ஒன்று உள்ளது. இந்த குழு சட்ட ரீதியான பிரச்னைகள் குறித்து முடிவு செய்யும். எந்த ஆட்சியாளரோ அல்லது அதிபரோ, இந்தச் சட்டத்தைப் பின்பற்ற வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.



> அமெரிக்க அரசால் 2013இல் உலகளாவிய பயங்கரவாதி என்று பட்டியலிட்டு, அவரைப் பிடிக்க 10 மில்லியன் வெகுமதியை அறிவித்தது. சிரியாவில் ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றியதன் பின்னர் 2024 டிசெம்பரில், ' அல்-ஷராவை அமெரிக்க வெளியுறவுத்துறை செயலர் பார்பரா ஏ. லீஃப் தலைமையிலான குழு சந்தித்தமை மற்றொரு அதிர்ச்சிமிக்க திருப்புமுனையாகும்.

மேலும் ஹயாத் தஹ்ரிர் அல்-ஷாம் அமைப்பு அதன் கடந்த கால பயங்கரவாதத்திலிருந்து விலகவில்லை என நம்புபவர்களுக்கு, அது உண்மையில்லை என்று உறுதியளித்தார்.

அடுத்த சில மாதங்களில், சிரியாவின் புதிய ஆட்சியாளர்களின் நடவடிக்கைகள், சிரியா எந்த மாதிரியான நாடாக இருக்க வேண்டும் என்பதையும், அவர்கள் எப்படி ஆட்சி செய்ய விரும்புகிறார்கள் என்பதையும் உலகிற்கு வெளிப்படுத்தும்.

சிரியாவின் முன்னாள் கிளர்ச்சிக் குழுக்கள் பாதுகாப்பு அமைச்சகத்தின் கீழ் ஒருங்கிணைக்க ஒப்புக் கொண்டதாக கூறப்படுகிறது.

பல்வேறு குழுக்களின் தலைவர்களுடனான சந்திப்பைத் தொடர்ந்து பிரிவுகளை கலைக்க ஒப்புக்கொண்டதாக நடைமுறை சிரிய தலைவர் அஹ்மத் அல்-ஷாரா கூறியுள்ளார்.

வடகிழக்கு சிரியாவில் உள்ள குர்திஷ் தலைமையிலான -அமெரிக்காவின் ஆதரவுடைய சிரிய ஜனநாயகப் படைகள் குழு இப்போது அறிவிக்கப்பட்ட ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாக இல்லை.

குர்திஷ் தலைமையிலான படைகளிடம் உள்ள ஆயுதங்கள் உட்பட நாட்டில் உள்ள அனைத்து ஆயுதங்களும் அரசின் கட்டுப்பாட்டின் கீழ் வரும் என்றும் கூறப்பட்டது.

முன்னாள் கிளர்ச்சிப் பிரிவுகள் மற்றும் பஷர் அல்-அசாத்தின் இராணுவத்தில் இருந்து விலகிய அதிகாரிகளைப் பயன்படுத்தி அமைச்சகம் மறுசீரமைக்கப்படும் என்று பிரதமர் முகமது அல்-பஷீர் கடந்த வாரம் தெரிவித்திருந்தார்.

டமாஸ்கஸில் ஹயாத் தஹ்ரிர் அல்-ஷாம் அதிகாரத்திற்கு வந்த பிறகு, கிளர்ச்சியின் முக்கிய நபரான முர்ஹாஃப் அபு கஸ்ராவை இடைக்கால பாதுகாப்பு அமைச்சராக நியமித்தனர்.

அமைப்பு முன்னாள் ஆட்சிக்கு எதிராக பழிவாங்கவோ அல்லது எந்த மத சிறுபான்மையினரையும் ஒடுக்கவோ செய்யாது என்று உறுதி செய்துள்ளது. புனரமைப்பு மற்றும் பொருளாதார அபிவிருத்தியை அடைவதில் தான் தனது முதன்மையான கவனம் செலுத்துவதாகவும், புதிய மோதல்களில் ஈடுபடுவதில் ஆர்வம் இல்லை என்றும் கூறியுள்ளது.

சிரியாவின் புதிய நிர்வாகத்தில் எந்த சிறுபான்மையினரையும் ஒடுக்காது என்று கூறினாலும், சிரியாவின் வடகிழக்கில் குர்திஷ் மக்கள் நிலைமை என்பது தெளிவாகத் தெரியவில்லை.

உள்நாட்டுப் போரின் பின்னர் எதிர்கால சுனி இஸ்லாமிய ஆட்சி சிறுபான்மையினர் வாழ்க்கை முறையை பாதிக்கும் என்று பலரும் பயந்துள்ளனர். அதே போல் சிரியாக், கிரேக்கம், ஆர்மேனிய ஆர்த்தடாக்ஸ் கிறிஸ்தவர்கள் மற்றும் ட்ரூஸ் சமூகமும் கலக்கத்தில் உள்ளது. அதேவேளை குர்திஷ் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகள் புதிய தலைமையின் கீழ் ஒருங்கிணைக்கப்படும் என்றும், சிரியா பிரிக்கப்படாது என்றும் கூறியுள்ளது.

சிரியாவில் ஐந்து தசாப்த கால அசாத் குடும்பத்தின் ஆட்சி முடிவுக்கு வந்த நிலையில், எண்ணற்ற குழுக்களிடையே மோதல்களைத் தவிர்க்க முயற்சிக்கும் கடினமான பணியாக புதிய தலைமைக்கும் இருக்கப் போகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### அரச நிறுவனங்கள், திணைக்களங்களை

# சைபர் தாக்குதல்களில் இருந்து பாதுகாப்பதற்கு விசேட திட்டம்

கொழும்பு, டிசெ.29

அரச நிறுவனங்கள் மற்றும் திணைக்களங்களை சைபர் தாக்குதல் அச்சுறுத்தல்களில் இருந்து பாதுகாப்பதற்காக, அரச ஊழியர்களிடையே சைபர் பாதுகாப்பு விழிப்புணர்வை மேம்படுத்துவதற்கான திட்டங்களை இலங்கை கணினி அவசரகால பதிலளிப்பு குழு வெளியிட்டுள்ளது.

அரசாங்க வலைத்தளங்கள் மற்றும் கணினி அமைப்புகளை குறிவைத்து நடத்தப்படும் சைபர் தாக்குதல்களால் ஏற்படும் தொடர்ச்சியான அபாயங்களை தவிர்க்க வேண்டியுள்ளது. அத்துடன் தாக்குதலுக்கு உள்ளான கட்டமைப்புகளை மீட்டெடுப்பது கணிசமான வருடாந்த செலவுகள் அதிகரிப்பதற்கு காரணமாகின்றது. இதனால், பொதுமக்கள் நிதி கணிசமாக வீணாகின்றது.

எனவே, அரச நிறுவனங்கள் முழுவதும் சைபர் பாதுகாப்பை வலுப்படுத்த ஒரு விரிவான உத்தி உருவாக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின் முக்கிய அம்சம், அரச ஊழியர்களின் டிஜிற்றல் கல்வி அறிவை மேம்படுத்துதல், சைபர் அச்சுறுத்தல்களை திறம்படக் குறைப்பதற்கான அறிவு மற்றும் திறன்களுடன் அவர்களை வலுவூட்டல் என்பன வாகும்.

பல்வேறு அரச துறைகளுக்கான விழிப்புணர்வு அமர்வுகளுடன், இந்தத் திட்டம் ஏற்கனவே தொடங்கப்பட்டுள்ளது. 2025ஆம் ஆண்டுக்குள் மேலும் பல நிறுவனங்களைச் சென்றடைய திட்டமிட்டு, இப்பயிற்சி முயற்சிகளை மேலும் விரிவுபடுத்துவதை இத்திட்டம் கொண்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(எ)

# சிறீல சிறீ மாசிலாமணி சுவாமிகள் திருக்கோணேச்சரத்தில் வழிபாடு



திருகோணமலை, டிசெ. 29

பஞ்ச ஈச்சரங்களில் ஒன்றான திருக்கோணேச்சரம் கோவிலில் இந்தியாவின் தமிழ்நாடு, தருமபுர ஆதீன 27ஆவது குருமகா சந்நிதானம் சிறீல சிறீ மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் வழிபாட்டில் ஈடுபட்டார்.

(எ)

# மேன்மை வாய்ந்த...

(12ஆம் பக்கத் தொடர்ச்சி)

விழாவையும் 2023 ஜூலையில் ஒன்றியம் விமரிசையாக நடத்தியது.

கரவெட்டியைச் சேர்ந்தவர்கள் எந்த துறையில் என்றாலும் சாதனை புரிந்தால் அவர்களை பாராட்டிக் கௌரவிப்பதற்கு விமரிசையாக விழா எடுப்பதற்கு முன்னின்று செயற்படுவது உபாலி பொன்னம்பலத்தின் நற்பண்புகளில் ஒன்றாகும்.

அவரின் தலைமையில் இதுகாலவரை அளப்பரிய சேவைகளைச் செய்த கரவெட்டி அபிவிருத்தி ஒன்றியம் தொடர்ந்து ஊருக்கும் மக்களுக்கும் பயனுறுதியுடைய சேவைகளை முன்னரை விடவும் சிறப்பாக முன்னெடுப்பதே உபாலி பொன்னம்பலம் அவர்களுக்கு செய்கின்ற பொருத்தமான அஞ்சலியாக இருக்கும். இது விடயத்தில் அவருடன் தோளோடு தோள் நின்ற முன்னாள் அதிபர் இளையதம்பி இராகவன் மற்றும் யாழ்ப்பாண மாவட்ட சுகாதாரசேவை பணிப்பாளர் வைத்தியகலாநிதி ஆறுமுகம் கேதீஸ்வரன் போன்றவர்களுக்கு தலையாய பொறுப்பு இருக்கிறது.

பொன்னம்பலம் அவர்களின் குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்கள். ஒரு வளமான சமூகசேவை மரபை அவர் விட்டுச் சென்றிருப்பது குறித்து குடும்பத்தவர்கள் என்றென்றைக்கும் பெருமைப்படலாம்.

உபாலி பொன்னம்பலம் அண்ணன் இல்லாமல் புதிய வருடத்திற்குள் பிரவேசிக்கும் தறுவாயில் நெஞ்சு கனக்கிறது.

# தமிழர் அரசியல்...

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டுமாத்திரமே மதிப்பிடமுடியும். புதியதொரு அரசியல் ஒழுங்கு நாட்டில் இன்று முக்கியமான விடயமாக நோக்கப்படலாம், ஆனால், பழைய பிரச்சினைகள் இல்லாமற்போகப் போவதில்லையே.

அண்மைய தேர்தல்கள் ஜனாதிபதி திசாநாயக்கவுக்கும் தேசிய மக்கள் சக்திக்கும் மிகவும் அரிதான உத்வேகத்தையும் முன்னென்றும் இல்லாத வகையிலான பாராளுமன்ற செல்வாக்கையும் கொடுத்திருக்கின்றன. போருக்கு பின்னரான காலப்பகுதியில் மக்களின் வாழ்க்கை யதார்த்தங்களை கருத்தில் எடுத்து அரசியல் தீர்வு குறித்து புதிதாகச் சிந்திப்பதற்கு அரசாங்கத்துக்கு இப்போது உண்மையான ஒரு வாய்ப்பு கிடைத்திருக்கிறது.

**தமிழ் அரசியல் சமுதாயத்தின் நிலை**

அதேவேளை, இலங்கையின் தமிழ் அரசியல் சமுதாயமும் ஒரு பெரிய சவாலை எதிர்நோக்குகிறது. அண்மைய தேர்தல்களில் வாக்காளர்கள் பிராந்திய தமிழ் கட்சிகளுக்கு தெளிவான செய்தியை ( வடக்கு, கிழக்கில் ஒரு மாவட்டத்தை தவிர ஏனைய சகல மாவட்டங்களிலும் தமிழ் கட்சிகளை தேசிய மக்கள் சக்தி தோற்கடித்தது) கொடுத்த பிறகு தமிழ் அரசியல் சமுதாயம் அதன் செல்வாக்கை மீண்டும் பெற்றுக் கொள்வதற்கு மல்லுக் கட்டிக்கொண்டிருக்கிறது.

தமிழர்களின் உரிமைகளைப் பெறுவதற்காக சர்வதேச சமூகத்தையே எதிர்பார்த்து பழக்கப்பட்டவிட்ட பிறகு தமிழ் அரசியல் தலைமைத்துவம் இப்போது அதன் சொந்த தோல்விகளுக்கு முகங்கொடுக்க நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கிறது. இந்தியாவை நம்பியிருப்பவர்கள் தமிழர் பிரச்சினை இனிமேலும் புதுடில்லிக்கு இராஜதந்திர ரீதியான செல்வாக்கை தரக்கூடிய அல்லது இந்தியாவில் நெருக்குதலைக் கொடுக்கக்கூடிய ஒரு பிரச்சினையாக இல்லை என்பதை புரிந்து கொள்வது நல்லது. தமிழர் பிரச்சினை மீது இந்தியாவின் நலனும் செல்வாக்கும் தேய்ந்து கொண்டுபோகிறது என்பதை அவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டிய நேரம் வந்துவிட்டது. தவிரவும், சிறுபான்மைச் சமூகங்களை நன்றாக நடத்துமாறு இன்னொரு நாட்டைக் கேட்பதற்கான எந்த தார்மீகத் தகுதியும் இந்தியாவுக்கு இருக்கிறதா என்று அவர்கள் கேட்கவேண்டும்.

மேற்குலக வல்லாதிக்க நாடுகளின் ஆதிக்கத்தில் இருக்கும் ஐக்கிய நாடுகள் அமைப்புகள், இந்தியா மற்றும் புலம்பெயர் தமிழ்ச் சமூகத்துடன் சேர்ந்து செயற்பாடுகளை முன்னெடுக்கும் தமிழ் அரசியல் சமுதாயத்தின் பிரதான தந்திரோபாயம் களத்தில் கணிசமான முன்னேற்றத்தை கொண்டுவரவில்லை. தமிழ் அரசியல் சமுதாயம் தொடர்ந்தும் பொருத்தமானதாக இருப்பதற்கும் நம்பகத்தன்மையை மீளக் கட்டியெழுப்புவதற்கும் அது பிரதிநிதித்துவப்படுத்த விரும்புகின்ற மக்களை மையப்படுத்திய அரசியலை முன்னெடுப்பதை தவிர வேறு தெரிவு கிடையாது. எங்கெல்லாமோ இருக்கிற சக்திகளுடன் பேசுவதில் வருடக்கணக்காக மூழ்கியிருந்த தங்களது தலைவர்கள் இப்போது தாங்கள் சொல்வதை கேட்கவேண்டும் என்பதை இலங்கை தமிழ்மக்கள் நினைவு படுத்தியிருக்கிறார்கள்.

(தி இந்து)

# மன்மோகன் சிங்...

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

எந்த சக்தியும் இனி நம்மை தடுக்க முடியாது," என்று பேசினார் அவர்.

1991ம் ஆண்டு ஜூலை மாதம் 24ம் தேதி இந்தியாவின் பொருளாதார சந்தை உலக நாடுகளுக்காக திறந்துவிடப்பட்டது.

இந்த புதிய பொருளாதார கொள்கையின் விளைவாகவே, 2024ம் ஆண்டு 3 டிரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதாரத்தை இந்தியா எட்டியுள்ளது. மிகப்பெரிய பொருளாதாரத்தைக் கொண்ட ஐந்தாவது நாடாக இந்தியா திகழ்கிறது.

2004ம் ஆண்டு, நடைபெற்ற நாடாளுமன்ற தேர்தலில் அடல் பிஹாரி வாஜ்பாய் தோற்கடிக்கப்பட்டார்.

அன்றைய காங்கிரஸ் கட்சியின் தலைவர் சோனியா காந்தி பிரதமராவார் என்ற எதிர்பார்ப்பு நிலவியது. ஆனால், பாஜகவினர், குறிப்பாக சுஷ்மா ஸ்வராஜ் கடுமையான எதிர்ப்புகளை பதிவு செய்தார்.

"இந்தியா சுதந்திரம் அடைந்து 60 ஆண்டுகள் ஆன பிறகு, வெளிநாட்டை சேர்ந்த ஒருவர் இந்தியாவின் முக்கியமான பொறுப்பில் பணியாற்றுவார் என்றால் நான் மொட்டை அடித்துக் கொண்டு, செருப்பு அணியாமல், வெள்ளை புடவை உடுத்தி, தரையில் தூங்குவேன்," என்று விமர்சனம் செய்தார்.

காங்கிரஸ் பாஜகவின் எதிர்ப்பைப் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை. சோனியா கூட்டணி கட்சிகளின் மூத்தத் தலைவர்களை சந்தித்து பேசினார். கூட்டணி ஆட்சியை உருவாக்கும் முனைப்பில் அவர் இருந்தார்.

அதன் பின்னால் நடந்த நிகழ்வுகளை பத்திரிகையாளர் நீர்ஜா சௌத்ரி தன்னுடைய "ஹவ் பிரைம் மினிஸ்டர்ஸ் டிசைட்" என்ற புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளார்.

பாஜகவின் எதிர்ப்பை தீவிரமாக காங்கிரஸ் எடுத்துக் கொள்ளாத போதும் ஒரு நிகழ்வு சோனியா பிரதமராகும் எண்ணத்தை கைவிட வைத்தது.

மே 17, 2004 அன்று 10 ஜன்பத்தில் அமைந்துள்ள சோனியா காந்தியின் அதிகாரப்பூர்வ இல்லத்திற்கு சென்றார் நட்வர் சிங். அங்கே மன்மோகனை பார்க்க அவர் சென்றிருக்கிறார்.

அப்போது சோனியா, பிரியங்கா, சுமன் துபேய் உள்ளிட்டோரும் அங்கே அமர்ந்திருந்தனர். அப்போது அங்கே வந்த ராகுல் காந்தி, "நீங்கள் பிரதமராகக் கூடாது அம்மா. ஏற்கனவே என்னுடைய தந்தை கொல்லப்பட்டுவிட்டார். என்னுடைய பாட்டியும் கொல்லப்பட்டுவிட்டார். இப்போது நீங்கள் பிரதமரானால், ஆறு மாதங்களில் நீங்களும் கொல்லப்படுவீர்கள்" என்று அவர் கூறினார்.

மேலும் 24 மணிநேரத்திற்குள் இந்த விவகாரம் தொடர்பாக முடிவெடுக்கும்படியும் ராகுல் கூறிவிட்டு சென்றுவிட்டார்.

நட்வர், "இந்த விவகாரத்தை என்னிடம் விட்டுவிடுங்கள். நாங்கள் பார்த்துக் கொள்கிறோம்" என்று சோனியாவிடம் தெரிவித்தனர்.

தன்னுடைய மகனின் கருத்துக்கு எதிராக சோனியா காந்தியால் ஓர் அம்மாவாக முடிவெடுக்க இயலவில்லை என்று நட்வர் சிங் கூறினார்.

அதே நாளில், காங்கிரஸின் மூத்த தலைவர்களை 10 ஜன்பத்தில் உள்ள இல்லத்திற்கு அழைத்தார் சோனியா காந்தி. அவருடன் நட்வர் மற்றும் மன்மோகன் உடன் இருந்தனர்.

இந்த ஆலோசனை கூட்டத்தில் பிரணாப் முகர்ஜி, சிவ்ராஜ் பாட்டீல், குலாம் நபி, அஹ்மது படேல் உள்ளிட்ட தலைவர்களும் பங்கேற்றனர்.

"மன்மோகன் சிங் பிரதமராக பதவி ஏற்க வேண்டும்" என்று சோனியா காந்தி அந்த கூட்டத்தில் குறிப்பிட அனைவரும் அமைதியானார்கள்.

மன்மோகன் சிங்கோ, "இந்த பதவியை அளிக்க முன்வந்ததற்கு நன்றி. ஆனால் பெரும்பான்மை இல்லாத காரணத்தால் என்னால் இதை ஏற்றுக் கொள்ள இயலாது," என்று கூறினார்.

அப்போது நட்வர் "இதனை மறுக்கும் உரிமை மன்மோகனுக்கு இல்லை. ஏனென்றால் பெரும்பான்மையை கொண்ட ஒரு நபரே உங்களுக்கு இப்படி ஒரு பதவியை வழங்குகிறார்," என்று கூறினார்.

அடுத்த நாள் சோனியாவும், மன்மோகனும் அன்றைய குடியரசுத் தலைவர் அப்துல் கலாமை நேரில் சந்தித்தனர். சிங்கின் பெயர் அதிகாரப்பூர்வமாக பிரதமராக அடுத்த நாள் அறிவிக்கப்பட்டது.

அதுமட்டுமின்றி, வாஜ்பாயும் சோனியா காந்தியை பிரதமராக வேண்டாம் என்று கேட்டுக் கொண்டார். இரு வேறு அரசியல் தளத்தில் பயணித்தாலும் இருவருக்கும் இடையே ஒரு நல்ல நட்பு நிலவியது.

காங்கிரஸின் வெற்றிக்குப் பிறகு வாஜ்பாயின் வாழ்த்துகளை பெற அவரை அழைத்தார் சோனியா. அப்போது "என்னுடைய ஆசீர்வாதங்கள் உங்களுக்கு எப்போதும் உண்டு. ஆனால், பிரதமர் மட்டும் ஆக வேண்டாம். அது நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்தும்," என்றார்.

மன்மோகன் சிங் 2004ம் ஆண்டு இரண்டு காரணங்களுக்காக பிரதமராக தேர்வு செய்யப்பட்டார். ஒன்று சோனியா காந்தி வெளிநாட்டில் பிறந்தவர். இரண்டாவது ராகுல் காந்தி அவருடைய அம்மாவுக்கு விடுத்த எச்சரிக்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழரசுக்...

கட்சியின் மத்திய குழுவில் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

கட்சியின் மத்திய குழு கூட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். (அ)

## புலிகள்...

எடுத்துக் காட்டுகின்றன.

இலங்கையின் பாதுகாப்புப் படைகளுக்கு பயிற்சி மற்றும் உபகரணங்களை வழங்குவதில் தொடர்ந்து ஒத்துழைப்பது பற்றி ஒக்ரோபர் 2003 அறிக்கையின் குறிப்பில் உள்ளது.

கடற்புலிகளின் கடல்சார் நடவடிக்கைகளில் பிரபாகரன் அதீத நம்பிக்கை கொண்டிருந்தார். எனினும், எனது பார்வையில் இது விடுதலைப் புலிகளின் குறைப்பாடாக கண்டறிந்தேன்.

எனவே, வாஜ்பாயும் நானும் எங்கள் கடல் பகுதியில் அரசு அல்லாதவர்கள் செயல்பட அனுமதிக்க மாட்டோம் என்று ஓர் உடன்பாட்டுக்கு வந்தோம். கடற்புலிகளின் செயற்பாடுகளை நடுநிலையாக்கி பயங்கரவாதத்தை எதிர்ப்பதற்கு இரு நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பை உறுதிப்படுத்தினோம்.

2003 ஆம் ஆண்டளவில், நிலைமை இலங்கைக்கு சாதகமாக மூலோபாய ரீதியாக, பொருளாதார ரீதியாக மற்றும் சர்வதேச ரீதியாக மாறியது. சமாதானப் பேச்சுவார்த்தையில் தன்னால் வெற்றி பெற முடியாது என்பது பிரபாகரனுக்குத் தெரியும். எனவே, அமைதிப் பேச்சுவார்த்தையை அவர் புறக்கணிக்கத் தொடங்கினார்.

இந்த முக்கியமான கட்டத்தில், இலங்கை அரசாங்கம் முன்வைத்த முன்மொழிவுகளுக்கு விடுதலைப் புலிகளின் பதிலை வலியுறுத்தியும், பேச்சுவார்த்தைகளை முன்கூட்டியே மீண்டும் தொடங்குவதற்கும் இந்தியா எங்களுக்கு ஆதரவளித்தது. அன்றிலிருந்து 2009ஆம் ஆண்டு விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்படும் வரை இந்தியா எமக்கு ஆதரவளித்தது.

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான சுதந்திர வர்த்தக உடன்படிக்கைக்கு அப்பால் சென்று இரு நாடுகளுக்குமிடையில் நெருக்கமான பொருளாதார ஒத்துழைப்பை ஊக்குவிப்பதற்கான அவசியம் குறித்தும் வாஜ்பாய்ஜியும் நானும் விவாதித்த ஒரு தலைப்பு.

அரசாங்கத்தில், விவசாயம், மின்சாரம் மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறைகளுக்கு முன்னுரிமை அளித்ததன் மூலம் இந்த பேச்சுவார்த்தைகளை செயல்படுத்த முடிந்தது. இதனால், போர் நிறுத்த ஒப்பந்தம் நடைமுறைக்கு வந்தவுடன், பொருளாதாரத்தின் மீது எங்கள் கவனம் திரும்பியது.

முதன்முறையாக, இரு அரசாங்கங்களும் தங்கள் பொருளாதாரங்களை மேலும் தாராளமயமாக்குவதில் உறுதியாக இருந்தன. சேவைத் துறையை உள்ளடக்கிய சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் மற்றும் அதற்கு அப்பால் ஒரு பணிக்குழுவை அமைப்பதற்கான ஒப்பந்தம் எட்டப்பட்டது.

ஒக்ரோபர் 2003 இல் நாங்கள் எங்கள் அடுத்த இரு தரப்பு சந்திப்பை நடத்திய போது, சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் ஒரு விரிவான பொருளாதார கூட்டு ஒப்பந்தமாக மாறியது. நாங்கள் 2004 ஆம் ஆண்டிற்குள் பேச்சுவார்த்தைகளை தொடங்கி விவாதங்களை முடிக்க முடிவு செய்தோம். ஆனால் அந்த நேரத்தில் நாங்கள் இருவரும் பதவியில் இல்லை.

நாங்கள் இருவரும் இந்திய-இலங்கை உறவுகளை ஒரு புதிய நிலைக்கு கொண்டு சென்றோம். முதலில், இந்திய எண்ணெயை இலங்கை சந்தையில் நுழைய அனுமதித்து, திருகோணமலையில் உள்ள எண்ணெய் தாங்கிகளை சேமிப்பிற்காக பயன்படுத்தினோம், இரண்டாவதாக, நிலக்கரியை நிறுவ ஒப்புக்கொண்டோம் - என்றார். (அ)

## மத்திய...

முன்னால் நேற்று காட்சிப்படுத்தப்பட்டது.

குறித்த பதாகைக்கு தமிழரசுக் கட்சியின் பொதுச் சபை உறுப்பினர்கள் மற்றும் தொண்டர்கள் உரிமை கோரியுள்ளனர்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டம் வவுனியா, இரண்டாம் குறுக்குத்தெருவில் அமைந்துள்ள விருந்தினர் விடுதியில் நேற்று காலை 10 மணிக்கு ஆரம்பமாக விருந்த நிலையிலேயே இந்தப் பதாகை காட்சிப்படுத்தப்பட்டிருந்தது. இதன் போது மத்திய குழுக் கூட்டத்துக்கு வருகை தந்தவர்கள் அந்தப் பதாகை யைப் பார்வையிட்டபின்னர் கூட்ட மண்டபத்துக்குள் சென்றிருந்தனர்.

குறித்த பதாகையில், "நீதிமன்ற வழக்குகளை மீளப்பெறு, பொதுச் சபையை உடனடியாகக் கூட்டு, யாப்பின்படி தலைவர் உட்பட யாரையும் வெளியேற்றும் அதிகாரம் மத்திய குழுவுக்கு இல்லை என்பதை ஏற்றுக் கொள், 2019 இல் பொதுச் சபையால் நியமிக்கப்பட்ட தேர்தல் நியமனக் குழுவை இயங்கவிடு, மத்திய குழுவின் பலவீனமான தீர்மானங்களால் தமிழ்த் தேசியத்தை அழிக்கும் பணிகளைச் செய்யாதே!" - போன்ற வாசகங்கள் எழுதப்பட்டிருந்தன. (அ)

## அரசியல்...

தனியார் விருந்தினர் விடுதியில் நேற்று இடம்பெற்றது. இதன்போது கட்சியின் தலைமை தொடர்பான விடயம் வாதப்பிரதி வாதங்களுக்கு உட்படுத்தப்பட்டு அது தொடர்பான தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது.

அது தொடர்பாக ஊடகங்க ளுக்கு கருத்து தெரிவிக்கும்போதே சுமந்திரன் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக் கையில் - கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசாவின் இராஜினாமா தொடர்பாக வாக்கெடுப்பு நடத்துவதாக இருந்தது. இது தொடர்பாக பல வாதப்பிரதிவாதங்கள் இருந்தபோதும் 18 உறுப்பினர்கள் கையொப்பமிட்ட ஆவணம் ஒன்று சபைக்கு கையளிக்கப்பட்டது.

மாவை சேனாதிராசா கட்சியின் நன்மை கருதி அவரது நற்பெயருக்கு களங்கம் இல்லாமல் தன்னுடைய இராஜினாமாவை உறுதிப்படுத்தவேண்டும் என்று அதில் அவர்கள் கேட்டிருந்தார்கள். அதற்கு எதிரான கருத்துக்களும் இருந்தன.

இறுதியில் கட்சி ஏகமனதாக ஒரு தீர்மானத்தை எடுத்திருக்கிறது. மாவை சேனாதிராசா கட்சியின் அரசியல் குழுவின் தலைவராக தொடர்ந்து செயற்படுவார்.

கட்சியின் தலைவர் இராஜினாமா செய்தால் இன்னொருவர் நியமிக்கப் படவேண்டும் என்று எமது யாப்பிலும் சொல்லப்பட்டுள்ளது.

அந்தவகையில் எஞ்சிய காலத்துக்கு பதில் தலைவராக கட்சியின் சிரேஷ்ட உபதலைவர் சீ.வீ.கே. சிவஞானம் செயல்படுவார் என்று ஏகமனதாக வாக்கெடுப்பு இல்லாமல் - பிரிவினை இல்லாமல் முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

ஆகவே கட்சித் தலைவர் பதவியை சிவஞானம் வகிப்பார். அரசியல் குழு என்பது குழுவாக எடுக்கப்படும் தீர்மானங்களை மையப்படுத்தி, மத்திய செயற்குழு சந்திக்கமுடியாத தருணங்களில் கூடுவது வழக்கமாக இருக்கிறது. பல முக்கிய விடயங்களை அரசியல் குழுவே எடுத்திருக்கிறது.

எனவே முன்னைய காலத்தில் மாவை சேனாதிராசா கட்சித் தலைமை பொறுப்பை எடுத்தபோது சம்பந்தனை அரசியல் குழுவின் தலைவராக நியமித்திருந்தோம். அதனடிப்படையில்தான் இப்போது மாவை சேனாதிராசா அந்த பதவியை வகிப்பார் என்று தீர்மானம் எடுத்துள்ளோம்.

இதேவேளை, கட்சி தொடர்பாக யாழ்ப்பாணத்தில் தொடரப்பட்ட வழக்கில் இதுவரை கட்டளைகள் ஏதும் வழங்கப்படவில்லை.எனவே அது குறித்து கருத்து தெரிவிப்பதற்கு இல்லை - என்றார். (அ)

# உள்நாட்டு துப்பாக்கியுடன் 22 வயது இளைஞன் கைது

வவுனியா, டிசெ.29

வவுனியா - சிதம்பரபுரம் பிரதேசத்தில் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியுடன் 22 வயது இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டதாக சிதம்பரபுரம் பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை சிதம்பரபுரம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# தேங்காய் எண்ணெயில் மோசடி

கொழும்பு, டிசெ. 29

பயன்படுத்தப்பட்ட தேங்காய் எண்ணெய் சுத்திகரிக்கப்பட்டு சந்தையில் வெளியிடப்படும் தேங்காய் எண்ணெய் மோசடி தொடர்ந்தும் இடம்பெற்று வருவதாக பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

மிளகாய்த்துள் மஞ்சள் உள்ளிட்ட கலப்பட மசாலாப் பொருள்கள் பொது மக்களுக்கு விற்பனை செய்யப்படுவதாகவும் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக சங்கத்தின் பொதுச் செயலாளர் சமீரா முத்துக்குடா தெரிவித்தார்.

பண்டிகைக் காலத்தில் சுகாதாரத் தரங்கள் கடைப்பிடிக்கப்படுவதை உறுதி செய்வதற்காக, பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் டிசெம்பர் முதலாம் திகதி முதல் சோதனை நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

5000 இற்கும் மேற்பட்ட கடைகள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகவும் 450 கடைகள் நுகர்வுக்குப் பொருத்தமற்ற உணவுகளை விற்பனை செய்தமைக்காக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## தமிழ்

இதில் இந்து, கத்தோலிக்க, இஸ்லாம் மதத் தலைவர்கள், சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொது மக்கள் என பலரும் கலந்துகொண்டு கையெழுத்திட்டனர். (அ)

## தமிழரசு ஊடகப்...

அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- பாராளுமன்ற உறுப்பினர்களை உள்ளடக்கிய பாராளுமன்ற குழுப் பேச்சாளராக ஞா.சிறிநேசனை நியமித்து உள்ளமையால் அவர் பாராளுமன்ற விடயங்கள் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிப்பார்.

எனினும் தமிழரசுக் கட்சியின் ஊடக பேச்சாளராக தொடர்ந்து எம். ஏ. சுமந்திரன் செயல்படுவார் - என்றார். (அ)

## யாழில்...

உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது -

குறித்த நபர் நேற்று மதியம் பாண் சாப்பிட்டுக்கொண்டு இருந்தவேளை அவருக்கு மூச்சு விட சிரமம் ஏற்பட்டது. இந்நிலையில் சிகிச்சை கோப்பாய் வைத்தியசாலைக்கு கொண்டு சென்றவேளை அவர் உயிரிழந்தார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். ஆஸ்துமா காரணமாக மரணம் சம்பவித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது. உடற்கூற்று பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (அ)

## முழு அரச...

திரௌபதி முர்மு, குடியரசு துணைத் தலைவர் ஜக்தீப் தன்கர், பிரதமர் நரேந்திர மோடி உள்ளிட்டோர் கலந்து கொண்டிருந்தனர்.

மன்மோகன் சிங்கின் உடல் நேற்று காலை மலர்க ளால் அலங்கரிக்கப்பட்ட வாகனத்தில் டில்லியில் உள்ள அவரது இல்லத்தில் இருந்து காங்கிரஸ் தலைமையகத்துக்கு கொண்டு செல்லப்பட்டது.

காங்கிரஸ் தலைவர்களின் இறுதி மரியாதையை அடுத்து மன்மோகன் சிங்கின் உடலம் மீது போர்த்தப்பட்டிருந்த தேசியக் கொடி அகற்றப்பட்டு, உடல் தகன மேடைக்கு கொண்டு செல்லப்பட்டது. அங்கு, சந்தனக் கட்டைகள் மீது மன்மோகன் சிங்கின் உடல் வைக்கப்பட்டு, சீக்கிய மத முறைப்படி மந்திரங்கள் ஓதப்பட்டு, இறுதிச் சடங்குகள் நடத்தப்பட்டன.

இதன் தொடர்ச்சியாக பகல் ஒரு மணி அளவில் 21 குண்டுகள் முழங்க முழு இராணுவ மரியாதை அளிக்கப்பட்டு, மன்மோகன் சிங்கின் உடல் தகனம் செய்யப்பட்டது. (அ)

## நேபாளம்...

ரணில் விக்கிரமசிங்க தமது பயணத்தின் ஒரு பகுதியாக லும்பினிக்கும் செல்லவுள்ளார்.

இதனையடுத்து ரணில் ஜனவரி முதலாம் திகதி நாடு திரும்பவுள்ளார்.

முன்னதாக ரணில் விக்ரமசிங்க இந்தியாவுக்கான பயணத்தை மேற்கொண்டிருந்தார். இதன்போது, முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங்கின் உடலுக்கும் இறுதி மரியாதையை செலுத்தினார்.(அ)

## சிவமோகன்...

மத்திய குழு உறுப்பினர் சி. சிவமோகன் தெரிவித்தார்.

தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் இருந்து இடைநடுவில் வெளிநடப்பு செய்த அவர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- எப்போதும் எமது கட்சி தீர்மானங்களை எடுக்கும்போது அனைவரையும் சாப்பாட்டுக்குச் செல்லுமாறு தெரிவித்து விட்டு எடுப்பது வழமை. இன்றும் அதே நிலைமை தான் இடம்பெற்றது.

இவ்வாறு தான் தேர்தல் நியமனக் குழுவுக்கும் இடம்பெற்றிருந்தது.

தற்போதைய செயலாளர் இருக்கும் போதுதான் இந்தக் கட்சியில் இவ்வாறான மோசமான செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன.

தலைவரை நீக்கும் அதிகாரம் இந்த மத்திய குழுவில் எவருக்குமே இல்லை. அதனை நான் நேரடியாக மத்திய குழுவுக்கு தெரிவித்து விட்டு கூட்டத்திலிருந்து வெளிநடப்பு செய்திருக்கிறேன்.

என்னுடைய நோக்கம் இந்த கட்சியை சீராக்குவது தான்.

வழக்குகளை பின்வாங்குவதாக சுமந்திரன் வாக்குறுதி வழங்கி இருக்கின்றார். அவரால் சாட்டப்பட்டவர்கள் தான் இந்த வழக்குகளை போட்டார்கள் என்பதற்கு இது ஒரு சாட்சி. ஆகவே அவரும் அந்த வழக்குகளை பின் வாங்கினால் நானும் எனது வழக்குகளை பின் வாங்கி பொதுச் சபை கூட்டத்துக்குச் செல்வதற்கு தயாராக தான் இருக்கிறேன்.

தலைவரை தலைவர் பதவியில் இருந்து நீக்கவே முடியாது. நாங்கள் கேட்டுக் கொண்டது தலைவர் தலைவராகவே இருக்க பதில் தலைவர் கூட்டங்களை நடத்துமாறு தான் கூறியிருந்தோம். ஆனால் அவர்கள் மாறுபட்ட செய்தியை வெளியிடுகிறார்கள்- என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு

# விளக்குமாற்றை காட்டி அரசை எச்சரித்த தேரர்!

கொழும்பு, டிசெ. 29

**சர்வதேச நாணய நிதியத்தின் தேவைக்கேற்பவே தற்போதைய அரசாங்கம் செயற்பட்டுவருகின்றது என்று பத்தரமுல்லே சீல ரத்ன தேரர் குற்றஞ்சாட்டியுள்ளார்.**

நாட்டு மக்கள் எதிர்காலத்தில் விளக்குமாற்றை கையில் எடுக்கும் வகையில் அரசாங்கம் செயற்படக் கூடாது என குறிப்பிட்டு ஊடக சந்திப்புக்கு விளக்குமாற்றையும் தேரர் எடுத்து வந்திருந்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு-

சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளை ஏற்கமாட்டோம் எனக் கூறிவந்த அரசாங்கம் தற்போது சர்வதேச நாணய நிதியத்தின் தேவைக்கேற்பவே செயற்பட்டு வருகின்றது. அவ்வாறு செயற்பட வேண்டாம் என அரசாங்கத்தை வலியுறுத்துகின்றோம்.

தற்போதைய அரசாங்கம் பொய்யுரைத்தே ஆட்சியை பிடித்துள்ளது. தற்போது நீதிமன்ற உத்தரவுகளும் மீறப்படுகின்றன. நீதிமன்ற உத்தரவுக்கமையவே ஊடகவியலாளர் சமுதித்தவுக்கு பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தது. அந்த பாதுகாப்பு தற்போது நீக்கப்பட்டுள்ளது. நீதிமன்ற உத்தரவுக்கமையவா இதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட்டதா அல்லது காட்டுச் சட்டம் பயன்படுத்தப்பட்டதா என்பது பற்றி அரசாங்கம் தெளிவுபடுத்த வேண்டும் - என்றார். (அ)

# மகிந்தவின் பிரதான பாதுகாப்பு அதிகாரி சி.ஐ.டியில் நான்கு மணி நேர வாக்குமூலம்

கொழும்பு, டிசெ. 29

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பிரதான பாதுகாப்பு அதிகாரி மேஜர் நெவில் வன்னியாராச்சி குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் நேற்றுமுன்தினம் 4 மணி நேரம் வாக்குமூலம் வழங்கியுள்ளார்.

குறித்த தரப்பினர் சட்டவிரோதமான முறையில் சொத்துக்களை ஈட்டியமை தொடர்பில் விசாரிப்பதற்காகவே முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பிரதான பாதுகாப்பு அதிகாரி குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் நேற்று முன்தினம் முன்னிலையாகியிருந்தார்.

இதன்படி, அவர் நேற்று முன்தினம் முற்பகல் 9.30 மணியிலிருந்து பிற்பகல் 1.30 மணி வரை வாக்குமூலம் வழங்கியுள்ளார்.

ஏலவே, இரண்டு தடவைகள் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் முன்னிலையாகுமாறு அவருக்கு அறிவிக்கப்பட்டிருந்த நிலையிலும் அவர் அங்கு முன்னிலையாகவில்லை என குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, சட்டவிரோதமான முறையில் சொத்துக்களை ஈட்டிய குற்றச்சாட்டு தொடர்பில் விசாரிப்பதற்காக யோசித ராஜபக்ஷவையும் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் முன்னிலையாகுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, அவரை எதிர்வரும் 3ஆம் திகதி குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் முன்னிலையாகுமாறு அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# கதிரை அல்லது கை சின்னத்தில் சுதந்திரக் கட்சி தேர்தலில் போட்டி!

கொழும்பு, டிசெ. 29

உள்ளூராட்சிமன்ற மற்றும் மாகாண சபைத் தேர்தல்களில் போட்டியிடுவதற்கான கூட்டணி அமைப்பது தொடர்பில் சுதந்திரக் கட்சி தலைமையில் பல்வேறு தரப்பினருடன் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அக்கட்சியின் பொதுச் செயலாளர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அதற்கமைய விரைவில் இக்கூட்டணி குறித்து அறிவிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலொன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் கூறியுள்ளார்.

மேலும் சுதந்திரக் கட்சியை மறுசீரமைப்பதற்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், சுதந்திர கட்சியின் உறுப்பினர்கள் பலருடனும் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் தம்முடன் இணையவுள்ளவர்கள் யார் என்பது குறித்து விரைவில் அறிவிப்பதாகவும் தொகுதி அமைப்பாளர்களுக்கும் இது குறித்து அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

அத்துடன் ஜனவரி 2ஆம் திகதியிலிருந்து கட்சியின் புதிய வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

கடந்த காலங்களில் ஆட்சியமைத்த கட்சி என்ற ரீதியில் சுதந்திரக் கட்சி இனிவரும் தேர்தல்களில் கதிரை அல்லது கைச் சின்னத்தில் போட்டியிடும் என்றும் அவர் குறிப்பிட்டார். (அ)

# சொத்து, பொறுப்பு அறிக்கை சமர்ப்பிக்க அனைத்து எம்.பிக்களுக்கும் காலக்கெடு!

கொழும்பு, டிசெ. 29

அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களும் அடுத்த வருடம் பெப்ரவரி மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் தங்களது சொத்து மற்றும் பொறுப்பு அறிக்கைகளை பாராளுமன்றில் சமர்ப்பிக்க வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. பாராளுமன்றச் செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர இதனைத் தெரிவித்தார்.

புதிய ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் 82 (அ) பிரிவின் கீழ், பாராளுமன்ற உறுப்பினர்கள் பதவியேற்று 03 மாதங்களுக்குள் தங்களது சொத்து மற்றும் பொறுப்பு அறிக்கைகளை சமர்ப்பிக்க வேண்டும் என அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, தேர்தலில் போட்டியிடும் அனைத்து வேட்பாளர்களும் தங்களது கல்வித் தகைமைகளைக் கட்டாயமாக சமர்ப்பிக்க வேண்டும் என்ற வகையில் சட்டம் இயற்ற வேண்டும் என சில தேர்தல் கண்காணிப்பு அமைப்புகள் கூறுகின்றன.

இவ்வாறு இயற்றப்படும் சட்டத்தில் ஒவ்வொரு வேட்பாளரும் தமது சுயவிவரத்தை தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்க கூடிய வகையிலான சரத்தும் உள்ளடக்கப்பட வேண்டும் என பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார். (அ)

# அரச அதிகாரிகளுக்கு விசேட முற்பணம் வழங்குவதற்கு அரசு நடவடிக்கை!

கொழும்பு, டிசெ. 29

அரச அதிகாரிகளுக்கு அடுத்த ஆண்டுக்காக 4,000 ரூபாவுக்கு மேற்படாத விசேட முற்பணத்தை வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் எஸ்.ஆலோக பண்டார இதனைத் தெரிவித்துள்ளார்.

எதிர்கால வேதனத்தில் கழிக்கப்படும் வகையில் இந்த முற்பணத் தொகை வழங்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இதன்படி, இந்த முற்பணம் ஜனவரி மாதம் முதலாம் திகதியிலிருந்து பெப்ரவரி மாதம் 28ஆம் திகதிக்குள் செலுத்தப்பட உள்ளது.

இது தொடர்பான நடவடிக்கைகள் அமைச்சின் செயலாளர்கள், மாகாண பிரதம செயலாளர்கள் மற்றும் திணைக்களத் தலைவர்களினால் மேற்கொள்ளப்படும் எனவும் பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் எஸ். ஆலோக பண்டார தெரிவித்துள்ளார். (அ)

## கொழும்பு வந்தடைந்த இந்தோனேசிய கப்பல்

கொழும்பு, டிசெ. 29

இந்தோனேசிய கடற்படைக்கு சொந்தமான 'க்ரி சுல்தான் ஸ்கந்தர் முடா - 367' என்ற கப்பல் நேற்று சனிக்கிழமை உத்தியோகபூர்வ விஜயமாக கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்தது.

இக்கப்பல் இந்தோனேசிய கடற்படையின் சிக்மா - கோர்வேட் ரகத்தைச் சேர்ந்ததாகும். நேற்று முற்பகல் கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்த இந்த கப்பல் கடற்படை மரபுகளுக்கமைய வரவேற்கப்பட்டது.

120 பணியாட்களைக் கொண்ட இந்தக் கப்பல் 9071 மீற்றர் நீளமுடையதாகும். இதன் கட்டளை அதிகாரியாக கப்டன் அனுகேரா அன்னுறுல்லா செயற்படுகின்றார்.

இக்கப்பல் நாட்டிலிருக்கும் காலத்தில் நாட்டின் முக்கிய இடங்களுக்கு செல்லவுள்ளதோடு, நாளை திங்களன்று நாட்டிலிருந்து புறப்படவுள்ளது. (அ)

## ரின் மீனுக்கு சில்லறை விலை அறிவிப்பு

கொழும்பு, டிசெ. 29

நுகர்வோர் அதிகார சபையினால் ரின் மீன்களுக்கான அதிகபட்ச சில்லறை விலையை நிர்ணயிக்கும் விசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட் டுள்ளது.

இதன்பிரகாரம், 425 கிராம் ரின் சூரை மற்றும் சால்மன் மீன் ஒன்றின் அதிகபட்ச சில்லறை விலை 380 ரூபாவாகவும், 155 கிராம் நிகர எடை கொண்ட கானாங் கெளுத்தியின் அதிகபட்ச சில்லறை விலை 180 ரூபாவாகும்.

மேலும், 425 கிராம் நிகர எடை கொண்ட பலா கானாங்கெளுத்தி சால்மன் மீன் ஒன்றின் அதிகபட்ச சில்ல றை விலை 560 ரூபாவாக இருக்கும் எனவும் குறித்த விலைகள் நேற்றிலிருந்து அமுலுக்கு வரும் எனவும் நுகர்வோர் அதிகார சபை தெரிவித்துள்ளது. (அ)

## நாளாந்தம் 300 மெற்றிக் தொன் அரிசி சதொச மூலம் சந்தைக்கு!

கொழும்பு, டிசெ. 29

சதொச விற்பனை நிலையங்கள் மூலம் நாளாந்தம் 300 மெற்றிக் தொன் அரிசி சந்தைக்கு வெளியிடப்படுவதாக லங்கா சதொச நிறுவனத்தின் தலைவர் கலாநிதி சமித்த பெரேரா தெரிவித்தார்.

அரசாங்கத்தின் கட்டுப்பாட்டு விலையில் அரிசி விற்கப்படும் என அவர் சுட்டிக்காட்டினார்.

உள்ளூர் விவசாயிகளைப் பாதுகாக்கும் அதே வேளையில் அரிசி தட்டுப்பாட்டுக்கு அவசர பதிலளிப்பு நடவடிக்கைஉள்ளிட்ட சவால்களுக்கு முகம் கொடுக்கும் வகையில் சகல நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். (அ)

## 'தூய்மையான இலங்கை' ஜனவரியில் நடைமுறைக்கு!

கொழும்பு, டிசெ. 29

புதிய ஆண்டின் ஜனவரி மாதம் முதலாம் திகதி கடமைகளை ஆரம்பிக்கும் போது அரச பணியாளர்கள் வழங்கும் உறுதிமொழி இம்முறை வேறுபட்டதாக இருக்கும் எனவும் அரசாங்கத்தால் அன்றைய தினம் ஆரம்பிக்கப்படும் 'தூய்மையான இலங்கை' திட்டத்துடன் இணைக்கப்பட்ட உறுதிமொழியாக அமையும் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

முறையான சுகாதார சூழலை உருவாக்குதல், இலஞ்சம் மற்றும் ஊழலை ஒழித்தல், டிஜிட்டல் மயமாக்கல் உள்ளிட்ட புதுமையான திட்டங்களுடன் "தூய்மையான இலங்கை' என்ற கருத்துரு பல வழிகளில் நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்க தலைமையில், ஜனவரி மாதம் முதலாம் திகதி உத்தியோகபூர்வமாக நடைபெறவுள்ளதாக தெரியவருகிறது.

ஜனாதிபதி அலுவலக அதிகாரிகள் பொது சேவை உறுதிமொழியை வழங்கிய போது, இம்முறை "தூய்மையான இலங்கை' திட்டத்தை உரிய முறையில் நடைமுறைப்படுத்துவதற்கான உறுதிமொழியும் உள்ளடக்கப்பட்டதாக ஜனாதிபதி அலுவலகத்தின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மேலும், முதற்கட்டமாக "தூய்மையான இலங்கை' வேலைத்திட்டம் தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும், அதனை மேலும் அர்த்தமுள்ள தாக்குவதற்கும் அனைத்து தரப்பினரின் கருத்துக்களும் பெற்றுக் கொள்ளப்படும் எனவும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 29.12.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.